

டைம் ஆச்சு!
இலவச இணைப்பு
கல்கி
KALKI 20.4.2003 ரூ .6.00
பொங்கி
எழுந்த
பெண்கள்!

# ALOHA

## MENTAL ARITHMETIC

(ABACUS LEARNING OF HIGHER ARITHMETIC)

• AUSTRALIA • CHINA • INDIA • INDONESIA • MALAYSIA • OMAN • PHLIPINES • SINGAPORE • THAILAND




CHALLENGE THE CALCULATOR!

BALANCE THE BRAIN!!



**The latest ALOHA training, for developing the whole brain at the right age - 5 to 13 years.**

Without Calculator, Abacus, Pen and paper, your child can Solve
123 + 456 + 13 - 48 + 534 = ?
12 x 36 - 17 x 15 = ?
6288 + 24 - 13 x 17 = ?
in 5 seconds.




- Only 2 hours per week
- Your child shows growth in academics
- Your child improves concentration
- Computes faster than a computer

*Would you like to become an ALOHA Franchisee?*

Call **KK ACADEMY (P) LTD.,**

32, 1st Main Road, R.A. Puram, Chennai - 600 028.
Phone : 24613262, 24616268 Fax : 52108090
E-mail : kkacademy@vsnl.net Web : www.alohama.com

**For Registration At Chennai :**

| | |
|---|---|
| Adyar | : 9884190450 |
| Anna Nagar (E) | : 9841032238 |
| Anna Nagar (W) | : 9841126275 |
| Avadi | : 9841149527<br>26555489 |
| Adambakkam | : 22457368, |
| Ayanavaram | : 9840225568<br>26444236 |
| Chetpet | : 28202991 |
| Egmore | : 28202989 |
| Gopalapuram | : 9840098216 |
| Mylapore | : 9841044889 |
| Nungambakkam | : 28202988 |
| Perambur | : 9841258244 |
| R.A.Puram | : 24613262 / 6268 |
| T.Nagar | : 9841074220 |
| Thiruvanmiyur | : 56107172 |
| K.K.Nagar | : 9841089001 |
| Kilpauk | : 26443090 |
| Vadapalani | : 9841258244 |
| Valasarawalkam | : 9840438689 |

**Other City :**

| | |
|---|---|
| Coimbatore(0422) | : 2543173 |
| Rajapalayam | : 9842156489 |

**Other States :**

Bangalore (080) :

| | |
|---|---|
| Basavangudi | : 9845124425 |
| Richmond Town | : 9845124425 |
| Rajaji Nagar | : 5449668 |
| Jaya Nagar | : 5320337 |
| Malleswaram | : 5449534 |
| Indira Nagar | : 9845309396 |
| Koramangala | : 5449668 |
| Kammannahalli | : 9845124425 |
| Hyderabad (040) | : 7001354 |

*Centers coming shortly at :* Chennai : Shenoy Nagar, Aminjikarai, Mugappair, Nanganallur, Ashok Nagar, Veppery, Chrompet, Out station : Pondicherry, Kanchepuram, Karaikudi, Trichy, Madurai, Salem, Dharmapuri, Cochin, Trivandrum, Port Blair (Andaman)

# கல்கி

20.4.2003



24-25

## ஆடுகிறார்கள் சீமான்கள்; துணையாக 'கேடி'கள்!

- இது என்ன கலாட்டா?

## டெலிஃபோனில் பேசு; கையிலே காசு!

- இளைஞர்கள் கவனிக்க!



4-5

பாரதிராஜா
சிலாகிக்கும்



## புது...புது...

52-53

**கே** டி.வி.யில் புத்தம் புதிய சூப்பர் ஹிட் படங்கள் விரைவில் இடம் பெறும் என்றனர். அலைபாயுதே, முதல்வன், கண்டு கொண்டேன் கண்டுகொண்டேன், பாலா என்று தொடர்ந்தது பட்டியல். முதலிரண்டும் புத்தம் புதியவையா?
இறுதி இரண்டும் சூப்பர் ஹிட்டா? நல்ல கதை.





**இ**ஃது இப்படியிருக்க தமிழின் முதல் வண்ணப்படத்தை வேறொரு சானலில் ஒளிபரப்பினார்கள் (அது பொதிகை என்பதை யூகித்திருப்பீர்களே). அலிபாபாவும் நாற்பது திருடர்களும்! நடிகை பானுமதி மிகவும் தைரியமான நடிகை என்பது தெரியும். படத்

# புதுசாம்...

தின் இயக்குனரும் மிகவும் தைரியசாலியாகத்தான் இருக்க வேண்டும். குறைந்தபட்ச நடன அசைவுகளைக் கூட வெளிப்படுத்தத் தயாராக இல்லாத இந்த நடிகைக்கு பிரபல நடனமணி மார்ஜியானா பாத்திரத்தைக் கொடுத்திருக்கிறாரே. (அதேசமயம் இனிமைக் குரலில் பாடல்களில் அதை ஈடுகட்டியிருந்தார் பானுமதி என்பதும் குறிப்பிடத்தக்கது).

**வா**ஜ்பாயை செயலிழந்த பிரதமர் என்று வர்ணித்து இந்தியர்களின் எதிர்ப்பை வாங்கிக் கொண்டாலும் 'டைம்' இதழின் செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அதன் ஆசிரியரைப் பேட்டி கண்டார்கள் பி.பி.ஸி.யில். "இராக் நிர்மூலமாக்கப்பட்டால் அதன் புனரமைப்புப் பணிகளில் ஐ.நா.வுக்கு நிச்சயம் ஓரிடம் உண்டு" என்றார் அவர். அட, ஐ.நா.வின் ஒரே நோக்கம் விளங்கிவிட்டது.

**பு**ஷ்பவனம் குப்புசாமி 'சன்'னில் பழமொழி விளக்கங்களைக் கூறினார். கூட உரையாடியவர் அவரது மனைவி அனிதா. 'கல்லைக் கண்டால் நாயைக் காணோம். நாயைக் கண்டால் கல்லைக் காணோம்' என்பதற்கு விளக்கமாக நாயின் சிலை ஒன்றை அற்புதமாக வடித்த சிற்பியைக் குறிப்பிட்டார் (நிஜ நாய் போலவே காணப்பட்டு அது கல் என்பதே மறந்து போனதாம்). அப்போது கலைஞர்கள் பற்றிக் குறிப்பிட்டபோது

## சூப்பர் ஹிட்டாம்!

'கலைஞர்கள் செய்வது சரியாயில்லேன்னா கூட நல்லாயிருக்குன்னு சொல்லணும். அப்பதான் தப்பைத் திருத்திக்கிட்டு இன்னும் நல்லா செய்வாங்க' என்றார். நிகழ்ச்சி நல்லாயிருக்கு!

**'சி**ன்ன பாப்பா பெரிய பாப்பா' தொடரில் ஸ்ரீப்ரியா இடத்துக்கு கல்பனா வந்து நாளாச்சு. என்றாலும் 'பொன் வைத்த இடத்தில் பூ'தான். தங்களுடையது ஸ்லாப்ஸ்டிக் காமெடி என்பதை முதல் எபிஸோடிலிருந்தே அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்கள். ஓக்கே, அற்ப விஷயங்களுக்கெல்லாம் சிரித்துவிட்டுப் போவதில் தப்பில்லைதான். ஆனால் நடிக நடிகைகள் ஆளாளுக்கு அடிக்கடித் காரித் துப்புவது அருவருப்பாக இருக்கிறது. இதெல்லாம் நகைச்சுவை என்று எண்ணி நகைச்சு வைக்க வேண்டுமா? தூ.

- ஆதர்ஷ்


**கல்கி**

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

தென்றல் சுகம்!

## வட்டமேஜை

எஸ்.மைக்கேல், சென்னை

கோடைகாலத்தில் நாணலிலிருந்து வெளிப்படும் தென்றலின் சுகமான வருடல் போல் இருந்தன நான்கு கவிதைகளும்!

# டெலி:போனில்

"ஹலோ, நான் மைக்கேல் நைட் பேசறேன்" - கரகரப்பான ஆண் குரல்.

"நல்லது. நான் உங்களுக்கு உதவக் காத்திருக்கிறேன்" மறுமுனையில் கவிதை மாதிரியான பெண் குரல்.

"எனது விசா மாஸ்டர் கார்டின் நடப்பு கிரெடிட் லிமிட் என்னவென்று சொல்ல முடியுமா?"

"உங்களது கிரடிட் கார்ட் எண்களைக் குறிப்பிடுங்கள் ப்ளீஸ்."

"00974707.."

"சில வினாடிகள் காத்திருங்கள்..."

"நிச்சயமாக."

"எண்பத்தைந்து சதவிகித கிரெடிட் லிமிட்டை ஏற்கெனவே கடந்துவிட்டீர்கள்."

"தாங்க்யூ மேடம்."

"வெல்கம் சார்."

- மைக்கேல் நைட் தமது சர்வதேச கடன் அட்டையின் நடப்புக் கடன் வரையறை நிலவரம் குறித்து கேட்டறிந்தது அமெரிக்காவின் கலிஃபோர்னியா நகரிலிருந்து. அவருக்குத் துல்லியமான விவரம் தந்து சாந்தி பேசியதோ சென்னை, மயிலாப்பூரிலிருந்து. என்னையா கதை விடுகிறீர் என்கிறீர்களா? இது கதையல்ல, கால் சென்டர் நிஜம்.

மெடிக்கல் டிரான்ஸ்கிரிப்ஷன், டெலி மார்கெட்டிங், ஹார்டுவேர் நெட் ஒர்க்கிங் வரிசையில், கால் சென்டர்கள் இப்போது வேலையை அள்ளித் தரும் அட்சய பாத்திரங்கள்.

தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளும் வாடிக்கையாளரின் சந்தேகங்களைத் தீர்த்து வைத்து, அவர்களுக்கு வழிகாட்டுவது தான் இந்த கால்சென்டர்களின் வேலை. வங்கிச் சேவை, நுகர்வோர் தயாரிப்புகளுக்கான வாடிக்கைகள் சேவை, சாஃப்ட்டுவேர் கிளையண்ட் சர்விஸ் சேவை, என்று விரிந்து செல்லும் பன்னாட்டு வாடிக்கையாளர்களின் தொலைபேசி அழைப்புகள், இந்திய மெட்ரோ நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள கால் சென்டர்களை நோக்கி திசை திருப்பி விடப்படுகின்றன.

காரணம், அமெரிக்காவில் கால் சென்டர் எக்ஸிகூடிவாகப் பணியில் அமர்த்தப்படும் ஒருவருக்கு, மாத ஊதியமாக ஐம்பதாயிரம் தர வேண்டியிருந்தால், இந்தியாவில் ஐயாயிரம் கொடுத்தால் போதுமானது. தகவல் தொடர்புகளுக்கு நெட் போன், வாய்ஸ் மெயில், ஈ மெயில் என்று ஏகப்பட்ட வசதிகள். முக்கியமாக இந்தியப் பட்டதாரிகள் தரமான ஆங்கிலம் பேசுகிறவர்கள். அப்புறமென்ன? குறைந்த ஊதியத்தில்- மனித வளம் சுலபமாகக் கிடைப்ப



• சாந்தி

• ஆனி தாமஸ்



• கால் சென்டர் பயிற்சி

தால் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது கால் சென்டர்களை இந்தியாவில் போட்டி போட்டுக் கொண்டு நிறுவி வருகின்றன.

சாந்தியும் கூட ஒரு கால் சென்டர் எக்ஸிகியூட்டிவ் தான். மோடி நிறுவனத்தால் நடத்தப்படும் கால் சென்டரில் வேலை செய்யும் இவருக்கு, கால் சென்டரில் பணியாற்றுவதற்கான பயிற்சியைக் கொடுத்து, கையோடு வேலையையும்

# பேசு; கையிலே காசு!

வாங்கிக் கொடுத்திருக்கிறது சென்னை திநகரில் செயல்பட்டுவரும் வைரவிழா கண்ட ஸ்டெனோ கிராஃபர்ஸ் கில்ட்.

"கால் சென்டர்களில் பணிபுரிய அமெரிக்க ஆங்கில உச்சரிப்பு முக்கியமானது. தவிர அமெரிக்கக் கலாசாரம், அங்குள்ள நடப்பு வாழ்க்கை முறையையும் தெரிந்து கொள்ள வேண்டும். இதெல்லாமே ஸ்டெனோ கிராஃபர்ஸ் கில்ட் தரும் கால் சென்டர் பயிற்சியில் கிடைக்கிறது" என்கிறார், இங்கே பயிற்சி முடித்து, மையத்தின் மூலமே கால் சென்டர் பிரதிநிதியாகப் பணியாற்றி வரும் மற்றொரு யுவதியான ஆனி தாமஸ்.




• எஸ்.வி.ராமஸ்வாமி



• நித்யாநந்தன்

கால் சென்டர் பயிற்சிகளைப் போலவே இந்த அமைப்பு வழங்கி வரும் உடனடி வேலை வாய்ப்புப் பயிற்சிகளில் முக்கியமானது நிர்வாகச் செயலர் பயிற்சி. "ஒரு லிமிடெட் நிறுவனத்துக்கு கம்பெனி செக்ரட்டரி ஒருவர் கட்டாயம் நியமிக்கப்பட வேண்டியது விதி என்றால், நிர்வாகச் செயலர் இல்லாமல் இயக்குனர் குழு ஒரு அடி கூட எடுத்துவைக்க முடியாது. இன்று தமிழகத்தில் தரமான நிர்வாகச் செயலர் பயிற்சி அளித்துவரும் ஒரே நிறுவனம், ஸ்டெனோகிராஃபர்ஸ் கில்ட் என்கிறார் அதன் தற்போதைய தலைவரான எஸ்.வி. ராமஸ்வாமி.

"தொலைபேசியில் பேசும் முறை, பேசும் அதிகாரியின் வார்த்தைகளைக் கூர்ந்து கவனிக்கும் முறை, வாடிக்கையாளரின் அணுகுமுறை, சுருக்கெழுத்து, வரவு செலவு திட்டமிடுதல், உள்ளிட்ட முழுமையான பயிற்சியோடு, எம்.எஸ். ஆஃபீஸ், டாலி உள்ளிட்ட சாப்டுவேர்களையும் கற்றுத் தந்து விடுகிறார்கள்" என்கிறர் இங்கே பயிற்சி பெற்று எச்.டி.எஃப்.சி. வங்கியில் நேர்முகச் செயலாள



• கணிப்பொறி வகுப்பு

# அழகான பொறுப்பு!



'தில்', 'தூள்' மசாலா படங்களைக் கொடுத்த கையோடு, தமிழ்ப் புத்தாண்டுக்கு 'சாமி' என்றொரு தரமான படத்தைத் தருகிறார் விக்ரம். கடந்த ஆண்டு 'தமிழ்' என்றொரு யதார்த்தமான படத்தை இயக்கிப் பாராட்டுகளை அள்ளிக் கொண்ட ஹரிதான் 'சாமி' படத்தின் இயக்குனர். "சாமி நல்லவர்களுக்கு நல்லது பண்ணும். கெட்டவர்களுக்குக் கெட்டது பண்ணும். அப்படித்தான் அசிஸ்டெண்ட் கமிஷனர் ஆருச்சாமியும். திருநெல்வேலிக்குப் பணி மாற்றம் செய்யப்படும் இந்த அதிகாரி, அசகாய சூரத்தனம் எதுவும் செய்யாமல் சமூக விரோத சக்திகளை எப்படி வழிக்குக் கொண்டு வருகிறார் என்பதை யதார்த்தமாகச் சொல்லியிருக்கிறேன்." என்கிறார் ஹரி.

படத்திற்கென்று ஒரு இடத்தில் கூட செட் போடாமல், சம்பவங்கள் நடக்கும் இடங்களிலேயே நேரடியாக படத்தை எடுத்ததால் மண் வாசம் கமகமக்கிறதாம். படத்தில் காக்கிச் சட்டையை யாராவது காதலிக்கிறார்களா? எஸ்! த்ரிஷாவுக்கு அந்த அழகான பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

- ஜெ

ராகப் பணி புரிந்துவரும் நித்யாநந்தன்.

ஆறு மாதம் அளிக்கப்படும் இந்த பயிற்சிக்கு மூவாயிரம் ரூபாய் கட்டணம் என்றால் கால் சென்டர் பயிற்சிக்கு ரூபாய் இரண்டாயிரம்தானாம். இந்தப் பயிற்சிகள்தான் என்றில்லை, ஹார்டுவேர் நெட் ஒர்க்கிங் உட்பட இங்கே வழங்கப்படும் அனைத்து கம்ப்யூட்டர் பயிற்சிகளுக்கும் அதிகபட்சமாய் இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் கட்டணம் கிடையாது. அதையும் செலுத்த முடியாத நிலையில் உள்ள ஏழை மாணவர்களுக்கு, இலவசமாகவே பயிற்சி அளிக்கிறோம் என்கிறார்கள். ஏழை மாணவர்கள் தவிர ஊனமுற்றோர், ஆதரவற்றோர், விதவைகள் ஆகியோருக்கும் இலவசமாகப் பயிற்சி அளிக்கிறார்களாம்.

இராஜாஜி முதல்வராக இருந்தபோது, இடம் ஒதுக்கித் தந்து, ஒரு சிற்றுக் கொட்டகையில் துவக்கி வைத்த இந்த அமைப்பு, இன்று மூன்று மாடிக் கட்டடமாக வளர்ந்திருக்கிறது! "தன்னலமற்ற சமூக சேவை என்ற குறிக்கோளுடன் இலாப நோக்கமில்லாமல், மாணவர்களிடம் வசூலிக்கப்படும் மிகக் குறைந்த பயிற்சி கட்டணம் சமூக நலனில் அக்கறை உள்ளவர்கள் அளிக்கும் நன்கொடைகள் இவற்றின் மூலம்தான் பயிற்சி மையம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இங்கே உள்ள நூற்றுக்கு அதிகமான நவீன கம்ப்யூட்டர்கள் அனைத்தும் நன்கொடைகளாக வழங்கப்பட்டவைதான்" என்கிறார் சங்கத்தின் செயலாளர் ரமேஷ்.

இதுவரை ஒரு லட்சத்திற்கும் அதிகமான சுருக்கெழுத்தாளர்களையும், இருபதாயிரத்திற்கும் அதிகமான நேர்முகச் செயலாளர்களையும், கணிப்பொறி வல்லுனர்களையும் உருவாக்கியிருக்கும் இந்த சங்கத்திற்கு நிறுவனங்களே நேரடியாக வருகை தந்து, தகுதியானவர்களை தேர்ந்தெடுத்து, பணியில் அமர்த்திக் கொள்வது பாரம்பரியமான தனித் தன்மை.

சென்னை தியாகராய நகர் பஸ் நிலையத்தை ஒட்டி மாம்பலம் ரயில் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள ஸ்டெனோகிராஃபர்ஸ் கில்ட், அதிவேக சுருக்கெழுத்து பயிற்சியையும் ஊக்குவித்து வருகிறது. இண்டர்நெட் மற்றும் சிடி மூலம் சுருக்கெழுத்து கற்றுத் தரும் பணியையும் செய்து வரும் இச்சங்கத்தில் பயில விரும்பும் வெளியூர் மாணவர்களுக்கென்றே ஹாஸ்டல் வசதியையும் உருவாக்கியிருக்கிறார்கள்.

- ஜெய்

# நினைவுக் கனவுகளை நிஜமாக்கும் கடன் திட்டங்கள்

**வித்யா வாணி**
உள்நாட்டில், வெளிநாட்டில் மேற்படிப்புக்கு.

**ஸ்வயம் கிருஹா**
சொந்த வீடு இன்றே வாங்க. வாடகை வீட்டுக்கு இனி டாட்டா.

**ஸி.யூ.பி. சுலப்**
ஃப்ரிட்ஜ், கலர் டிவி, வாஷிங் மெஷின் போன்ற வீட்டு உபயோகப்பொருட்கள் வாங்க.

**யோக வாகனா**
சொந்தக் கார் வாங்க. பெருமையா, பவனி வர.

**ஈஸி ரைடு**
2 சக்கர வாகனம் வாங்க. ஜோரா சவாரி செய்ய.

**தரணி**
வர்த்தகம் / தொழில் வசதிகள் பெருக்கிட

MARCHING TOWARDS CENTENARY
1904 CUB 2004
TRADITIONAL BANKING - ENDURING RELATIONSHIP

## சிட்டி யூனியன் பாங்க் லிட்.,

பதிவு அலுவலகம் : கும்பகோணம் - 612 001.
(அந்நியச் செலாவணி அங்கீகாரம் பெற்ற வங்கி)
Tel : 0435-2432322    Fax : 0435-2431746
**E-mail : cubco_kmb@sancharnet.in**
**Website : http://www.cityunionbank.net**

*உங்கள் வளர்ச்சிக்கு வழிகாட்டும் வங்கி !*

ஜெயலலிதா காலை பதினொரு மணிக்குச் சட்டமன்றத்தில் செய்த அறிவிப்பு, மூன்று கி.மீ தள்ளியிருந்த ராணி மேரி கல்லூரி மாணவிகளிடையே, அடுத்த ஒரு மணி நேரத்தில் மிகப் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்திவிட்டது. "உடனடியாக என்ன செய்வது?" என்று கூடிப் பேசக்கூட நேரமில்லாத நிலையில் சாலை மறியல் நடத்த வெளியே வந்துவிட்டார்கள் மாணவிகள். மதிய உணவுக்கு போயஸ் கார்டனுக்குச் செல்ல, அண்ணா சாலை மாற்று வழியில் முதல்வர் செல்ல வேண்டியதாகிவிட்டது!

"ராணி மேரி கல்லூரி வளாகத்தில் இருப்பவை வெறும் கட்டடங்கள் மட்டும் தான் என்று யாராவது நினைப்பார்களேயானால் அவர்களை எண்ணிப் பரிதாபப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. இன்று சமுதாயத்தில் பெண்கள் ஓர் உயர்ந்த நிலைக்கு வர முடிகிறதென்றால், அதற்கு கால்கோள் நாட்டப்பட்ட இடம்தான் இந்த இடம்.." என்கிறார் கல்லூரியின் பழைய மாணவியும் வழக்கறிஞருமான சுதா ராமலிங்கம்.

# பொங்கி எழுந்த பெண்கள்!



• ராணி மேரி கல்லூரி

சென்னைக் கல்லூரிகளின் சமீப கால வரலாற்றில், தங்கள் பிரச்னையில் மாணவிகள் குமுறும் எரிமலையாய் எதிர்ப்பைக் காட்டிய இச்சம்பவம் வரலாற்றுச் சிறப்புப் பெற்றுவிட்டது. அரசு அதிகாரிகள், போலீஸ் ஆகியோரது கெடுபிடிகள், மிரட்டல்கள் போன்றவற்றையும் மீறி மாணவிகளின் போராட்டம் தொடர்கிறது. இந்தப் பிரச்னை இப்போது, மக்களையும் உள்ளடக்கிய பொதுப் பிரச்னையாகிவிட்டது.

"வெறும் பழைய கட்டடங்கள்தான்" என்கிறார் முதல்வர். இங்கு கட்டடங்கள் மட்டுமா இருக்கு? இந்தச் சூழலைப் பாருங்கள். குளுமையான அமைதியான சூழல், தென்றலான கடற்காற்று, இதைவிட படிப்பதற்கு நல்ல இடம் வேறு எங்கு அமைய முடியும்? மாநிலக் கல்லூரியில் மதிய நேரத்தை எங்களுக்கு ஒதுக்கித் தருகிறேன் என்கிறார்கள். மாலை ஆறு மணிக்கு கல்லூரி முடியும் நிலையில் நீண்ட தூரங்களிலிருந்து வரும் மாணவிகளின் நிலை







என்னாவது? மேலும் இப்போது இங்கிருக்கும் இதே வசதிகளை அவர்களால் கொடுக்க முடியுமா? பெரும்பாலும் ஆண்கள் படிக்கும் கல்லூரி மாநிலக் கல்லூரி. பல பெற்றோர்கள் தங்கள் பெண்களை அங்கு அனுப்பத் தயங்கக் கூடும். எங்கள் கல்லூரியில் பார்வையற்ற மாணவிகளும், உடல் ஊனமுற்ற மாணவிகளும் படிக்கிறார்கள். இப்படி அதிரடியான இடமாற்றம், அவர்களுக்கு மிகுந்த சிரமங்களை உண்டாக்கக் கூடும்'' என்கிறார் பட்ட மேற்படிப்பு மாணவியான கேதரின்.

கல்லூரியின் முன்னாள் முதல்வர் திருமதி சண்முகசுந்தரம் கண்ணீர் விடாத குறையாகப் பேசுகிறார். ''பொக்கிஷமான இந்தக் கட்டடங்களைப் பாதுகாக்க எவ்வளவு நிதியுதவியும் செய்யத் தயார். இங்கு லட்சக்கணக்கான செலவில் உண்டாக்கப்பட்டிருக்கும் வசதிகள் வீணடிக்கப்படும் என்று பயமாக இருக்கிறது'' என்கிறார்.

102 வயதான ஆலிவ்பால் முன்னாள் மாணவி. 1920களில் தாம் படிக்கும் போது மயிலும், மானும் வளாகத்தில் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக் கொண்டிருந்ததை நெகிழும் வண்ணம் சொல்கிறார்.

மாணவிகளும், பேராசிரியைகளும், வளாகத்தில் எதிர்ப்புக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தபோது, விடுமுறையின்போதும் நீதிமன்றத்தின் கதவைத் தட்டி, மாணவிகளை 'இடி' பயத்திலிருந்து மீட்டவர், கல்லூரி ஆசிரியர் சங்கச் செயலாளரான கணேசன். ''இங்கே தலைமைச் செயலகம் வந்தால் மரங்கள் வெட்டப்படும். இந்தப் பகுதியின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும். பாதுகாப்பு கெடுபிடிகள் காரணமாக எளிதாக இந்தப்




• சுதா ராமலிங்கம்



• திருமதி சண்முக சுந்தரம்



• ஆலிவ் பால்



• 'De la hey' • கல்லூரி ஸ்தாபகர் சிலை



• கணேசன்

பகுதியில் மக்கள் நடமாட முடியாது. சென்னையிலேயே பல காலி இடங்கள் இருக்கின்றன. அவற்றில் ஏதாவது ஒன்றை இதற்காக எடுத்துக் கொள்ளலாம். நாங்கள் இறுதிவரை இந்த விவகாரத்தில் போராடுவோம்" என்கிறார் அவர்.

ராணி மேரி கல்லூரியை 1917ல் துவங்கியவர் 'De la hey' என்ற அம்மையார். அந்த அம்மையாரின் சகோதரர் தேனாம்பேட்டையில் (டி.எம்.எஸ். வளாகம்) 'இளவரசர் கல்லூரி' என்று நடத்தி வந்தார். அவர் மர்மமான முறையில் கொல்லப்பட்டார். சகோதரர் விட்டுச் சென்ற கல்விப் பணியைத் தொடரும் எண்ணத்தில் அம்மையார், கல்லூரி ஒன்றைத் துவங்கும் முயற்சியில் இறங்கினார். பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்ட கால கட்டம் அது. ஆண்களும், பெண்களும் இணைந்து படிக்கும் கல்லூரி என்றால், பெண்கள் அக் கல்லூரியில் சேரத் தயங்குவார்கள் என்று உணர்ந்து, தாம் ஆரம்பித்த கல்லூரியைப் பிரத்யேகமாகப் பெண்களுக்கான கல்லூரியாக்க முடிவு செய்தார். முப்பத்து ஏழு மாணவிகளுடன் கல்லூரி துவங்கியது. முதலில் சென்னை பெண்கள் கல்லூரி என்றுதான் பெயர் வைக்கப்பட்டது. ஆனால் அந்தச் சமயத்தில் ஐந்தாம் ஜார்ஜ் அரசர் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டார். அவரது மனைவி மேரியின் நினைவாக பின்னர் குவீன் மேரிஸ் கல்லூரி என்று பெயர் சூட்டப்பட்டது.

கல்லூரிக்காக முதலில் வாங்கப்பட்ட கட்டடம் 'கேப்பர் ஹவுஸ்' என்னும் கட்டடமாகும். 1800ம் ஆண்டு வாக்கில் கட்டப்பட்டது. ஆங்கிலேய ராணுவத்தில் கர்னலாகப் பணிபுரிந்த பிரான்ஸிஸ் கேப்பர் என்பவர் வாழ்ந்த இடம் இது. கடற்கரைச் சாலையில் முதலில் அமைந்த பங்களாவும் இதுதான். அவரது மறைவிற்குப் பிறகு இந்தக் கட்டடம் ஹோட்டலாக மாற்றப்பட்டது. ஆனால் இது வர்த்தக ரீதியில் வெற்றி பெறவில்லை.

இந்த நிலையில்தான் hey அம்மையார் கல்லூரியைத் துவங்க கேப்பர் ஹவுஸ் கட்டடத்தை வாங்கினார். அதற்கு அப்போது மிகவும் உதவியாக இருந்தவர் அன்றைய கவர்னர் பெண்ட்லாந்து. பின்னாட்களில் இவரது பெயரிலும் ஒரு கட்டடம் கல்லூரி வளாகத்தில் கட்டப்பட்டது.

கேப்பர் ஹவுஸை ஒட்டினாற் போல நீதிபதிகள் சுப்பிரமணிய அய்யர், சங்கரன் ஆகியோரது பங்களாக்களும் இருந்தன. பெண்களுக்கான முன்னேற்றத்தில் hey அம்மையாருக்கு இருந்த அர்ப்பணிப்பு உணர்வைப் பார்த்து, தங்களது பங்களாக்களைக் கல்லூரி நடத்தக் கொடுத்து விட்டார்கள் அந்தப் பெரியோர்கள். 1936 வரை கல்லூரி முதல்வராக இருந்த hey அம்மையார், மேலும் பல கட்டடங்களைக் கட்டினார். ஸ்டோன் ஹவுஸ், ஜெய்ப்பூர் ஹவுஸ் என்ற பெயருடன் இன்றும் அவை இருக்கின்றன. ஆனால் முதன் முதலாக கல்லூரி துவங்கப்பட்ட கேப்பர் ஹவுஸை பாழடைந்து போன காரணத்தால் சமீபத்தில்தான் இடித்து விட்டார்கள்.

முப்பது ஏக்கர் பரப்பில் பசுமை சூழ அமைந்துள்ள ராணி மேரி கல்லூரி வளாகம், தமிழகத்தில் பெண்கள் கல்வி, மகளிர் விழிப்புணர்வு வரலாற்றின் சின்னம். இதை ஒரு பெண் முதல்வரே உணரவில்லையே என்பதுதான் போராட்டத்தில் உணர்ச்சி மிகு எதிர்ப்புக் குரலாக எழுப்பப்படுகிறது.

"கேப்பர் ஹவுஸை இடித்ததற்குக் கூட பராமரிப்பு இல்லாததுதான் காரணம்" என்று நம்மிடம் சொன்னார் அறிவியல் துறை பேராசிரியை ஒருவர்.

"வருடா வருடம் மார்ச் மூன்றாவது வாரத்தில், காண்ட்ராக்ட் விடுவார்கள். அந்த வருடத்தில் பொதுப்பணித்துறை,

ஒதுக்கிய பணத்தைச் சுருட்டிக் கொண்டு போகும் விதத்தில் அள்ளித் தெளித்த அவசரக் கோலமாகப் பணிகளை மேற்கொள்வார்கள். அப்போது எங்களுக்குப் பிராக்டிகல் பரீட்சை நடந்து கொண்டிருக்கும். ஒயரிங்கை மாற்றுகிறோம் என்று மின்சாரத்தை நிறுத்தி விடுவார்கள். இப்படித்தான் பழைய உறுதியான காப்பர் ஒயர், ஸ்விட்சுகள் ஆகியவற்றை எடுத்துவிட்டு எளிதில் பழுதாகக்கூடிய மின் சாதனங்களைப் போட்டு விட்டுச் சென்று விட்டார்கள். ஸ்பார்ட்டெக் ஓடுகள் போடுவதாகச் சொல்லி உறுதியான கடப்பா கற்பாளங்களை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பல முறை எடுத்துச் சொல்லியும் எந்த நடவடிக்கையும் கிடையாது.

முதல்வரின் சட்டமன்ற அறிவிப்புக்குப் பிறகு நடந்த மாணவிகளின் உள்ளிருப்புப் போராட்டம் உணர்ச்சி மயமானது. ஒரு பக்கம் ஹாஸ்டலையும், சமையலறையையும் மூடி, மாணவிகளைப்




பாடாய்ப்படுத்தியது நிர்வாகம். மறு பக்கம் மாணவிகளின் உறுதியைக் குலைக்கும் விதத்தில் போலீஸை முடுக்கிவிட்டது அரசு. சூரிதார் போட்டுக் கொண்டு மாணவிகள் போல கல்லூரி வளாகத்தில் சுற்றிய பெண் போலீஸார் "நமக்குத்தான் வேற இடம் கொடுக்கறாங்களே... கவர்மெண்டை எதிர்த்து ஒன்னும் பண்ண முடியாது" என்றெல்லாம் பேசி மாணவிகளை மாற்ற நினைத்தார்கள். அதில் ஒரு பெண் போலீஸ் அடையாளம் காணப்பட்டு மாணவிகளிடம் வாங்கிக் கட்டிக் கொண்டார்.

ஆளுங் கட்சி சார்புள்ள தொலைக்காட்சியினர், சில பெண்களின் பெற்றோரிடம் போய் "வலுக்கட்டாயமாக எங்கள் மகளை உள்ளே வைத்திருக்கிறார்கள் என்று பேட்டி கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்கள். பெற்றோர்கள் "அட போப்பா" என்று வெட்டி விட்டார்கள்.

"ஜெயில்ல போட்டால் பரீட்சைகூட எழுத முடியாமல் போய்விடும்" என்று கடைசி ஆயுதம் பிரயோகிக்கப் பார்த்தது அதிகார வர்க்கம். "அதற்கும் தயார்" என்று மாணவிகள் அசாத்திய உறுதி காட்டவே அடக்க நினைத்தவர்கள் அசந்து போனார்கள். "எதிர்க்கட்சியினர்தான் இப் போராட்டத்தைத் தூண்டுகிறார்கள்" என்ற வழக்கமான வதந்தியும் கிளப்பிவிடப் பட்டது. போராட்டத்தின் போது தம்மைப் பார்க்க வந்த மாணவியரிடம் "உங்கள் போராட்டத்தை நீங்களே நடத்துங்கள்" என்று கலைஞர் சொல்லி அனுப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது.

'அரசியல் தூண்டுதல் எதுவுமின்றி, இயல்பாய்க் கிளம்பிய உணர்ச்சிகரமான போராட்டம் இது..' என்பது செய்திகளின் அடிப்படையில் தெரிகிறது. இந் நிலையில் அனுதாபம் தெரிவிக்கச் சென்ற எதிர்க்கட்சியினர் நடத்தப்பட்ட விதமும் ஸ்டாலின் கைதாகி கடலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதும் ஆட்சியில் உள்ளோரின் பிடிவாதத்தையும் யதேச்சாதிகாரப் போக்கையும்தான் உணர்த்துகிறது.

**ராணி மேரி கல்லூரி கட்டடத்தைக் காக்க விரும்பும் இன்னாள், முன்னாள் மாணவிகள் kalkionline.com கிளிக் செய்து தங்கள் கருத்தைப் பதிவு செய்யலாம்...**

முதல்வர் எந்தக் காரியத்தில் இறங்கினாலும், அதற்குப் பின்புலமாகப்

# மதுரைக்கார விவேக்கு!

பட்டிக்காட்டான் சொக்காவும், கையில் வீச்சரிவாளுமாக நடிகர் விவேக்கைப் பார்க்க, அதிர்ச்சியாகத்தானிருந்தது. மிரிண்டா விளம்பரமாம்! ''உங்களை எப்படிப் பிடிச்சாங்க?'' என்று விவேக்கைக் கேட்டால், ''அது ஒரு பெரிய கதை'' என்றார்.



''நான் ஐஸ்வர்யா ராயுமில்ல. சுஷ்மிதாசென்னுமில்ல. இருந்தாலும் தமிழ் மக்களிடம் அதிக ஈர்ப்புள்ள நடிகரா நான் இருக்கற விஷயம் இன்டர்நெட் தகவல்படி கிடைச்சது. அந்த அடிப்படையில் இவங்களும் (பெப்ஸி) இவங்களுக்குப் போட்டியா இருக்கிற இன்னொரு நிறுவனமும் விளம்பரப் படத்துல நடிக்க கூப்புட்டாங்க. எனக்கு இவங்க அப்ரோச் பிடிச்சது. சரின்னு இறங்கிட்டேன்'' என்கிறார். ''மதுரைக்கார விவேக்கு, உன்னாலதான் ஆயிபோச்சு தவாக்கு'' என்று பாடல் வேறு.

''நீங்க வர்ற விளம்பரம் போட்டி நிறுவன விளம்பரத்தைக் கிண்டல் பண்ற மாதிரி இருக்குதே'' என்றால், ''ஆளை விடுங்க சாமி'' என்கிறார்.

- அப்பு

பேசப்படுவது வாஸ்து. தலைமைச் செயலக மாற்ற விவகாரத்திலும், அந்த விஷயம் பலமாக அடிபடுகிறது. 'இட நெருக்கடி' அதனாலேயே மாற்றம் என்று சொன்னாலும் ''இப்போது இருக்கும் இடத்திலேயே இருந்து அடுத்த சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்க வேண்டாம்'' என்றும், ''தெற்கு பார்த்த அலுவலக வளாகத்தில் அமர்ந்து ஆட்சி புரிந்தால்தான் தொடர்ந்து பதவியைத் தக்க வைத்துக் கொள்ள முடியும்'' என்றும் ஆலோசனையாம். அதன் காரணமாகத்தான், தெற்குப் பக்கம் வாயில் வைக்கும் வகையில் சாலை வசதியுள்ள ராணி மேரி கல்லூரி தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் பலமான வதந்திகள்.


**பா**ரம்பரிய சிறப்பு மிக்க கட்டடங்களை அடையாளம் காண என்ன அளவுகோல்? சென்னை நகரின் புராதானப் பெருமைகளை நமக்கு அறிமுகப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள எஸ். முத்தையா சொல்கிறார்: ''கட்டிய காலத்தின் தொன்மை, வேலைப்பாடுள்ள அமைப்பு ஆகியவற்றைக் கொண்டு ஒரு கட்டடத்தின் பாரம்பரியப் பெருமையைத் தீர்மானிக்கலாம். உதாரணமாக, நமது நாட்டில் பல இடங்களில் பாரம்பரிய அடிப்படையில் சமாதிகளைப் பராமரித்து வருகிறோம். சில இடங்களில் ஸ்தூபிகளைப் பராமரித்து வருகிறோம். பலவற்றில் நாம் எதிர்பார்க்கும் அழகான வேலைப்பாடுகள் கூட இருக்காது. ஆனால் ராணிமேரி கல்லூரி என்பது பெண்கள் கல்விக்காக தென்னிந்தியாவில் இரண்டாவதாக அமைக்கப்பட்ட கல்லூரி. சமுதாயத்தில் பெண்கள் எழுச்சி பெறுவதற்கும் விழிப்புணர்வு பெறுவதற்கும், பிள்ளையார் சுழி போடப்பட்ட இடம் அந்த வகையில் இது வரலாற்றுச் சிறப்பு மிக்க இடம். நல்ல பராமரிப்பின் மூலம் இங்குள்ள கட்டடங்களைச் சீரழிவிலிருந்து காப்பாற்ற முடியும். உதாரணமாக, பக்கத்தில் உள்ள காவல்துறை அலுவலகத் தலைவர் கட்டடத்தைப் பாருங்கள்'' என்றார்.

**க**டற்கரையில் அடுக்குமாடிகள் கட்டுவதைத் தடை செய்யும் உத்தரவு ஒன்றை 1950ல் போட்டார் ராஜாஜி. லேடி வெலிங்டன் கல்லூரி வளாகத்தில் பலமாடிக் கட்டடம் கட்ட 1970களில் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் எதிர்ப்பு கடுமையாக இருக்கவே கைவிடப்பட்டது. இப்போது மீண்டும் மெரினாவுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

— ப்ரியன்

அட்டைப்படம்: பேஜர் மூர்த்தி

படங்கள்: ஸ்ரீஹரி




## ராணி Vs ராணி!

இன்றைய அ.தி.மு.க. ஆட்சியில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தமிழக சட்டசபையில் கிடைத்துவரும் மரியாதை படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருகிறது. சட்டசபையின் அத்தனை உறுப்பினர்களுமே மக்கள் பிரதிநிதிகள் என்ற உணர்வு முதல்வருக்கு இருப்பதில்லை; சபாநாயகருக்கு இருப்பதாகவும் தெரியவில்லை. எதிர்க்கட்சியினர் எதிரிக்கட்சியினர்போல் பல நேரங்களில் செயல்படுவதும் நிகழ்கிறது. ஆனால், அவ்வாறின்றி, அவர்கள் முறையான வழியில் நியாயமான கருத்துக்களைக் கூற முற்படும்போதுகூட பல வகைகளிலும் தடுக்கப்படுகின்றனர்.

கிருஷ்ணா நதி நீர் பற்றி கேள்வி எழுப்பிய துரைமுருகன் கேலிக்குள்ளாகி மட்டம் தட்டப்பட்டிருக்கிறார். 'அமெரிக்க தூதரகம் முன்னால் ஈராக் யுத்தத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டதேன்?' என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர் கேள்வி எழுப்பினால் மார்க்ஸிஸ்ட் கட்சியையே ஒட்டு மொத்தமாக மட்டம் தட்டிப் பேசுகிறார் முதல்வர்! 'அவர்களுக்குக் கூட்டம் போட்டுப் பேசவும் கோஷம் போட்டுப் போராடவும்தான் தெரியும்' என்கிற ரீதியில் முதல்வர் பேசியிருப்பது சட்டசபையின் கண்ணியத்தைக் குலைப்பதற்கு முன்னதாக, முதல்வரை ஒரு மோசமான அரசியல்வாதியாக இனம் காட்டுகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உறுப்பினர் ஹேமசந்திரனுடன்



கல்கி

2003 ஏப்ரல் 20
சுபானு சித்திரை 7
மலர் : 61
இதழ் : 38



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




வாக்குவாதம் செய்கையில், 'கம்யூனிஸ்ட் கட்சி கள்ள வோட்டுக்கள் மூலமாகத்தான் மேற்கு வங்கத்தில் ஆட்சியைப் பிடித்தது' என்று ஜெயலலிதா பேசியிருப்பதும் ஆதாரமற்றது.

கம்யூனிஸ கொள்கைகளை நாம் ஆதரிக்காது போகலாம். அவற்றைக் கண்டனம் செய்வதற்கான உரிமையும் நமக்கு இருக்கிறது. ஆனால், அமைப்பு ரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் வலுவுடைய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய அரசியல் வரலாற்றிலும் தொழிற் சங்க வரலாற்றிலும் முக்கிய இடம் பெறுகிறது. கம்யூனிஸ்ட்கள் சிறந்த எதிர்க் கட்சியாகப் பல மாநிலங்களிலும் செயல்பட்டிராவிட்டால், தொழிலாளர் நலன் என்பதே இந்நாட்டில் கேள்விக்குறியாகிவிட்டிருக்கும். கட்சி உறுப்பினர்களின் கட்டுக்கோப்பு என்ற பலத்தில்தான் இன்னமும் எம்.எல்.ஏ.க்களாகவும், எம்.பி.க்களாகவும் கம்யூனிஸ்டுகள் தேர்வாகிறார்கள்.

ஜெயலலிதாவோ, அக்கட்சியின் பங்களிப்பையும் உதாசீனப்படுத்துகிறார் ; மக்கள் அதற்கு அளித்துள்ள ஆதரவையும் மதிக்க மறுக்கிறார்.

மக்கள் விருப்பத்தையும் மன உணர்வுகளையும் மதியாத எந்தவொரு ஆட்சியும் நீடித்து நிலைக்க முடியாது. ஜெயலலிதா, ராணி மேரி கல்லூரியைத் தகர்த்து அவ்விடத்தில் தலைமைச் செயலகத்தை உருவாக்கத் திட்டமிடுவதும் மக்கள் விரோத காரியமே.

ராணி மேரி கல்லூரி விவகாரம் இன்று வழக்கு தொடரப்பட்டு விசாரணையில் இருக்கிறது. தீர்ப்பு ஒரு வேளை ஜெயலலிதாவுக்கு ஆதரவாகக்கூட அமையக் கூடும். சட்டப்படி ஜெயலலிதாவின் போக்கைக் கட்டுப்படுத்த முடியாமல் போகலாம். ஆனால், மக்களின் விருப்பத்தை மதித்து நடக்கிற பண்பு முதல்வருக்கு அவசியமானது. இந்த மக்கள்தான் வாக்களித்து அ.தி.மு.க.வை இன்று ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள் என்பதை அவர் மறந்துவிடக் கூடாது. அபரிமித மெஜாரிட்டி அடக்கத்தைத் தோற்றுவிக்க வேண்டும் ; அதிகார போதையை அல்ல.




புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கு, சென்னையில் எத்தனையோ இடங்களில் காலி மனைகள் இருக்கிறபோது ஒரு கல்லூரி வளாகத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் என்ன? அதன் கட்டடம் பழைமை வாய்ந்ததா, புராதன பொக்கிஷமா இல்லையா என்ற வாதம் ஒருபுறம் இருக்கட்டும்.

'எத்தனை புராதன கட்டடங்களைத்தான் அரசு செலவில் பராமரிக்க முடியும்?' என்ற கேள்வியும் இருக்கட்டும் - இவை விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட வேண்டிய விஷயங்கள்.

இரவோடிரவாக கல்லூரியைத் தரைமட்டமாக்கும் ஓர் அறிவிப்பை வெளியிடுவதற்கு - அதுவும் பரீட்சை நெருங்குகிற நேரத்தில் வெளியிடுவதற்கு - எப்பேர்ப்பட்ட மெஜாரிட்டி அரசுக்கும் உரிமை இல்லை.

மெரீனா கடற்கரை எதிரே தலைமைச் செயலகக் கட்டடம் எழுமானால், அந்தப் பகுதி எத்தகைய பாதிப்பைச் சந்திக்க வேண்டிவரும் என சற்று யோசிக்க வேண்டும். கூட்ட மிகுதியினாலும் போக்குவரத்து நெரிசலினாலும் கடற்கரைச் சாலை நாசமாகும். மெரீனா கடற்கரைக்கு வந்து செல்லக் கூடிய மக்களுக்கு ஏற்படக் கூடிய இடையூறுகள், இடைஞ்சல்கள் சொல்லி மாளாது. தவிர, மேலும் மேலும் பல அடுக்கு மாடிக் கட்டடங்களுக்கு அனுமதி வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு, நெரிசல் மிக்க சென்னை நகருக்குக் கடற்காற்றுகூட கிடைக்காமல் போய்விடக் கூடும்.

இவை எதையுமே கருத்தில் கொள்ளாமல் அறிவிப்பை வெளியிட்டுவிட்ட முதல்வர், தமது பிடிவாதத்தை இவ்விஷயத்தில் தளர்த்துவதே நல்லது. தலைமைச் செயலகத்தை அமைக்க வேறு எத்தனையோ உகந்த இடங்கள் சென்னை சுற்றுவட்டாரத்தில் உள்ளன.

மக்களுக்காக அரசாங்கம் என்பதே ஜனநாயகம். ஆட்சியில் உள்ளவரின் விருப்பு வெறுப்புக்கு மக்கள் வளைந்து கொடுப்பது என்பது சர்வாதிகாரம். ஜெயலலிதா, தாம் ஒரு ஜனநாயகவாதியே, சர்வாதிகாரி அல்ல என்பதை நிரூபிக்கட்டும். ●

# ஸார்ஸ் ஸ்பெஷல்!

Severe Acute Respiratory Syndrome- சார்ஸ் நோயின் அறிகுறிகளுடன் அமெரிக்க புகைப்படக்காரி, ஸாரி - காரர், மேடம் ரிபெக்கா மும்பையின் கஸ்தூரிபா ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆனாலும் ஆனார், அது சார்ஸா இல்லையா என்று காலன்தான் - ச்சி-காலம்தான் பதில் சொல்ல வேண்டும் என்று எங்கள் ஹெல்த் மினிஸ்டரே அறிக்கை விட்டு இரத்த ஸாம்பிளின்



ஆராய்ச்சி முடிவுக்கென்று மும்பை, புனே என்று தத்தளித்துக் கொண்டிருக்கையில்... நமது வழக்கமான வம்பு வட்டாரங்களும், நம்பத்தகாத தகவல் மையங்களும் (ஸா)ரசமான செய்திகளைக் கொண்டு குவித்த வண்ணமுள்ளன. Severe Acute Rumour Syndrome- உள்ளவர்கள் தொடர்ந்து படிக்கவும்...

இந்து பக்தர்களின் காசியாகவும் முஸ்லிம்களின் மெக்காவாகவும், கிறிஸ்துவர்களின் வாடிகனாகவும் இந்துஜா ஆசுபத்திரி திடீர் அவதாரம் எடுத்திருந்தது. உள்ளே இம்மெய்யன்பர்களின் அவதார புருஷி ஐஸ்வர்யா தேவதை காலொடிந்து சயனித்திருந்ததே! தரிசனத்திற்கென்று முட்டி மோதிய கூட்டத்தைக் கட்டுப்படுத்த கண்ணீர்ப் புகையும் பயன்படுத்த முடியவில்லை... அதுதான் தாரை தாரையாக கண்ணீர் வழிந்து கொண்டிருந்ததே. உள்ளே போக சொந்தக்காரர்கள் தவிர விவேக் ஓபராய்க்கு மட்டும்தான் அனுமதி என்றதும், வெளியே "ஆயுள் ஆரோக்யம் ஐஸ்வர்யா நாம தேஹிமே" கோஷம் வானைப் பிளந்தது. ஆடிப் போய்விட்ட ஆஸ்பத்திரிக்காரர்கள் கூட்டத்தை விரட்ட ஒரு ப்ரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்தார்கள். "உள்ள சார்ஸ் நோய்னு ஸஸ்பெக்ட் பண்றாங்க" என்று ஒருவர் சொன்னதுதான் தாமதம்... ஆஸ்பத்திரியே காலியாகிவிட்டது. "அட, நான் சொன்னது 'சிவியர் அக்யூட் சல்மான் சின்ட்ரம்ஸ்ங்கோ' " என்று அவர் அடித்துக் கொள்வது, இவர்கள் காதில் விழாமல், நேராக ஐஸை, ஜேம்ஸ் பாண்டுடன் நடிக்க வைக்க நினைக்கும் ஹாலிவுட்காரர்களை எட்டிவிட்டதாமே?

விட்டுத்தள்ளுங்க. நாம் மந்திரா பேடியிடம் செல்வோம். அம்மிணிக்கு இரண்டு செல்ல நாய்கள்; ஒன்றுக்கு சுக்விந்தர் சிங் என்ற சீக்கிய குலப் பெயர். மற்றொன்றுக்கு உபாத்யாயே என்ற பிராமணப் பெயர் - சிக் குரு பெயரை நாய்க்கு வைப்பதா என்று சீக்கியர் கொதித்தெழுந்து விட்டனர்; வழக்குப் போட்டு விட்டனர். 'சீக்கியரிடம் சிக்கி விட்டீர்களே' என்று மந்திராவிடம் ஆதங்கப் பட்டபோது, 'ஐ ஆம் ஸிக் ஆஃப் திஸ்' என்று அலுத்துக் கொண்டார் பெருமூச்சுடனே. பெருமூச்சு தாங்காமல் தோளில் துளியூண்டு ஒட்டிக் கொண்டிருந்த பட்டை, பட்டென்று உயிரைவிட, நம் ஃபோட்டோகிராஃபரும் மூர்ச்சையானார். "கியா ஹுவா" என்று மந்திரா பதற, "ஒன்றுமில்லை. அவரும் 'ஸிக்'காயிட்டார்" என்று சமாளிக்க வேண்டியிருந்தது. சட்டென்று ஸிக்னல் கொடுத்தார் ராஜ் கௌஷல். "என் நாய்களுக்குப் புதுப் பெயர் இனிமே எய்ட்ஸ், சார்ஸ் தான்! ஒரு பய கிட்ட வரமாட்டான்."

– ஜெய்ஸ்ரீ ராஜ்

# மெட்ராஸ் டூயட்!


• டேவிட் ஷோர்

**ந**டிகர் விஜய் மட்டும் அந்த ஓவியக் கண்காட்சிக்குச் சென்றிருப்பாரேயானால், “அட! இது நம்ம மேட்டருப்பா!” என்று குஷியாகிப் போயிருப்பார். காரணம், ‘மெட்ராஸ் டூயட்’ என்ற தலைப்பில் இடம் பெற்ற ஓவியத்தில், விஜய் லுங்கி கட்டும் ஸ்டைலை வரைந்திருந்தார் ஓவியர் டேவிட் ஷோர்.

வெஸ்லியன் பல்கலைக் கழகத்தின் ஓவியப் பேராசிரியரான டேவிட் ஷோர், அகமதாபாத் நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டிஸைனுக்குச் சும்மானாச்சுக்கும் ஒரு கடிதம் எழுதினாராம். “உங்க டிஸைன் ஸ்கூலுக்கு வந்து, எனக்குத் தெரிஞ்ச ஓவியக் கலையைக் கத்துத் தரேன். பதிலுக்கு இலவசமா சாப்பாடு போட்டு, தங்க இடம் கொடுத்தா போதும்”னு எழுதியிருந்தாராம்.

“அடடா! வாங்க! நல்லா வந்து தங்கிக்குங்க” என்று என்.ஐ.டி. இயக்குநர் விகாஸ் சாத்வேல்கர் பச்சைக் கொடி காட்டவும், டேவிட் ஷோர், அகமதாபாத் வந்து விட்டார். வந்து இறங்கிய மறு நிமிஷமே, அமெரிக்க அண்ணாத்தேக்கு காதல் - குஜராத் மக்கள் அணியும் விதவிதமான கைத்தறி ஆடைகள் மீது மிகப் பெரிய ஈர்ப்பு உண்டாகவே, லுங்கி, வேட்டி, புடைவை அணிந்த மனிதர்களைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தாராம்.

“மூணு முழத் துண்டு, நாலு முழ வேட்டி, ஆறு கஜம் புடைவை... இந்தியாவின் கலாசாரமே நீண்ட, செவ்வகத் துண்டு துணிதான். அதை வைச்சு, பெங்காலிங்க ஒரு மாதிரியா கட்டறாங்க.. கேரளாக்காரங்க ஒரு தினுசா அணியறாங்க... தமிழ்நாட்டுலே ஒரு ஸ்டைல்ல கட்டறாங்க... எல்லாமே என்னை வசீகரிச்சது. அதிலும் கதர் ஆடைக்குன்னு ஒரு தனி பாரம்பரிய அழகு இருக்கிறது தெரிஞ்சதும் இன்னும் ஆர்வமா வரைய ஆரம்பிச்சேன்” என்கிறார் டேவிட் ஷோர்.

**க**தர்த் துணியிலேயே வரையப்பட்ட கதர் கலக்கல்களை, கலர் கலராக ‘காதி’ என்ற பெயரிலேயே கண்காட்சியாக வைத்து, மும்பை ஜஹாங்கீர் ஆர்ட் கேலரியைக் கலகலக்க வைச்சுட்டாராம் இந்தத் தூரிகைக் கலைஞர்.

நன்றி : **ஸ்பேன்.**

**- அனு**




• மெட்ராஸ் டூயட்


• வங்காளப் புடைவை

# மாமூலாச் சிரிங்க!







"நிஜமாவா சொல்ற? எல்லாக் கேள்விக்கும் சரியான பதில் எழுதி இருக்கியா?"

"நான் சொன்னா நீங்க நம்ப மாட்டீங்கன்னு தெரியும். அதனாலதான் விடை பேப்பரையும் கையோடு எடுத்திட்டு வந்திருக்கேன் பாருங்க!"

- மதுரை என். உஷா தேவி




"உன் வீட்ல துப்பாக்கி ஏது?"

"மாமூல் வாங்க வந்த யாராவது மறந்து வைச்சிட்டுப் போயிருப்பாங்க!"

- அம்பை தேவா



ஸ்ரீ ராமஜயம்

"லிப்கோ" பவள விழா (75-ஆம் ஆண்டு) துவக்கத்தை முன்னிட்டும்
ஸ்ரீ ராமநவமியை முன்னிட்டும் "லிப்கோ" ஸ்தோத்ர ரத்ன வரிசையின் ஆரம்பம்!

## ஸங்க்ஷேப ராமாயணமும் மற்றும் சில ப்ரபல ஸங்க்ரஹ ராமாயண ச்லோகங்களும்



(தமிழில்)

1. ஸங்க்ஷேப ராமாயணம்
2. காயத்ரீ ராமாயணம்
3. ஸ்ரீ நாம ராமாயணம்
4. திவ்யப் பிரபந்த பாசுர ராமாயணம்
5. ஸ்ரீ குலசேகராழ்வாரின் ஸ்ரீமத் ராமாயண ஸங்க்ரஹம்
6. பாவயாமி போன்ற ஸங்கீதத்தில் ராமாயண ஸாரம்

ஆகிய அனைத்தும் அடங்கிய ஒரே புத்தகம்.
விலை ரூ.10/-. விசேஷச் சலுகை:ரூ.10/- மட்டும் அனுப்பினால்
ஒரு பிரதி உங்கள் முகவரிக்கு அனுப்பப்படும்.

தொகை அனுப்பவேண்டிய முகவரி: தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
36, வடக்கு ரோடு, மேற்கு (நந்தி) C.I.T.நகர், சென்னை - 600 035. போன்: 24341538,24336467
ஷோ ரூம்: லிப்கோ அஸோஸியேட்ஸ், 'நாராயணா அபார்ட்மெண்ட்ஸ்', 23/G-5, ராமேஸ்வரம் ரோடு (மாம்பலம் ரெயில் நிலையம் அருகில்), தி. நகர், சென்னை-600 017. போன்: 24323298



# S.V.முதியோர் இல்லம்



## Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

*முதியோர் சேவை பெரியது!*

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

## S.V. HOME FOR AGED

Charitable Trust (Reg)

# 50 / 88, Panchali Amman Kovil Street, (Near Arumbakkam Post Office)
Arumbakkam, Chennai - 600 106 Tel. Off: 2475 5700, 2475 1356.
E-mail:svhome@vsnl.net

அதுவொரு காலம்... பசிய பங்கு போட்டுக் கிடந்தப்பயெல்லாம் கூட, மனசு நெறைஞ்சு கெடந்தது!

அம்மா அண்ணன் தங்கச்சி நானுன்னு நாலுபேர்... கவிதை மாதிரி உயிரோட்டமுள்ள வாழ்க்கை.

அநேகமா படிச்சிக்கிட்டிருந்த காலத்துல... காலை டிபனே, சிவசிவாவாகத்தானிருக்கும்!

ஒருசில நாட்கள்ல சமய சஞ்சீவியா... கம்பு, கேழ்வரகு, கொள்ளு, இதுல எதுனா ஒண்ணு, கூழா மாறி வயித்த கலக்கிக்கிட்டிருக்கும்.

எப்பவாச்சியும் இராத்திரியில மீந்தா... காலையில், பழைய சோறு டிபனா இருக்கும். மீதிங்கற பேச்சுக்கே, பெரும்பாலும் இடமிருக்காது.

அதிர்ஷ்டவசமா மீந்தா... நாங்க மூணு பேரும் வட்டமா, கையேந்தி உட்கார்ந்திருப்போம்.

அம்மா, தயிர்விட்ட பழைய சாதத்தைப் பிழிஞ்சுப் போட... அமிர்தமா இனிக்கும்!

சமயத்துல இரவு சாப்பாடே, கிழங்கு வகையாத்தான் இருக்கும்.

மரவள்ளிக் கிழங்குல ஆரம்பிச்சு, சக்கர வள்ளிக் கிழங்கு, அமுக்குனாங் கிழங்கு, பனங்கிழங்கு, கோரக் கிழங்குன்னு ஒண்ணுத்தையும் விட்டு வைக்காம ஆதிவாசி மாதிரி உணவுப் பழக்கமிருந்தாலும், அம்மா தன்னுடைய வார்த்தைப் பிரயோகத்தால்... 'அந்தக் காலத்துல ரிஷிகளெல்லாம் இதத்தான் சாப்பிட்டு 'ஞானம்' அடைஞ்சாங்க' என பெருமிதப்படுத்துவாள்!

அப்பயெல்லாம்... எங்களுக்கு எப்ப ஞானம் வரும் என்றிருக்கும்!

ஆனால் சாப்பிட்டு வெளியே வரும் போதே சொல்லிவிடுவாள்... யாரு கேட்டாலும், ரவா உப்புமா சாப்பிட்டோம்னு சொல்லணும்!

இதே இரவு மெனு படி, அம்மாவின் பட்டியலில்... நீர் உருண்டை அல்லது கார அடை இருக்கும்.

தவறிக்கூட ஒரு போதும் அவள் மெனுவில்... இட்லியும் தோசையும் இடம் பெறாது. அது தீபாவளி ஸ்பெஷல்!

வாய்தவறி இட்லி தோசை என்று

# உயிர்ச்சுவர்

உச்சரித்து விட்டால்... அக்கம் பக்கம், 'நேத்து உங்க வீட்லேர்ந்து கொடக்கல் சத்தமே கேக்கலியே' என்ற விசாரணை வரும் என்பது அம்மாவுக்குத் தெரியும்!

மத்தபடி எங்க மூணுபேருக்குமே, புரட்சித் தலைவர் புண்ணியத்துல மதிய உணவு கண்டிப்பா கெடைச்சிக்கிட்டு இருந்தது.

அப்பாவின் பரம்பரை சொத்தாய்... அம்மா உயிரோடு இருந்த வரை, பேணிக் காத்தது இந்த அபரிமிதமான கௌரவத்தைத்தான்!

அப்பா நாட்டாமையாய் ஊரைக்கட்டி ஆண்டதற்கு ஒரே சாட்சியாக... நாற்பத்து மூணு அடியில், தெற்கு பார்த்த அரண்மனை வீடு இருந்தது.

கஷ்டப்பட்டு விவசாயம் செய்தால், உட்கார்ந்து சாப்பிடுவதற்கு நிலமுமிருந்தது.

ஆனால் அப்பா காலமானதிலிருந்தே, முதலீடாய்... விதை நெல் கூட இருந்ததில்லை.

**உள்நோக்கமா?**

**போ**ற்றுபவர்கள், தூற்றுபவர்கள் என வித்தியாசம் காணாது எல்லா கடிதங்களையும் வெளியிட்டு 'தராசுத்தன்மை'யை வெளிப்படுத்திவிட்டது 'கல்கி' பாராட்டு!

**வட்டமேஜை**

ஜி.ஜி. சரவணன், மயிலாடுதுறை.

தொலைத்தது! அண்ணியின் மனநிலையிலும் மாற்றம் தெரிந்தது. நாட்கள் போகப் போக... எங்கள் மனைவிமார்களின் நெஞ்சில், தனிக்குடித்தன ஆசை கொழுந்துவிட்டு எரிய



பட்டினி கிடக்க பண்ணையார் வாரிசுகளாய்... மெல்ல மெல்ல, தலையெடுத்தோம்.

அவ்வளவு பெரிய வீட்டையும், விவசாயம் பண்ண முடியாத அளவுக்கு மிக அதிகமான நிலத்தையும் வைத்துக் கொண்டு... எதற்காக, அம்மா எங்களைப் பட்டினியில் வளர்த்தாள் என்பதுதான் புரியாத புதிர்.

ஆயிற்று...

கால நகர்தலில் புரியாத புதிருக்கும் விடை கிடைத்தது.

சம்பாதித்துக் கட்டிக் கொடுக்க வக்கற்றுப் போய்... நிலம் முழுவதையும் விற்றுத்தான் தங்கையைக் கட்டிக் கொடுத்தோம்.

மீந்த பணத்தைச் சமமாய்ப் பிரித்து, என் பேரிலும் அண்ணன் பேரிலும் போட்டுக் கொண்டோம்.

பிற்பாடு எனக்கும் கல்யாணமாகித் ஆரம்பித்தது.

நானும் அண்ணனும் முடிந்தவரை அகாலமாய் வீடு திரும்பப் பழகிக் கொண்டோம்.

தவறி வீட்டிலிருக்க நேர்ந்தால்... பல்லைக் கடித்துக் கொண்டு, பஞ்சாயத்து பண்ணிக் கொண்டிருந்தோம்.

நிலைமை மோசமாக, மேலண்ட பக்கம் அண்ணன் குடும்பமும் கிழண்ட பக்கம் என் குடும்பமும் இருக்க முடிவாயிற்று.

அந்த ஏற்பாடும் ஆறுமாசம்தான், நீடித்தது.

நடுவே சுவர் எழுப்பி சுமுகத்தீர்வு ஏற்படுத்தி விடலாம் என்றிருக்க... பேங்கிலிருக்கும் பணத்தையெடுத்து, புதுசாய்

**புவனகிரி கல்யாண்**

வீடுகள் கட்ட வேண்டும் என மனைவி மார்கள் கர்ஜித்தார்கள்.

மறுக்க முடியவில்லை.

வீட்டை இடிக்க நினைத்தாலே... உயிர் போய் உயிர் வரும் போலிருந்தது.

ஆனால் மனைவிமார்கள், அதைப் பற்றி யெல்லாம் கவலைப்பட்டதாய்த் தெரிய வில்லை. 'வீட்டைக் கட்டிமுடிச்சிட்டு, நீங்க எப்படியோ போங்க'... என்பதாயிருந் தது!

நானும் அண்ணனும் வெளியே சந்தித்து, பேசி, முடிவெடுக்க வேண்டியதாயிற்று...

குடும்பத்தின் தலைப்பிள்ளை என்பதால், அண்ணனுக்கு இருபத்து இரண்டு அடியும், எனக்கு இருபத்து ஒரு அடியுமாயிருக்க... ஆளாளுக்குப் பதினேழு அடி, பதினேழு அடி கிடைத்தது.

மையத்தில், என்னுடைய பாகத்திலிருந்து நாலு அடியும் அண்ணனுடைய பாகத்தி லிருந்து ஐந்து அடியும், ஆக மொத்தம் ஒன்பதே அடி சந்து போட்டு வீடு கட்டி னோம்!

**வீ**ட்டு வேலைகள், நடக்க நடக்க... எங்களின் மனைவிமார்கள் பரஸ்பரம் புன்னகை செய்யக் கற்றுக் கொண்டார்கள்.

எங்களுக்குத்தான் இவர்கள் மீண்டும், எப்போது அடித்துக் கொள்ளப் போகி றார்களோ... என்று பயமாக இருந்தது.

வீடு கட்டி முடித்த தருவாயில், எங்கள் முறை வந்தது!

இரண்டு வீட்டுக்கும் இடையே சுவர் வைக்கக் கூடாது என்று... மனைவிமார்கள், வேண்டுதல் வைத்ததையும் மீறி, சுவர் வைத்தோம்!

"எங்கேயோ பிறந்து வளர்ந்து, இந்த வீட்டுக்கு வாக்கப்பட்டு வந்த எங்க இரண்டு பேருக்கும் இருக்கிற ஒற்றுமைகூட, ஒரே வயித்துல பிறந்த அண்ணன் தம்பியாகிய உங்களுக்கு இல்லையே" என்று ஏகத்துக்கு விமர்சனம் வேறு!

பொறுமையாய்ச் சிரித்துக் கொண் டோம்.

புதுவீட்டில், எங்கள் மனைவிமார்கள், குழைந்து கொண்டிருப்பதைப் பார்க்கப் பார்க்க... 'அட, பாவி செருக்கிகளா' என உள் மனசு கூவியது.

மனசை அதட்ட, நான் முயற்சிக்கவே யில்லை.

என் மகனும், அண்ணனின் மகனும் வாய் திறக்கும் போதெல்லாம்... ஹையா, இனி தெனமும் மழையில் (ஷவர்) குளிக்க லாம் என குதூகலித்துக் கொண்டிருக்கிறார் கள்.

எங்களால் குடும்ப உறுப்பினர் எல் லோருக்குமான சௌகரியமான வீட்டை மட்டும்தான் கட்ட முடிந்திருக்கிறது.

எங்களுக்கான சந்தோஷமான வீட்டை... காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை...

**ஹோ**மப் புகை வீடெங்கும் வியாபித்திருக்க... ஹாலில் உள்ள அனை வரின் கண்களும் கலங்கிக் கொண்டி ருக்கிறது.

நானும் அண்ணனும் இன்னும் சற்று வசதியாய்... கண்ணீர் விட்டு அழுது கொண்டிருக்கிறோம்...


...ம், அதுவொரு காலம்... பசிய பங்கு போட்டுக் கிடந்தப்பயெல்லாம்கூட, மனசு நெறைஞ்சு கெடந்தது!



### சுற்றிச் சுற்றி வந்தீங்க!

**பா**ரீஸ் நகராட்சிக்கு இப்போது தலைநகரில் சுற்றிச் சுற்றி வரும் எண்பதாயிரம் புறாக்களை என்ன செய்வது என்பதே பெரும் பிரச்னை. இவற்றைச் சாகடிக்காமல் பிடித்து வெளி நாடுகளில் கொண்டு போய் விட்டு விடுவதற்கு ஏற்பாடு செய்து வருகின்ற னர். புறாக்களின் கழிவினால் - பல நோய்கள் பரவுகின்றவே!

— பாரீஸ் பார்த்தசாரதி



# புக்பேங்க்





**அகஸ்தியர் சங்கீத வர்ண மாலா**
**- கே. ரமேஷ்**

சங்கீதம் பயில்வோருக்கு பால பாடம். சங்கீத விளக்கம், மேள கர்த்தா அட்டவணை, ஜன்ய ராகங்கள், வர்ணங்கள் என மிக விளக்கமாக, எந்தெந்த காலத்தில் பாட வேண்டுமென்ற குறிப்புகளுடன் விவரிக்கும் நூல். தமிழில் மிகக் குறைவான கீதங்கள் கொடுக்கப்பட்டுள்ளதுதான் சிறு குறை.

**அகஸ்தியர் பப்ளிகேஷன்ஸ், 9 ஏ, இளைவ் பில்டிங், 33, நந்தி கோவில் தெரு, தெப்பக்குளம், திருச்சி - 620 002. விலை ரூ.45/-**

**யாரோ ஒருத்தியின் நடனம் - மகுடேசுவரன்**

மனித மனக் கோணல்களை, உணர்வுகளை, தயக்கமோ சங்கோஜமோ இன்றி எளிமையாக, ஆனால் முகத்தில் அறைகிற தொனியில் சொல்லும் கவிதைகளின் தொகுப்பு.

**காவ்யா, 14, முதல் குறுக்கு வீதி, டிரஸ்ட் புரம், சென்னை - 600 024. விலை ரூ.40/-**

**இன்றைய விண்வெளி**
**- மோகன் சுந்தரராஜன்**

விரல் நுனியில் உலகின் எந்த மூலைக்கும் தொடர்பு கொள்ள உதவும் கோள்களையும், உலகை இணைக்கும் நேரடி ஒலி, ஒளி பரப்புகளையும், தகவல், தொலைபேசி, இன்டர்நெட் தொடர்புகளைப் பற்றியும், அவை விண்வெளி மூலமாக எப்படி இயக்கப் படுகின்றன என்பது பற்றியும் விவரிக்கும் விஞ்ஞான நூல்.

**நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா, ஏ 5, கிரீன் பார்க், புதுடில்லி - 110 016. விலை ரூ.80/-**

**சிந்து முதல் குமரி வரை**
**- குருவிக்கரம்பை வேலு**

வேத காலத்து ரிஷிகள் முதல் தமிழ்ப் புலவர்களும் அறிஞர்களும் இந்திய நாகரிகத்தின் வரலாறாக இதுவரை கூறியவை யாவும் மேல் சாதியினரான பிராமணர்களின் சூழ்ச்சியே என்றும், 'கொலை வாளெடுத்து பொதுவுடைமையை நிலை நிறுத்தினால் தான்' வரலாறு திருந்தும் என்றும் கூறும் நூல்.

**சிவசக்தி பதிப்பகம், 20/43, நீலா தெற்கு வீதி, நாகை - 611 001. விலை ரூ.75/-**

**கொ.மா. கோதண்டம் சிறுகதைகள்**
**- கொ.மா. கோதண்டம்**

குறிஞ்சி, முல்லை நிலங்களை வாழ்விடமாகக் கொண்ட அடித்தள மக்களின் வாழ்வைக் களமாகக் கொண்டு நாட்டுப் பாடல்கள், பழமொழிகள், சொல்லடைகள் என சுவை சேர்த்து, மனித நேயத்தை அடிநாதமாகக் கொண்ட தொகுப்பு.

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098. விலை ரூ.69/-**

**கடவுளுடன் வாழ்ந்தவர்கள்**
**- ஸ்ரீராமகிருஷ்ணரின் துறவிச் சீடர்கள்**

சுவாமி விவேகானந்தரால் துவக்கப்பட்ட ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தின் தூண்களாக விளங்கிய பதினைந்து சீடர்கள் பற்றியும், அவர்கள் இந்து மதத்திற்கும், உலகிற்கும் ஆற்றிய தொண்டுகளைப் பற்றியும் விரிவாகக் கூறும் நூல்.

**ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை - 600 004. விலை ரூ.100/-**

இருள் பிரிந்தும், பிரியாத காலை வேளை. சென்னை, கிண்டி ரேஸ் கோர்ஸை ஒட்டியிருக்கும் சாலையில் 'வாக்கர்'களின் ஓட்டமும் நடையுமான உடற்பயிற்சி. ஜிம்கானா கிளப் வாசலையொட்டி உட்புறமிருந்து கிளம்பும் முணுமுணுப்பும், சிரிப்பும், சத்தமான கமெண்ட்டுகளும், அமைதியான அந்த நேரத்தில் சாலையில் செல்வோரின் கவனத்தைக் கவருகின்றன. கேட்டின் வழியாக, செக்யூரிட்டியின் கெடுபிடியை மீறி எட்டிப் பார்த்தால் உள்ளே இருக்கிறார்கள் அந்தப் பரபரப்புக்குக் காரணமானவர்கள். அவர்கள் எல்லோருக்கும் வயது பத்திலிருந்து ஐம்பதுக்குள்தான் இருக்கும். "இந்த நேரத்தில் என்ன கலாட்டா?" என்று நமக்கு மனத்துக்குள் வழக்கமான குறுகுறுப்பு.

"என்ன ஸார்... அப்படியே தூரத்தில் நின்றால் எப்படி? இப்படி கிட்டே வாங்க" - நம்மை கூப்பிடுபவர் துரை.

"இங்க போராட்டம், மறியல், உண்ணாவிரதம் எதுவும் இல்லை. நாங்கள் 'கேடிகள்'. ஆட்டக்காரர்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறோம்."

"கேடிகள்?"


**இலவச இணைப்பு!**

'ஜில்'என்ற உருப்படியான தொகுப்பை வழங்கியதற்குப் பிடியுங்கள் ஒரு பாதாம்கீர்.

**வட்டமேஜை**

ரேவதிப்ரியன், ஈரோடு


"ஆங்கிலத்தில் caddie. அப்படியென்றால் கோல்ப் ஆட்டக்காரரின் உதவியாளர் என்று பொருள். கோல்ப் ஆட்டத்தின்போது ஆட்டக்காரன் பின்னால் ராமரைத் தொடரும் லட்சுமணன் போல, வெயிட்டான, நீண்ட தோல் பையைச் சுமந்து கொண்டு செல்லும் நபர்கள் தான் 'கேடி'கள். அந்தத் தோல் பைக்குள் 14 ஸ்டிக்குகள் இருக்கும். இந்த ஸ்டிக்குகளின் நீளத்தில் வித்தியாசம் உண்டு. இதை கிளப்புகள் என்றும் சொல்வார்கள்" என்று நமக்கு கோல்ப் பற்றி பால பாடம் எடுத்தார் துரை.

ஜிம்கானா வாசலுக்குள் கார் நுழையும் போதே "மாமு அந்தப் பார்ட்டி வந்துடுச்சு...





* ம · டைம்

இன்னிக்கு வெயிட்டான கவனிப்புதான் போ" என்று மற்றொரு கேடியிடம் சொன்னார் துரை. காரிலிருந்து இறங்கிய நபர், டிக்கியைத் திறக்க, கேடி ஒருவர், உடனே பையைத் தூக்கிக் கொள்கிறார். குதிரை ஓட்டப் பாதையின் உள் வட்டத்திலிருக்கும் பரந்து விரிந்த கோல்ப் மைதானத்தின் உள்ளே ஓர் ஆட்டக்காரர் புகுந்தால், முழு ஆட்டமும் ஆடிவிட்டு வெளி வர மூன்று மணி நேரம் கூட ஆகும்.

கோல்ப், சீமான்களின் விளையாட்டு என்று சொல்லத் தேவையில்லை. ஆனால் ஆடவரும் சீமான்களும், எந்தவித தயக்கமுமில்லாமல், மிக இயல்பாக கேடிகளுடன் ஜோடி சேர்ந்து விடுகிறார்கள். இந்த கேடிகள் வெறும் பையை மட்டும் சுமந்து செல்பவர்கள் அல்ல. இவர்கள் கோல்ப் ஆட்டத்திலும் கில்லாடிகள். ஆட்ட நுணுக்கங்களை அற்புதமாகத் தெரிந்து வைத்திருப்பவர்கள். துரை, முப்பத்தைந்து வருடங்களாக மைதானமே கதியென்று இருப்பவர். "எங்



• குறி வைக்கிறார் பிரேமலதா



• காத்திருக்கும் கேடிகள்

# ஆடுகிறார்கள் சீமான்கள்: துணையாக 'கேடி'கள்!

களுக்கு ஆட்டம் தெரிந்திருப்பது ஒரு ப்ளஸ் பாயிண்ட்" என்கிறார் அவர். "வெறும் பையைச் சுமந்து செல்பவர்களுக்கு இங்கே வேலை இல்லை."

இந்தக் கேடிகள் வட்டத்தில் ஒருவர் சுலபமாக நுழைந்து விட முடியுமா? "சான்ஸே இல்லை. இங்கே பெரும்பாலும் பரம்பரையா வர்ற வங்கதான் இருக்காங்க. அப்படியே புதிதாக ஒருவர் இந்த வேலையில் நுழைய வேண்டுமென்றால் ரொம்பப் பொறுமை வேண்டும். தினசரி காலையில் வந்துவிட வேண்டும். பல நாட்கள் வேலை கிடைக்காமல் போகலாம்'' என்று சொல்லும் முரளிக்கு பத்து வருட அனுபவம்.

சென்னை ரேஸ்கோர்ஸ் ஜிம்கானா கோல்ப் கிளப்பில் மட்டும் அறுபதுக்கும் குறையாமல் கேடிகள் இருக்கிறார்கள். இவர்கள் ஒருமுறை ஆட்டக்காரருடன் முழு ஆட்டமும் ஆடி வெளி வந்தால், எழுபத்தைந்து ரூபாய் சம்பளம். ஆனால் வருபவர்கள் பர்ஸ் கனத்த கனவான்கள். ஆதலால் கூடுதலாகவே ஐம்பது, அறுபது கிடைக்கும்.

வார நாட்களில் ஆட வருபவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருப்பதால், பல கேடிகளுக்குச் சரிவர வாய்ப்புக் கிடைப்பதில்லை. சனி, ஞாயிறு ஜமாய்த்து விடுகிறார்கள். இது தவிர கோல்ப் போட்டிகள் நடக்கும்போது ஜாக்பாட்தான்.

"இது நிரந்தரமான வருமானம் இல்லை. இருந்தும், இவர்கள் இங்கே தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள். வாரத்துக்கு ஒவ்வொருவருக்கும் குறைந்த பட்சம் முந்நூறு ரூபாய் கிடைக்குமளவுக்கு, வேலை பகிர்ந்து வழங்கப்படுகிறது" என்கிறார் ராஜன். இவர் தான் கேடிகளுக்கு மேஸ்திரி. கேடியாக இருந்து பிரமோஷன். பத்து வயது கார்த்திக் பால் பாய். இந்தப் பொடியனுக்கு முப்பது ரூபாய் கிடைக்கும். கோல்ப் நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ளத் துவங்கி விட்டான் எதிர்கால கேடியான கார்த்திக். பள்ளிப்

• ராஜன்



• முரளி



படிப்புக்கு டாடா காண்பித்தாகி விட்டது.

**இ**ண்டி கோல்ப் மைதானத்தில் பதினெட்டு பச்சைப் புல் வட்டங்களுக்குள் குழிகள் இருக்கின்றன. அங்கு கொடி நாட்டப்பட்டிருக்கிறது. அதுதான் இலக்கு. குழியிருக்கும் இடத்திலிருந்து 400 மீட்டர் தள்ளி ஆட்டம் துவங்குகிறது. முதல் ஷாட்டை 'லாங்' ஷார்ட் என்கிறார்கள். ஏவுகணையைப் போலப் பாய்ந்து செல்லும் பந்து, பச்சை வட்டத்துக்கு வெளியே விழுகிறது. உடனே அங்கே விரைகிறார் ஆட்டக்காரர். அடுத்த அடியை 'சிப்பிங்' என்று சொல்கிறார்கள். பந்து பச்சை வட்டத்துக்குள் தள்ளப்படு



"ஒரே கழுத்துவலி டாக்டர்."
"அடிக்கடி ஜவுளிக் கடைக்குப் போகாதீங்கன்னு போன தடவையே சொல்லித்தானே அனுப்பினேன்."
— சாம்பஸ்ரீ

கிறது. கடைசி அடியை பட்டிங் என்கிறார்கள். இந்த பட்டிங்கில் பந்து குழிக்குள் சென்று விழ வேண்டும். மொத்தம் மூன்று வாய்ப்புகளில் பந்தை குழிக்குள் தள்ள வேண்டும். இதுபோல பதினெட்டுக் குழிகள். பெரும்பாலான கேடிகள் பதினெட்டு குழிகளிலும் கொடுக்கப்படும் வாய்ப்புகளிலேயே பந்தை குழிக்குள் தள்ளும் வித்தகர்கள். இந்த கோல்ப் உதவியாளர்களுக்கென்றே நாட்டில் ஆங்காங்கு போட்டிகளும் உண்டு. ஆனால் கேடிகளுக்கு உள்ள பிரச்னை சொந்தமாக ஸ்டிக்குகளும் பந்துகளும் இல்லாததுதான். அவர்கள் வாங்கும் தினக் கூலிக்கு அவற்றைச் சொந்தமாக வைத்துக் கொள்வது ஒரு கனவுதான். போட்டிகளுக்காக யாராவது ஒருவரின் ஸ்பான்ஸர்ஷிப் வாங்கப்பட்டு, வெளியூர் சென்று விடுகிறார்கள் கேடிகள். அதிர்ஷ்டமும் திறமையும் கைகொடுக்க, ஆயிரக் கணக்கில் பணம் பரிசாக வென்று வருபவர்களும் உண்டு.

**கா**லை, மாலை இருவேளையும் கோல்ப் ஆட்டம் உண்டு. என்றாலும், ஒன்பது மாதங்கள் குதிரைப் பந்தயம் நடக்குமென்பதால் மாலையில் அந்த சமயங்களில் கோல்ப் கிடையாது. இது தவிர மழைக் காலத்தில் கேடிகளின் பிழைப்பில் சுத்தமாக மண் விழுந்து விடும். 'இப்படிப்பட்ட நிலையிலும் கேடிகள் தொடர்ந்து இந்த வேலைக்கு வருவதன் காரணம் என்ன?' என்று மேஸ்திரி ராஜனிடம் கேட்டபோது, "கையில காசு, வாயில தோசை' கதைதான். வேலை இருக்கையில் அன்றன்று செலவுக்குக் காசு கிடைத்து விடுகிறது. மற்ற துறைகளில் தினக் கூலிக்குள்ள அதே பிரச்னை இங்கும் உண்டு. என்ன செய்வது? இங்கேயே பழகிட்டாங்க.. வேறு எங்கும் வேலைக்குப் போகத் தோணாது. படிப்பும் அம்பேல் ஆகிவிடும். பான்பராக், தண்ணி என்று பலரது பாதையும் தடம் மாறும்" என்றார் ராஜன். பெரும்பாலும் ரேஸ் கோர்ஸைச் சுற்றியுள்ள குடிசைப் பகுதிகளில் உள்ளவர்கள் தான் இங்கே பரம்பரை 'கேடி'களாக இருக்கிறார்கள். இரண்டு ஆண் குழந்தைகளுக்கு மேல் இருந்தால் ஒரு பையனைக் 'கேடி'யாக்க முயல்கிறார்கள். இந்த வாழ்க்கையின் கஷ்டநஷ்டங்களை ஒன்றாக அனுபவித்து உணர்ந்து விட்டதால், இளைஞனான கேடிக்கு மூத்த கேடி தனது பெண்ணைக் கொடுப்பது போன்ற நடைமுறைப் பழக்கம் இல்லை. "பெரும்பாலும் எங்களுக்கு லவ் மேரேஜ்தான்" என்கிறார் தபாலில் பட்டப் படிப்பு முடித்த ராஜேஷ். காலையில் இவர்கள் இங்கு ஒன்று கூடுவதை அனுசரித்து சைக்கிளில் டீ விற்பனையும் சூடு பறக்கிறது.

கோடிகளிலும், லட்சங்களிலும் புரளுபவர்கள் பலர் இங்கு வந்தாலும், 'பாப்புலர்' முகங்கள் மிக, மிகக் குறைவு. 'ரஜினியின் இளைய மகள் சவுந்தர்யா சிலகாலம் இங்கே பயிற்சி எடுத்து வந்தாராம்.

— ஸ்ரீநிவாசன்

படங்கள்: ராஜன்

# மூட்டு வலியா?



எல்லா வலி நிவாரணிகளும்
என்னை கைவிட்டபோது
எனக்கு பரிபூரணமா கை கொடுத்தது
ஆர்தோக்யூர் தான், கண்டிப்பா சொல்வேன்
மூட்டுவலின்னா
ஆர்தோக்யூர் தான்.

FOR ALL YOUR JOINT PAINS

Mrs. Akilamani
Old No.53/4, New No.111,
T.T.K.Road, Alwarpet,
Chennai - 600 018.

NO SIDE EFFECTS




ORTHOCURE™

# ஆர்தோக்யூர்™

மாத்திரைகள் மற்றும் ஆயில்

(இது ஒரு இந்திய ஆஸ்திரேலிய கூட்டு முயற்சி)

தமிழகமெங்கும் கிடைக்கும்

MARKETED BY:
KUREWEL PHARMA
CHENNAI-600083
PH:044 2489 3013, 2471 1719

Product of
NATURE REMEDIES (P) LIMITED
CHENNAI-600 083

STOCKISTS

| | | |
|---|---|---|
| Chinmaya Nagar | Vasantha Enterprises | 24795251 |
| Sowcarpet | Srinath Medical Agencies | 25352799 |
| Annanagar | Perfect Medical Enterprises | 26150253 |
| Teynampet | Pitsam Pharmaceuticals | 24338456 |
| Mylapore | S.V.S.Agencies | 24941057 |
| Perambur | Kumaran Pharma Agencies | 26704285 |
| Tiruvottiyur | Kumaran Agencies | 25734336 |
| Tambaram(W) | Sri Saravana Pharma | 22263890 |
| Nanganallur | Sunmoon Enterprises | 22310186 |
| Pudukkottai | A.V.Medical Agencies | 220181 |
| Dindigul | Alagappa Agencies | 2433914 |
| Palani | Best Medical Agencies | 245049 |
| Mayiladuthurai | Chellas Enterprises | 243272 |
| Madurai | Dhanalakshmi & company | 2621421 |
| | Sri Pushpa Agencies | 2630371 |
| Nagapattinam | Eagammai Agencies | 220983 |
| Krishnagiri | Kuttappa Agencies | 231211 |
| Tirupur | Kumaran Pharma | 2427193 |
| Kanchipuram | Kanagavalli Pharma | 220326 |
| Karaikal | Maragatham Medicals | 222079 |
| Coimbatore | M.S.Agencies | 2491554 |
| Thiruvallur | Medicare Agencies | 264997 |
| Arakonam | Murugan Pharma | 224225 |
| Tiruvannamalai | Mohana Agencies | 227689 |
| Tiruvarur | Maharaja Traders | 222894 |
| Pollachi | Pharmaceutical Services | 220435 |
| Pondycherry | Pharm House | 2212001 |
| Cuddalore | Arcot Agencies | 230592 |
| Tindivanam | P.R.R.Pharma | 224313 |
| Karur | Showraa Agencies | 236573 |
| Thanjavur | Sidharth Pharma | 224024 |
| Vandavasi | Srinivasa Medicals | 225135 |
| Chengalpattu | State Pharma Distributors | 222159 |
| Kumbakonam | Sri Bargavi Agencies | 2426426 |
| Ranipet | Sri Rajeswari Pharma | 222788 |
| Villupuram | Saraswathi Agencies | 224224 |
| Tirupattur | Srinivasa Pharma | 227498 |
| Tirunelveli | SPM.Medical mart | 2333801 |
| Erode | Shri Ramana Medical Agencies | 2253421 |
| | ESS Jay Agencies | 2268855 |
| Chidambaram | Salamia Distributors | 220871 |
| Arni | Sri Guna & Company | 226470 |
| Nagercoil | Saravana Pharmaceutical | 232341 |
| Trichy | Uthra Marketing | 2760542 |
| | V.R.Agencies | 2740933 |
| Salem | Vinayaga Agencies | 2266098 |

# பூப்போல பூப்போல

ஊட்டப் பிசைந்த ரசம் சோறு. நெய் மணக்கும் சோறு. ஓரத்தில் ஒடித்து வைத்த அப்பளம். ஒரு கடி அப்பளம். பிறகு ஒரு பிடி சோறு. சில சமயம் அப்பளம்தான் ஒவ்வொரு பிடியாய் உள்ளே இறங்கும். சோறு அப்படியே நிற்கும். சஹானாவின் இராத்திரி சாப்பாடு நிச்சயம் முரளிதான் கொடுக்க வேண்டும்.

"எட்டு வயசாச்சு. உன் சாப்பாட்டை நீயே சாப்பிடலாம்" சங்கீதா சொல்லும்போதெல்லாம் முரளி மறுத்துவிடுவான். "நானே கொடுக்கிறேன் சங்கீதா" என்பான்.

"கதை சொல்லுப்பா..."

இந்த நேரத்தில் தினம் தினம் சஹானாவின் கதையைச் சொல்ல வேண்டும். குழந்தையைத் தூக்கி வந்த உடனேயே அடாப்ஷன் மையத்திலிருந்து சேச்சி வீட்டிற்கு வந்து விட்டார். பிறகு ஒவ்வொரு மாதமும் இன்ஸ்பெக்ஷனுக்கு வந்தார். அவருக்கே அந்தக் குழந்தையோடு குடும்பம் இறுகி விட்டது என்று நம்பிக்கை வந்தவுடன்தான் மாதாந்திர இன்ஸ்பெக்ஷன்கள் நின்றன.

**பாரதி பாஸ்கர்**

அவரது ஆலோசனையின் பேரில்தான் மூன்று வயதிலிருந்தே சஹானாவுக்கு அவள் தத்தெடுத்த குழந்தை என்பது கதை மாதிரி சொல்லப் பட்டது.

"அம்மாவும் அப்பாவும் குழந்தையே இல்லைன்னு சாமிகிட்ட வேண்டிக்கிட்டாங்களாம். ஒரு நாள் சாமி சொன்னாராம், உனக்குப் பிடிச்ச பாப்பாவை எடுத்துக்கோன்னு. அம்மா அடாப்ஷன் சென்டர் போய் மல்லிகா சேச்சியைப் பாத்தாங்களாம். அவங்ககிட்ட தேவதை மாதிரி ஒரு பாப்பா இருந்தாளாம். அந்த பாப்பாவை வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தாங்களாம். அவதான் சஹானாவாம்."

தினம் சொல்லும் கதை. ஆனால் வார்த்தையோ சம்பவத் தொடரோ மாறக் கூடாது. ஒவ்வொரு வரிக்கும் நடுவே "ம் வாயைத் திற" சொல்லி சோற்றை ஊட்ட வேண்டும். ஒரு கிண்ணம் சோறு உள்ளே போனபின் தண்ணீர் ஊட்ட வேண்டும். பிறகு பாத்ரூம் அழைத்துப் போக வேண்டும். படுக்கையில் உட்கார்ந்து அப்பா அம்மாவுக்கு 'குட் நைட்' சொல்ல வேண்டும். குட் நைட் சொன்ன பிறகும் தூக்கம் பிடிக்காத நாட்களில் முரளி குழந்தையை மடியில் போட்டுத் தட்டுவான். கள்ளக் குரலில் ராகம் இழுப்பான். பெரும்பாலும் சஹானா ராகம். "நீ பாடும்மா" என்று சஹானா அடம் பிடித்தால், தன்




**தலையங்கம்**

'பட்ஜெட் லாண்ட்ரி' கார்ட்டூன் இன்றைய தமிழ் நாட்டின் நிலைமையை மிகத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டியது. பிழியப் பிழியச் சிரித்தேன்.

**வட்டமேஜை**

'பொம்மி' திருவாரூர்

அப்பா கற்பித்திருந்த வள்ளலார் பாடல்களை சங்கீதா பாடுவாள். வள்ளலார் பாடல்களின் எளிமை அவளுக்குப் பிடிக்கும். 'ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற' அல்லது 'அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்' பாடியவுடன் சஹானா இவளோடு கன்னம் இழைக்கும். அவள் நீட்டிய விரலைப் பிடிக்கும். எட்டு வயதுக்குப் பேச்சு அதிகம். பள்ளியில் சேர்க்கும்போது பிறப்புச் சான்றிதழ்தான் வேண்டும் என்று அசட்டுத்தனமாக அடம் பிடித்த பள்ளியின் ஆசிரியையிடம் போய் நின்றது. "எனக்கு ஸ்கூல் கிடையாதா? அந்தப் பாப்பாவை மட்டும் சேர்க்கறீங்க" என்றது. ஆசிரியை ஒரு நிமிடம் விக்கித்துப் போனாள். பிறகு பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாக, தத்தெடுக்கும் மையத்தில் கொடுத்த தத்தெடுப்புச் சான்றிதழ் போதும் என்று சொல்லிவிட்டாள்.

போன வாரம் மாமியாரின் தம்பியும் அவர் மனைவியும் வந்தார்கள்.

இவள் உள்ளே புடைவை கட்டிக் கொண்டிருந்தாள். இவளுக்குக் கேட்கும் என்று தெரியாமல் கூடத்தில் விளையாடிய சஹானாவிடம் பேச்சுக் கொடுத்தார் மாமியாரின் தம்பி.

"ஏய் குட்டி, உன்னைக் கறிவேப்பிலைக்காரிகிட்ட வாங்கினாங்க தெரியுமா?" என்றார்.

பக்கத்தில் இருந்த அவர் மனைவி, "எல்லாக் குழந்தைங்க கிட்டயும் விளையாடினா மாதிரி



இங்கே வேணாம். இது நிஜமாவே கறி வேப்பிலைக்காரி குழந்தையா இருக்கலாம்" என்றாள்.

சஹானா இருவரையும் வெறித்துப் பார்த்தது. பம்மென்ற தலை அதற்கு. எண்ணெய் வைத்தாலும் அழுங்காத தலை.

"நான் தேவதை மாதிரி பாப்பான்னு என் அம்மா கொண்டு வந்தாங்க. அடாப்ஷன் சென்டரிலிருந்து, கறிவேப்பிலைக்காரிகிட்ட வாங்கல" என்று கத்தினாள்.

கையில் காஃபியோடு வந்த மாமியார் தன் தம்பியை அடக்கினாள். "வாயைக் கொடுக்காத பாலு. அவள் அம்மா மாதிரியே இதுவும் பாயிண்ட் பாயிண்டாப் பேசும்" என்றார்.

சங்கீதா மனசுக்குள் மாமியாரை வணங்கினாள். மருமகள் வாயாடி என்று எந்த மாமியாரும் சொல்வதுதான். ஆனால் நான்தான் குழந்தையின் அம்மா என்று தன் தம்பியிடம் தீர்மானமாய்ச் சொல்லி விட்டாளே. "இந்தா, யாருக்கு தட்டுகெட்டு பொறந்ததோ, என் பிள்ளை தலையில் கட்டாதே, எங்க பரம்பரையில் யாருக்கும் குழந்தை இல்லாமல் இருந்ததே கிடையாது. உங்க குடும்பத்தில் என்ன குறையோ! என்ன எழவோ, என்ன ஜாதின்னு, என்ன மதம்னு தெரியாமக் கறுப்புப் பல்லி மாதிரி தூக்கிண்டு வந்தியே. மொதல்ல திரும்ப கொடுத்துட்டு வா" என்று அன்று சொன்னவள் இன்று "அம்மாவும் பொண்ணும் ஒரே மாதிரி" என்கிறாளே. இத்தனை வருஷப் பொறுமை தோற்றுப் போகவில்லை...

சஹானாவின் வகுப்புத் தோழர்களுக்கெல்லாம் குட்டிக் குட்டி தம்பிகளும் தங்கைகளும் பிறந்து கொண்டிருந்தார்கள்.

"எனக்கு... ப்ரீதி மாதிரி எனக்கும் தம்பிப் பாப்பா..." என்றது சஹானா.

"ச்சீ, நம்ம வீட்டில ஒரு பாப்பாதான். அது நீதான்" என்றாள் சங்கீதா.

'மல்லிகா சேச்சிகிட்ட கேட்டு அடாப்ஷன் சென்டர்ல போய் தம்பிப் பாப்பா வாங்கி வாம்மா'


"சரி, சரி, ஸ்கூலுக்கு நேரமாச்சு" பிள்ளையை விரட்டி விரட்டித் தயார் செய்து, யூனிஃபார்ம் மாட்டி, ஷூ போட வைத்து, பின்னல் போட்டு, தன் ஸ்கூட்டியில் பள்ளியில் விட்டுவிட்டு அலுவலகம் போகும் வரையில் சங்கீதாவுக்கு வியப்புத் தாங்கவில்லை. அடாப்ஷன் சென்டர்ல போய் தம்பிப் பாப்பா வாங்கி வருவதாமே!

"சங்கீதா நாளைக்கு எக்ஸ்பென்ஸ் ரிவ்யூ, செலவுக் கணக்கு பார்க்கும் நாள். எல்லாம் தயாராக்கிடு" கட்டளை போட்டுவிட்டு நிர்வாகி ஓடினார். சங்கீதா சென்ற ஆறு மாதத் தகவல்களைக் கொடுத்தாள். எந்த டிபார்ட்மெண்ட் பட்ஜெட் மீறிச் செலவழித்தார்கள்? தபால் செலவு என்ன? கூரியர் செலவு எவ்விதம்? குண்டூசிக் கணக்கென்ன? பிரிண்டர் ரிப்பன் மாற்றியது எவ்வளவு முறை? நவீன பரமபதம் போல் செலவுகள் எக்ஸெல் சதுரங்களில் ஏறின. இறங்கின. நேரம் போவது தெரியாமல் வேலை இழுத்தது. தினம் மூன்று மணிக்கு வீட்டிற்கு ஃபோன் செய்து குழந்தை வந்தாயிற்றா, என்று கேட்பது இன்று மறந்து போனது.

"சங்கீதா, உங்களுக்கு ஃபோன். யாரோ மல்லிகாவாம்" மல்லிகா என்றால் சேச்சி. எதற்கு ஃபோன்? குழந்தையின் நிஜ அம்மா யாராவது முளைத்திருக்கிறாளா, சினிமா மாதிரி. ச்சீ, அதற்கெல்லாம் சாத்தியமே யில்லை. தலையை உலுக்கி சங்கீதா ஃபோனை எடுத்துக் கொண்டாள்.

"சேச்சி, நல்லாயிருக்கீங்களா?"

"இருக்கேன்பா. சஹானா இன்னிக்கு ஃபோன் போட்டு தம்பிப் பாப்பா வேணும் சேச்சின்னு கேக்கறா. நீங்க இரண்டாவது குழந்தை தத்து எடுக்கப் போறீங்களா? வாழ்த்துக்கள். அப்பத்தான் குடும்பம் முழுமையா இருக்கும். எப்ப வரப் போறீங்க..." வழக்கம் போல் சேச்சி நிறுத்தாமல் பேசினாள். சங்கீதாவுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. "வர்றோம் சேச்சி, ஞாயிற்றுக்கிழமை பார்க்கலாம்" பொதுவாகச் சொல்லிவிட்டு ஃபோனை



"எங்க மண்டபத்துல கல்யாணத்தை நடத்துனீங்கன்னா உங்களுக்குச் சாப்பாட்டுச் செலவை மிச்சம் பண்ணித் தருவோங்க...!"

"எப்படி?"

"உங்க கல்யாணக் கூட்டத்தைப் பின்புற வழியா பக்கத்து மண்டபத்து பந்திக்கு அனுப்பிச் சாப்பிட வைச்சுடுவோம்...!"

- கிரிஜா மணாளன்

# கோகுலம்

மே 2003

● விஞ்ஞானி கடத்தல்!

- புதிய படக்கதை ஆரம்பம்



யாருக்கு, எத்தனை ஐஸ் கிரீம்? - ஜாலியான விளையாட்டு

பரிசு மழை!

★ அழ. வள்ளியப்பா நினைவு கதைப் போட்டி
★ கோடை விடுமுறைப் போட்டி-I
★ 1000/- ரூபாய் பரிசுப் போட்டி

ரூ.6/- மட்டுமே

கோடை விடுமுறையை கோகுலத்துடன் செலவிடுங்கள்!


வைத்து விட்டாள்.

இரவு முரளி யோசித்தான். 'செய்யலாம் சங்கீதா. நமக்கு வேணும்னு இவளை எடுத்தோம். இவளுக்கு வேணும்னு இரண்டாவது குழந்தை தத்து எடுப்போமே...' என்றான். "குழந்தைக்குக் கம்பெனி வேணுமின்னா நாமதான் உதவி செய்யணும்" என்றான்.

சாரங்கா வீட்டிற்கு வந்து இன்றோடு ஒரு வாரம் ஓடிவிட்டது. இந்தமுறை குழந்தையை வீட்டிற்கு எடுத்துவர முரளியும், மாமியாரும் சஹானாவும், ஊரிலிருந்து அம்மாவும்கூட வந்தது சங்கீதாவுக்கு நிறைவாக இருந்தது.

ரப்பர் ஷீட் மேல் மெல்லிய புடைவையை விரித்துக் குழந்தையைப் படுக்கப் போட்டபோது,

'அப்பா என் கதை வேண்டாம். சாரங்கா கதை சொல்லு' என்றது சஹானா.

"சொல்றேன். அதுக்கு முன்னாடி நீ சொல்லு. நம்ம நாலு பேர் பேருக்கும் ஒரு பொருத்தம் இருக்கு. அது என்ன?" முரளி கேட்க சஹானா திருதிருவென விழித்தது.

"நம்ம நாலு பேருக்கும் மியூசிக்கோட சம்பந்தம் இருக்கு. சங்கீதான்னா பாட்டு, முரளின்னா குழல், சஹானாவும் சாரங்காவும் ராகத்தோட பேரு" சங்கீதா சொன்னாள். சஹானாவின் முகம் யோசிப்பில் நீண்டது.


"இன்னம்கூட இருக்கும்மா. நம்ப நாலு பேரும் வேற வேற வீட்டிலேர்ந்து வந்திருக்கோம். நீ வேற வீடு. அப்பா வேற வீடு. நான் ஒரு வீடு. சாரங்கா ஒரு வீடு. ஆனா இப்ப நாலு பேரும் ஒண்ணா ஒரு ஃபேமிலியா இருக்கோம்.' வழக்கம் போல் சஹானா மடமடவென்று பேசியது. சங்கீதாவும் முரளியும் பேச்சற்று உறைந்து நின்றனர்.

பிரபஞ்சமெல்லாம் உருவில்லாமல் ஸ்தூலமாய் நிற்கும் அன்பு அந்தச் சின்ன படுக்கையறையில் நிறைந்தது போலிருந்தது.

முரளி சஹானாவைக் கட்டிக் கொண்டான். பிறகு சாரங்காவையும் மடியில் போட்டுக் கொண்டான். சங்கீதாவின் கையையும் பிடித்துக் கொண்டான். பேச்சற்ற நிறைவில் சங்கீதா குழந்தைகளைப் பார்த்தாள். இரண்டும் இரண்டு பூக்களைப் போலத் தூங்கிக் கொண்டிருந்தன.

(முற்றும்)


# புத்தம் புதுசு!



நவநாகரிக நங்கையர் பெரிதும் விரும்பி அணியும் எஸ்டெல் ஜுவல்லரி, 'சி இஸட் கலெக்ஷன் 2003' என்ற பெயரில் லுமினிசென்ஸ் ரக நகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. வண்ணக் கற்களும், க்ரிஸ்டல்களும் பதிக்கப்பட்ட வெள்ளி, வைட் மெட்டல் ஆபரணங்கள் ஐம்பதிலிருந்து இரண்டாயிரத்து எண்ணூறு ரூபாய் வரை கிடைக்கின்றன.

ஸ்டீல்வின் ரிக்லைனர் நாற்காலி உங்கள் வசம் இருந்தால், அதை சாய்வு நாற்காலியாகவோ, ஓய்வு படுக்கையாகவோ, பயன்படுத்தலாம். பன்னிரண்டு மாத உத்திரவாதத்துடன் கிடைக்கும் ஸ்டீல்வின் ரிக்லைனர் நாற்காலிகளை வீட்டில் இருப்பவர்கள் அனைவரும் சௌகரியத்துக்கு ஏற்ப பயன்படுத்தி மகிழலாம்.

**ஸ்டீல் வின் மெட்டல் ப்ராடெக்ட்ஸ், 131, தேவதா ப்ளாஸா, ரெஸிடென்ஸி ரோடு, பெங்களூர் - 560 025.**



சருமப் பாதுகாப்பு, புத்துணர்ச்சி, நறுமணம் என, குளியல் சோப்புக்குண்டான அத்தனை தகுதிகளையும் பெற்றுள்ள ஹமாம் சோப், தற்போது புதிய சலுகையில் கிடைக்கிறது. நூறு கிராம் எடை கொண்ட நான்கு ஹமாம் சோப்புகள் வாங்குபவர்களுக்கு ரூ.12.50 மதிப்புள்ள 'கிளினிக் ப்ளஸ்' ஷாம்பு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.




நாள் முழுக்க ஒரே இடத்தில் உட்கார்ந்து வேலை செய்வதால், போதிய உடற்பயிற்சியோ, நடைப் பயிற்சியோ இல்லாமல் போய்விட்டது. வீட்டில் ஒரு 'ஸ்வேதா ஜாக்கர்' கருவியை வாங்கி வைத்துக் கொண்டால், எளிதாக இயக்கி பயன்பெறலாம். எளிய விலையில் ஆரோக்கியம் பெறலாம்.

**ஏஷியன் என்டர்பிரைசஸ், 25, பெருமாள் கோயில் தெற்கு முதல் குறுக்கு லேன், வடபழனி, சென்னை - 600 026.**



# அடக்கி வைத்தால் வேண்டாம் தகராறு... எதிராப் போனா தகராறுதான்!

யூராலஜிஸ்ட், கைன காலஜிஸ்ட் என்று கேள்விப் பட்டிருப்பீர்கள். 'யூரோ-கைனகாலஜிஸ்ட்' இப்படி அழைக்கப்படும் சிறப்பு மருத் துவர்கள் சமீபகாலமாகத் தோன்றி வருகிறார்கள். அதாவது சிறுநீர் உறுப்புகள் மற்றும் பெண்ணின் இனப் பெருக்க உறுப்புகள் ஆகியவற்றின் சிகிச்சைகளில் ஸ்பெஷலைஸ் செய்பவர்கள்.

மேற்படி சிறப்புப் பிரிவு மருத்துவரான டாக்டர் ராஜ மகேஸ்வரி, பெண்களுக்கு ஏற்படும் சில சிறுநீர் தொடர்பான சிக்கல்களையும் அவற்றிற்கான காரணங்கள் மற்றும் தீர்வுகளையும் இங்கு விளக்குகிறார் :

ரயிலிலோ, பஸ்ஸிலோ நீண்ட தூரம் பயணம் செல்லும் பெண்கள் சிறுநீர் கழிக்காமல் அடக்கி வைத்துக் கொள்கிறார்கள். இடைப்பட்ட டாய்லெட்டுகள் அசுத்தமாக இருக்கக் கூடும் என்ற அச்ச உணர்வு இதற்கு முக்கியக் காரணம். பள்ளிக்குச் செல்லும் சில பெண்கள்கூட காலையில் வீட்டில் சிறுநீர் கழித்துவிட்டுக் கிளம்பினால், மீண்டும் மாலை வீடு வந்த பிறகுதான் சிறுநீர் கழிக்கிறார்கள். இது மிகவும் தவறான போக்கு.

ஒரு பலூனை ஊதிக் கொண்டே போனால் அதன் பக்கச் சுவர்கள் மிகவும் பலவீனமடையும். ஒரு குண்டூசியால் இலேசாகத் தொட்டாலே அது வெடித்துவிடவும் வாய்ப்பு உண்டு. அதுபோலதான் சிறுநீர்ப்பையும். வெளியேற்றப்படாமல் சிறுநீர் சேர்ந்து கொண்டேயிருந்தால் அது உடலுக்கு நல்லதல்ல.

நீண்ட நேரம் வெளியில் இருக்கும்போது சிறுநீர் கழிக்கும் தேவை வந்துவிடக் கூடாது என்பதற்காக, திரவங்களை அப்போது உட்கொள்வதைத் தவிர்க்கிறார்கள் பெண்கள். இதனால் இன்னும் மோசமான நிலை ஏற்படுகிறது. சிறுநீர் மிகவும் அடர்த்தி கொண்டதாக மாறிவிடுவதால், அந்தப் பகுதியில் ஒருவித நமைச்சலோ, கடுப்பான உணர்வோ ஏற்படும். தவிர பாக்டீரியா போன்ற கிருமிகள் உருவாகிப் பரவவும் வாய்ப்பு அதிகம்.



* டாக்டர் ராஜமகேஸ்வரி

பொதுவாகவே பெண்களுக்கு சிறுநீர்ப் பாதையில் தொற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகம். இதற்கு முக்கியக் காரணம்



சிறுநீர்ப்பாதை, கருப்பைப் பாதை, மலப் பாதை ஆகிய மூன்றும் அடுத்தடுத்து வெகு நெருக்கமாக அமைந்திருப்பது (மலம் வெளியேறும் பாதையில் இருக்கக்கூடிய கிருமிகள் சிறுநீர்ப் பாதைக்குள் சென்றுவிடக் கூடாது என்பதற்காகதான், பாத்ரூம் போனவுடன் முன்புறத்திலிருந்து பின்புறமாக மட்டுமே அந்தப் பகுதியைத் தண்ணீர் விட்டு நன்கு சுத்தம் செய்ய வேண்டும் என்று கூறுவோம்).

சிறுநீர் வெளியேற்றக் குழாய் (யுரித்ரா) பெண்களுக்கு மிகச் சிறிதாகவே அமைந்திருக்கிறது. இதன் காரணமாக, அண்டைப் பகுதிகளில் உள்ள கிருமிகள் சுலபமாக சிறுநீர்ப் பைக்குள் சென்று பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

தவிர, மாதவிலக்கு நிற்கும் காலத்தில் சில ஹார்மோன்கள் குறைவாகச் சுரப்பதால் மேற்படி பாதை குறுகுகிறது. இதனாலும் பாதிப்பு ஏற்படலாம்.

நீரிழிவு நோயால் பாதிக்கப்படும் பெண்களுக்குச் சிறுநீரகக் கோளாறுகள் ஏற்படும் வாய்ப்பு மேலும் அதிகம். ஏனென்றால் நீரிழிவு நோய் சிறுநீர்ப்பையைப் பாதிக்க வாய்ப்பு உண்டு. அப்போது தன்னிடம் உள்ள சிறுநீரை முழுவதுமாக வெளியேற்றும் தன்மை சிறுநீர்ப்பைக்குக் குறைந்து விடுகிறது. இதனால் எப்போதும் கொஞ்சம் சிறுநீர் அங்கு தங்குகிறது. இதன் காரணமாக பாதிப்புகள் அதிகமாகின்றன.

சிறுநீர்ப்பையின் வேலையே சிறுநீரைச் சேகரித்து வைத்துக் கொள்வதும், சரியான சமயங்களில் அதை வெளியேற்றுவதும்தான்.

ஆனால் சில குறிப்பிட்ட நரம்பு வியாதிகள் உண்டாகும்போது, சிறுநீர் எதிர்ப் பாதையில் செல்லத் தொடங்குகிறது. அதாவது சிறுநீரகத்திலிருந்து சிறுநீர்ப்பைக்கு வருவதற்கு பதிலாக, எதிர்த் திசையிலும் இயங்கத் தொடங்குகிறது. இதனால் சிறுநீரகம் பாதிக்கப்படவும் வாய்ப்பு உண்டு.

பொதுவாக ஒரு நாளில் இரண்டு லிட்டர் சிறுநீர் வெளியேறலாம். பகலில் ஆறேழு முறையும், இரவில் தூக்கத்தினிடையே விழிப்பு வந்து ஓரிரு முறையும் சிறுநீர் கழிக்கலாம். இந்த எண்ணிக்கையைத் தாண்டினால் மருத்துவரை அணுகுவது நல்லது.

சிறுநீர் மஞ்சளாகக் காணப்பட்டாலே அது கவலைப் பட வேண்டிய விஷயமில்லை. காலையில் முதன்முதலாகக் கழிக்கும் சிறுநீரும், நெடுநேரம் அடக்கி வைத்திருந்து பிறகு கழிக்கப்படும் சிறுநீரும் இப்படி மஞ்சள் வண்ணத்தில் காணப்படலாம். மற்றபடி, தண்ணீர் போன்ற நிறத்தில்தான் சிறுநீரும் இருக்க வேண்டும். மஞ்சள் காமாலை நோயாலோ, பி-காம்ப்ளெக்ஸ் போன்ற மாத்திரைகளை உட்கொள்வதாலோகூட சிறுநீர் மஞ்சள் நிறத்தில் காணப்படலாம்.

தினமும் ஒன்றிலிருந்து இரண்டு லிட்டர் வரை தண்ணீர் குடிக்க வேண்டும். 'தண்ணீர் சிகிச்சை' என்றபடி சிலர் காலையில் எழுந்ததும் எக்கச்சக்கமாக தண்ணீர் குடிக்கிறார்கள். இதயம் மற்றும் சிறுநீரக பாதிப்பு எதுவும் இல்லையென்றால், இந்த சிகிச்சையினால் எந்தத் தீமையும் இல்லை. அதிகத் தண்ணீர் குடித்தால் சிறுநீர்ப் பையில் உள்ள சில கிருமிகளும் சேர்ந்து அடித்துச் சென்று வெளியேற்றப்படும் என்கிற வகையில் இது நல்லதுதான்.

கோடைக்காலம் வருகிறது. எனவே அனைவரும் - முக்கியமாகப் பெண்கள் - நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். பள்ளி நிர்வாகிகள் தங்கள் பள்ளியில் உள்ள கழிப்பறைகள் சுத்தமாக இருக்கும் வகையில் கவனம் செலுத்த வேண்டும்.

எண்பது சதவிகிதம் பெண்கள் ஏதோ ஒருவித சிறுநீர்ப் பிரச்னையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சில பெண்களுக்கு இருமினாலோ, சிரித்தாலோ, தும்மினாலோ சிறுநீர் வெளியேறி விடும். இப்படிப்பட்டவர்கள் எங்களைப் போன்ற சிறப்பு மருத்துவர்களை அணுகினால் முறையான சிகிச்சை பெற்று குணமடையலாம்.

- குல்லூ


---

''அந்தக் கட்சியோட தலைவர் காவடி எடுத்துக்கிட்டு வடக்குப் பக்கமா ரொம்ப தூரம் போறாரே, ஏன்?''

''டில்லிக்குக் காவடி தூக்கிட்டுப் போனால் தான் உங்க எதிரியைப் பதவி நீக்கம் செய்ய முடியும்னு ஆஸ்தான ஜோதிடர் சொன்னதைத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டாராம்!''



- சீர்காழி வி.ரேவதி



**என்ன ஆச்சு?**

தேவவிரதனின் 'நாமும் ஒரு கனவோ' சிறுகதையில் ஸ்மிதா என்பது ரம்யாவாகவும், 'முணு முணுக்கிறான்' என்பது 'முமுக்கிறான்' என்றும் அச்சாகியுள்ளதே!

**வட்டமேஜை**

கி. இளங்கோ, சேலம்

ஒவ்வொரு குறிப்பும் உணர்த்தும் விடையை எதிரே உள்ள கோடுகளில் நிரப்புங்கள். வட்டத்துக்குள் உள்ள எழுத்துக்களை மட்டும் ஒழுங்குபடுத்தினால் விடைப் பகுதியில் உள்ள குறிப்பு உணர்த்துவது கிடைத்துவிடும்.

1. 'ஹாய்' முதல் 'அன்பே சிவம்' வரை * _ _ _
2. 'நாயகன்' முதல் 'சண்டியர்' வரை * _ _ _
3. முருகனின் மனைவி பெயரில் கிழங்கு * _ _ _
4. முடிவடைந்த டீ.வி.சீரியலின் பெயரில் உறவுக்காரப் பெண்மணி _ _ * _
5. மிருக அபிமானி நடிகை - இந்தியில் நெல்லிக்காய் _ _ * _
6. செவ்வாடை அடிகளார் - தெலுங்கில் தங்கம் * _ _ _ _

மலையாளத்திலிருந்து தமிழுக்கு _ _ _ _ _ _ _ _

— ஜி.எஸ்.எஸ்.



# கலையே...மணியே!

கலாபவன் மணி

விடைகள்: 1.மதன், 2. கமல் 3. வள்ளி 4 அண்ணி 5. அமலா 6. பங்காரு

# பரிணாமப் பசி

வெங்கடேசன் தன்னைச் சுற்றி நடப்பவையை ஒரு பொருமலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஏய், சுமதி! தாத்தா, பாட்டிக்கு நமஸ்காரம் பண்ணிட்டு கையில் தேங்காய் கொடுத்து வாங்கிக் கொள். அப்புறம் மணையில் உட்காரலாம்". இது ஜெயராமனின் மகள் காயத்ரி. எப்பொழுதும் சிம்மக்குரல் அவளுக்கு.

"இத பாரு. இது அவளுக்கு எட்டாம் மாசம். ஒவ்வொருத்தருக்கா குழந்தையை நமஸ்காரம் பண்ணச் சொல்லி கட்டாயப் படுத்தாதே!" நமஸ்காரம் பண்ணப் போனவளைத் தடுத்த ஜெயராமன்,

"எல்லாரையும் ஒண்ணா நிக்கவைச்சு நமஸ்காரம் பண்ணிடும்மா சுமதி" என்று பரிவுடன் சொன்னார்.

தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, மாமனார், மாமியார் எல்லாரும் சேர்ந்து நிற்க, நமஸ்காரம் செய்த சுமதி மணையில் உட்கார்ந்தாள்.

சுமங்கலிப் பெரியவர்கள் ஒருவர் பின் ஒருவராக சந்தனமிட்டு, குங்குமமிட்டு, வளையல்கள் அணிவித்தனர்.

"அத்திம்பேர், நீங்க தன் கையிலே வளையல் போடலியேன்னு அக்காவுக்கு ஆதங்கம். அந்த ஆசையை நீங்க பூர்த்தி பண்ணலேன்னா, பிறக்கப் போற குழந்தை காதிலேருந்து சீழாக் கொட்டும். நாத்தமோ நாத்தமடிக்கும்"_ மூக்கைப் பொத்திக் கொண்டு சீனிவாசனைக் கலாட்டா செய்தாள் சுமதியின் தங்கை ரேவதி. 'கொல்' என்ற சிரிப்பு.

"அவ்வளவுதானே, அடுக்கிட்டாப் போச்சு" என்று சொல்லிக் கொண்டே சீனிவாசன் 'டக்' என்று எழுந்து பெண்கள் செய்தது போல், சந்தனம், குங்குமம் இட்டு சுமதியின் கையில் வளையல்களை அடுக்கினான். சுமதியின் கன்னங்கள் நாணத்தால் குங்குமமாயின. வீடே ஆனந்தமயமாகி எல்லாருடைய முகமும் பூவாக மலர்ந்திருப்பதைக் கண்டார் வெங்கடேசன்.

டாலர்களையும், ஷேர் சர்டிபிகேட்டுகளையும் பார்த்திருக்கிறாரே தவிர, இந்த மாதிரி வண்ணமயமான விழா எதுவுமே நடந்ததில்லை வெங்கடேசன் வீட்டில். அவருக்குத் தம்பியைப் பார்த்துப் பொறாமை ஏற்பட்டது.

'இன்னிக்கு வெள்ளிக்கிழமை. பத்தரையிலிருந்து பன்னிரண்டு ராகுகாலம். மளமளன்னு சீமந்தத்துக்குத் தயாராகுங்கோ", சந்துரு சாஸ்திரிகள் உரிமையுடன் சப்தம் போட்டுக் கொண்டே, வெங்கடேசன் அருகில் நாற்காலியில் வந்தமர்ந்தார். இவரது குடும்பத்தாருக்குப் பல ஆண்டுகளாக சுப, அபர காரியங்களுக்கு சந்துரு சாஸ்திரிகள்தான்.

"ஏம்பா, வெங்கடேசா, உன் தர்மபத்னி வரலியோ?" என்றார்.

"இல்லே மாமா. இரண்டாவது பெண் சுபாவுக்கு இது இரண்டாவது பிரசவம். அமெரிக்காவிலேயே டெலிவரி நடந்தாத்தான் அந்தக் குழந்தைக்கு சிடிஸன்ஷிப் கொடுப்பா. உஷா ஸ்டேட்ஸ் போய் இரண்டு மாசமாச்சு. மார்ச்சில்தான் வருவா."

"ம்... தனியாயிருக்கியா? சாப்பாடெல்லாம் இங்கேருந்து அனுப்பறாளோ?" - வம்புக்குப் போனவர் சந்துரு சாஸ்திரிகள்.

"இங்கே குரோம்பேட்டையிலிருந்து நான்

**எல்லாமே ஒண்ணுதான்!**

**வட்டமேஜை**

டி. செல்வன், நெல்லையப்பபுரம்

தீவிரவாதத்தைப் பகடைக்காயாக்கி உள் நாட்டுப் பிரச்னைகளைத் திசை திருப்பிக் கொண்டிருக்கும் நமது அரசியல்வாதிகளிடம் காஷ்மீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழி சொல்லிக் கொண்டிருப்பது வேண்டாத வேலை. அவர்களுக்கு பண்டிட்டுகள் செத்தாலும் இஸ்லாமியர் செத்தாலும் ஒரு நாள் கூத்துதான்!

## கே.ஆர்.சாவித்ரி

**வை**த்தியநாத ஐயருக்கு மூத்தமகன் வெங்கடேசன். இரண்டாவது மகன் ஜெயராமன். வைத்தியநாத ஐயர் குடும்பம் பிரபல தஞ்சை மிராகதார் குடும்பம். காவிரி, அரிசிலாறு பாய்ச்சலில், அக்கால மூன்று போக சாகுபடி நிலங்கள் ஏராளம். வைத்தியநாதன் காந்தி பக்தர். பூதான இயக்கத்துக்கு நிலங்களைத் தானமாகக் கொடுத்தார். வெங்கடேசனுக்குப் படிப்பு



நன்றாக வந்தது. பியூஸியில் மாநிலத்திலேயே முதல் மாணவனாக வந்தான். கிண்டியில் இன்ஜினியரிங் படிப்பேன் என அடம்பிடித்தான். எம்.டெக். முடித்தான். இளைய மகன் ஜெயராமன் படிப்பில் சுமாருக்கும் கீழ் ரகம். குடந்தைக் கல்லூரியில் பி.ஏ. எகனாமிக்ஸ் முடிக்கவே உன்பாடு, என்பாடு என்றாகி

இருக்கிற தி.நகருக்கு தினமும் அனுப்ப முடியுமா? 'அங்கேயே ஒரு மாமி மெஸ்ஸி லிருந்து மூணு வேளையும் வந்துடறது'_ பேச்சைத் துண்டித்துக் கொள்ள ஆசைப் பட்டார் வெங்கடேசன். விடுவாரா சந்துரு?

"எல்லாரையும் தூரதேசத்தைப் பார்க்க அனுப்பிச்சிட்டு தனியா யிருக்கே. இந்தப் பட்டணத்திலே இப்ப நிறைய வீட்டுலே இதுதானே நடக்கிறது. பாதி மெட்ராஸ் அமெரிக்காவுக்குப் போயிடுத்தே. இப்ப கனவுக்கன்னியே அமெரிக்காதானே"_ வேட்டுச் சிரிப்புச் சிரித்தார் சாஸ்திரிகள். எரியும் நெருப்பில் எண்ணெய் விட்டது போல் இருந்தது அந்த ஏளனச் சிரிப்பு.

விட்டது. அப்பாவுடன் நிலங்களைப் பார்த்துக் கொள்வதில் ஏக ஆர்வம். பயிர் வளர்ச்சியைப் பார்த்துக் கண்டு முதலைக் கணக்காகச் சொல்லிவிடுவான். "அப்பா, அண்ணாவுக்குச் சரஸ்வதி கடாக்ஷம் இருக்கு. நான் பூமித்தாயின் செல்லப் பிள்ளையாயிருக்கேன்" என்று வேட்டி கட்டிக் கொண்டு, குடை சகிதம் நடக்கும் மிராசுதாரானான். சகோதரனின் அறிவைக் கண்டு அளப்பரிய பெருமை ஜெயராமனுக்கு. நேர்மாறாக வெங்கடேசன், அவனை இடது கண் ஓரத்தால்தான் பார்ப்பான்.



"உங்க பொண்ணைத் தீயணைப்புப்படை வீரருக்குத்தான் கட்டிக் கொடுப்பேன்னு சொல்லித் தொலைச்சீங்களா...?"

"ஆமா, எதுக்கெடுத்தாலும் எரிஞ்சு எரிஞ்சு விழறாளேன்னு அப்படிச் சொன்னேன், அதுக்கென்ன இப்ப...?"

"அவ ஒரு தீயணைப்புப்படை வீரரைக் காதலிக்கிறதை நீங்க எப்படியோ புரிஞ்சுக் கிட்டுத்தான் அப்படி வாக்குக் கொடுத்தீங்களாம், பூரிச்சுப் போயிருக்கா!"

— புதுப்பட்டி ஜீ.ஆர்.விஜய்

வெங்கடேசன் எம்.டெக் முடித்து பெரிய நிறுவனமொன்றில் வேலைக்குச் சேர்ந்தார். மகளிர் கல்லூரி லெக்சரர் உஷாவை மணந்தார். இரண்டு மகள்கள், இரண்டு மகன்கள். இவர் பங்கு நிலங்கள் ஜெயராமனுக்கே விற்கப்பட்டு மகன்கள், மகள்களின் பெயரில் பணப்பத்திரங்கள் ஆயின. மூவர் யு.எஸ்.ஏ.யில், ஒரு மகன் கனடாவில், பெற்றோரோ சென்னையில்.

வைத்தியநாத ஐயர் காலமாகவே, ஜெயராமன் விவசாயத்தை மேற்கொண்டார். விசாலத்தை மணந்தார். விவசாயமே வாழ்க்கையாயிற்று. சிறந்த சாகுபடிக்கான பரிசுகள், புதிய முறைகளைப் புகுத்தியதற்கான விருதுகள் அவரைத் தேடி வந்தன. அவரைப் போலவே அவரது பிள்ளைகள் படிப்பில் சுமார். ஜெயராமனது பேத்திக்குத்தான் இன்று வளை காப்பும் சீமந்தமும்.

படிப்பு, பதவி என்ற பரிணாமப்பசியால் மேலே, மேலே முன்னேறிய இவரது பெண்களுக்கு முதிர்கன்னிப் பருவத்தில்தான் திருமணம் நடந்தது. சுபாவின் முப்பத்தியேழாவது வயதில் அவளது இரண்டாவது பிரசவத்திற்காக உஷா நியூஜெர்ஸிக்குச் சென்றுள்ளாள். வெங்கடேசனுக்கு அறுபத்து எட்டு வயதில் தனிமையின் வெறுமை.

"கலீர்" என்ற சிரிப்புச் சத்தம் அவரை இன்றைய உலகத்துக்கு அழைத்து வந்தது. சீமந்தத்தில் மீண்டும் கலாட்டா சிரிப்பு. அப்பம், கொழுக்கட்டை சுமதியின் மடியில் கட்டப்பட்டு, ஒரு சிறுமியை விட்டு கண்ணை மூடிக் கொண்டு எடுக்கச் செய்ய, அவள் கொழுக்கட்டையை எடுத்து விடவே, 'பையன், பையன், பையன் பிறக்கப் போகிறான்' என்று ஒரே ஆரவாரம். வீடே அதிர்ந்தது. "எத்தனை இன்பங்களை இழந்து விட்டாய்?" என்று வெங்கடேசனின் மனமே அவரை இடித்தது.

அன்று ஒரு வாரப் பத்திரிகையில் ஒட்டைச்சிவிங்கி பற்றிப் படித்தது அவரது நினைவுக்கு வந்தது. மான்கள் கழுத்தை நீட்டி எம்பித்தின்றதால் கழுத்து உயர, உயர பதினெட்டு, இருபதடி நெட்டையாகி ஒட்டைச்சிவிங்கியாயிற்றாம். 'அதிசயம்' என எல்லாரும் வியக்கும் பொழுது மௌனமாக உயரப் பார்த்துக் கொண்டு நிற்கும் அந்த விலங்கு பாவம்!... சப்தம் போட்டால் ஒலி வெளியில் கேட்காது. தாகம் எடுத்தால் காலை அகல வைத்துக் கொண்டு வளைக்க இயலாமல் உயரக் கழுத்துடன் கஷ்டப்பட்டு தண்ணீர் குடிக்கும்.

ஜெயராமன் குடும்பத்தினர் மான்கள் போல் கூட்டுக்குடும்ப சந்தோஷத்தில் திளைக்க, பரிணாமப் பசியால் ஒட்டைச் சிவிங்கியாகிப்போன தன் குடும்பம் அன்புத்தாகம் தீராது டாலர்களை எண்ணிக் கொண்டிருக்கிறது.

தம்மையறியாது கழுத்தைத் தடவிக் கொண்டார் வெங்கடேசன்.

சோ எழுதிய

## வால்மீகி ராமாயணம் ரூ.500/-

வாழ்வதற்கு அவசியமான வழிகளைக் காட்டும் அரிய பொக்கிஷத்தை, எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் – உத்தர காண்டப் பகுதிகளுடன் – கம்பராமாயணம் மற்றும் துளசிதாசர் ராமாயணங்கள், வால்மீகி ராமாயணத்தோடு மாறுபடும் இடங்களையும் சுட்டிக் காட்டியுள்ளார். (இரண்டு பகுதிகள்)

## மஹாபாரதம் பேசுகிறது ரூ.500/-

பாரதக் கதை பழமை வாய்ந்தது. ஆனால் அதை எழுதியிருக்கும் விதம் புதுமையானது. வியாசரால் எழுதப்பட்ட மஹாபாரதத்தை 1308 பக்கங்களில் எளிய தமிழில் எழுதியுள்ளார் சோ. (இரண்டு தொகுதிகள்)

25000க்கும் மேற்பட்ட பழமொழிகளைக் கொண்டது

'வாகீச கலாநிதி' கிவா. ஜகந்நாதன் தொகுத்த **தமிழ்ப் பழமொழிகள்**

(4 தொகுதிகள்) ரூ.300/-

அல்லயன்ஸ் நூற்றாண்டு சிறப்பு வெளியீடுகள் – என். ஸ்ரீநிவாஸன் எழுதியது

1. நம்மவர் செய்த விந்தைகள் 100
2. அவர்கள் செய்த விந்தைகள் 100
3. உலக மகா கொடுங்கோலர்கள் 100
4. உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவுகள் 100
5. விந்தை உயிரினங்கள் 100
6. அரண்மனை ரகஸியங்கள் 100
7. உலகப் புகழ் பெற்ற கட்டடங்கள் 100
8. நம்ப முடியாத உண்மைகள் 100
9. வியப்பூட்டும் உண்மைகள் 100
10. தாவர உலகிலே! 100
11. விந்தைத் தாவரங்களும் – மூலிகைத் தாவரங்களும் 100
12. யார் என்ன சொன்னார்கள்? 100
13. நீருலகிலே! 100
14. பாலூட்டிகள் வரிசையிலே 100
15. தமிழ் வளர்த்த பெருமக்கள் 100

தனிப் பிரதி ஒன்றின் விலை ரூ.100/-

## பூஜ்யஸ்ரீ மஹா ஸ்வாமிகள் வரலாறு

காஞ்சீ மஹா ஸ்வாமிகள் ஸ்ரீ சந்திர சேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் திரு அவதாரத்தில் தொடங்கி – திரு அவதாரம் நிறைவு வரை – ஓவியர் சில்பியின் ஏராளமான படங்கள் – புகைப் படங்களுடன் – இரண்டு தொகுதிகள் – (ஸ்ரீ சாம்பமூர்த்தி ஸாஸ்த்ரிகள், குப்புஸ்வாமி ஐயர், பி.என். பரசுராமன் எழுதியது.)

ரூ.500/-

## கு.ப.ரா. எழுத்துக்கள் – 8 தொகுதிகள்

அனைத்து பத்திரிகைகளாலும் மிகவும் பாராட்டப்பட்ட இவரது சிறுகதைகள், மொழி பெயர்ப்பு நாவல்கள், நாடகங்கள் – என பெரும்பாலான இவரது எழுத்துக்கள் அடங்கியது.

ரூ.700/-

அல்லயன்ஸ் கம்பெனி

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர்,
சென்னை - 600 004 போன் : 4941314

**விவேக் பப்ளிகேஷன்ஸின் 2003 ஏப்ரல் துறைசார்ந்த இதழ்களில்...**

COVER STORY

# மக்களை சுரண்டும் ஸ்கேன் சென்டர்கள்

- மருத்துவக் கொள்ளை குறித்த பொதுநலப் பார்வை

உங்கள் ஹெல்த் டுடே

சார்ஸ் முதல் சகலமும் இடம் பெறும்

*A-Class*

மருத்துவப் பத்திரிகை

# தொழில் முன்னேற்றம்

No.1 தொழில் பத்திரிகை

- ரூ. 50,000 முதலீட்டில் மாதம் ரூ.30,000 உறுதியாக சம்பாதிக்கலாம்!

  - புதிய தொழில் வாய்ப்பு

- வேலை இழக்கிறார்கள் 2 லட்சம் பொற்கொல்லர்கள்?

  - இயந்திர இன்னல்

சிமெண்டுக்கு மாற்றாக மலைமாவு

வாஸ்துவை மிஞ்சும் பாவ்பயாலஜி

கிரானைட் ஏற்றுமதி தகவல்கள்

இன்னும் இன்னும் ஏராளமான தகவல்கள்

# பில்டர்ஸ் வேர்ல்டு

கட்டுமான உலகின் கலங்கரை விளக்கம்

6/64, Mallan Ponnappan Street, Triplicane, Chennai - 600 005. Ph: 28487533 / 28483163. Fax: 28480610. E-mail: vivekpublications@yahoo.com www.vivekpublications.com

உ

# வெண் புள்ளிகளுக்கு சிறப்பு சிகிச்சை!

தோலில் ஏற்படும் நாள்பட்ட வெண் புள்ளிகளுக்கு பின்விளைவற்ற உயிருற்ற தெய்வீக இயற்கை மூலிகை மருதுவம் 30 நாட்களில் கண்டிப்பாக மாற்றம் தெரியும். மற்றும் அனைத்து தோல் நோய்களுக்கும் சிறப்பு சிகிச்சை அளிக்கப்படும்.



அனைத்துவித வியாதிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்

Gurujii **Dr. G. VEERAMANI**

(தெய்வீக மருத்துவர்)

**சக்தி இயற்கை மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி மையம்,**

1, YMCA பில்டிங்ஸ், ராயப்பேட்டை, சென்னை - 600 014.

போன் : 28531141, 28268784

# சிவகாமியின் சபதம்

## ஐம்பத்து நாலாம் அத்தியாயம்

## விபரீதம்

மாமல்லர் தமது நிலை குலைந்த நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டு, கனிவு ததும்பிய கண்களால் சிவகாமியை நோக்கினார்.

"சிவகாமி! உன்னுடைய நம்பிக்கை வீணாய்ப் போகவில்லையே! உனக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தானே வந்திருக்கிறேன்? நூறு காத தூரம் காடும் மலையும் நதியும் கடந்து வந்திருக்கிறேன். பசி, பட்டினி பாராமல் இராத் தூக்கமில்லாமல் வந்திருக்கிறேன். நான் ஏறி வந்த குதிரை ஏறக்குறையச் செத்து விழும்படி அவ்வளவு வேகமாய் வந்தேன். சற்று முன்பு நான் கூறிய கடுமொழிகளையெல்லாம் மறந்துவிடு. யார் மேலேயோ வந்த கோபத்தை உன் மீது காட்டினேன். இத்தனை நாளைக்குப் பிறகு நம்முடைய சந்திப்பு இப்படிக் கோபமும் தாபமுமாயிருக்குமென்று நான் நினைக்கவில்லை. எவ்வளவோ ஆசையோடு எத்தனையோ மனக்கோட்டை கட்டிக்கொண்டு வந்தேன்! - போகட்டும்- சிவகாமி! புறப்படு, போகலாம்!"

"பிரபு! மன்னியுங்கள்! இப்போது நான் வர மாட்டேன், என் சபதம் நிறைவேறிய பிறகுதான் வருவேன்."

"சிவகாமி! இது என்ன வார்த்தை? என்னுடன் வருவதற்கு உனக்கு விருப்பம் இல்லையா, என்ன? தாமதிக்க நேரமில்லை."

"இளவரசே! என் சபதத்தை நிறைவேற்றி வையுங்கள். பாதகன் புலிகேசியைக் கொன்று, வாதாபி நகரத்தைச் சுட்டெரித்துவிட்டு, உங்கள் அடிமையின் கையைப் பிடித்து அழைத்துச் செல்லுங்கள். அப்போது நிழல் போல்

அமரர் கல்கி

உங்களைத் தொடர்ந்து வருவேன்.''

"சிவகாமி! உன் சபதத்தை அவசியம் நிறைவேற்றி வைக்கிறேன். ஆனால் அதை நிறைவேற்றுவது எளிதல்ல. பெரும்படை திரட்டிக் கொண்டு, தக்க ஆயுத பலத்தோடு வர வேண்டும். இதற்கெல்லாம் அவகாசம் வேண்டும்; பல வருஷங்கள் ஆகலாம்...!"

"பல்லவ குமாரர்தானா இப்படிப் பேசுகிறீர்கள்? வீரமாமல்லரா இப்படிப் பேசுகிறீர்கள்? புலிகேசியைக் கொன்று வாதாபியை வெற்றி கொள்வது அவ்வளவு கடினமான காரியமா? இந்தப் பேதை தெரியாமல் சபதம் செய்து விட்டேனே...? பல்லவ குமாரா! தாங்கள் காஞ்சிக்குப் போய் இராஜ்ய காரியங்களைக் கவனியுங்கள். இந்த ஏழைச் சிற்பியின் மகளைப் பற்றிக் கவலை வேண்டாம்! நான் என்ன பாண்டிய ராஜகுமாரியா, சோழன் திருமகளா - தாங்கள் கவலைப்படுவதற்கு? நான் எக்கேடு கெட்டால் தங்களுக்கென்ன? என் சபதம் எப்படிப் போனால் என்ன?'' என்று சிவகாமி கசப்புடன் பேசினாள்.

"சிவகாமி! நீதான் பேசுகிறாயா? நீ பழைய சிவகாமிதானா?'' என்றார் மாமல்லர்.

"இல்லை, பிரபு! நான் பழைய சிவகாமி இல்லை. புதிய சிவகாமியாகி விட்டேன். என் வாழ்க்கை கசந்துவிட்டது. என் மனம் பேதலித்து விட்டது. இந்தப் புதிய சிவகாமியை மறந்து விடுங்கள். ஒரு சமயம் தங்களிடம், 'அடியாளை மறக்க வேண்டாம் என்று வரங் கேட்டேன். இப்போது, மறந்து விடுங்கள்' என்று வரங் கேட்கிறேன்!'' என்றாள் சிவகாமி.

"சிவகாமி! கேள்! நீ புதிய சிவகாமியானாலும் நான் பழைய மாமல்லன் தான். உன்னைப் பிரிந்திருந்த காலத்திலெல்லாம் ஒரு கணமேனும் உன்னை நான் மறக்கவில்லை. இரவிலும், பகலிலும், கனவிலும், நனவிலும், அரண்மனையிலும் போர்க்களத்திலும், என்ன செய்தாலும் யாரோடு பேசினாலும்- என் உள்ளத்தைவிட்டு நீ ஒரு கணமும் அகலவில்லை. உன் பேரில் நான் கொண்ட பரிசுத்தமான காதலின் மேல் ஆணை வைத்துச் சொல்லுகிறேன். நீ செய்த சபதத்தை நிறைவேற்றி வைக்கிறேன். இப்போது என்னோடு புறப்படு!'' என்று மாமல்லர் உணர்ச்சி மிகுதியினால் நாத் தழுதழுக்கக் கூறினார்.

கல்லையும் கனிய வைக்கக்கூடிய மேற்படி மொழிகள் சிவகாமியின் மனத்தைக் கனியச் செய்யவில்லை. பட்ட கஷ்டங்களினாலும் பார்த்த பயங்கரங்களினாலும் கல்லினும் கடினமாகியிருந்தது அவள் உள்ளம்.

"காதலாம் காதல்! காதலும் கல்யாணமும் இங்கே யாருக்கு வேண்டும்?'' என்றாள் சிவகாமி.

"நிஜமாகத்தான் சொல்கிறாயா? காதலும் கலியாணமும் உனக்கு வேண்டாமா?'' என்று மாமல்லர் ஆத்திரத்தோடு கேட்டார்.


"நிஜமாகத்தான் சொல்கிறேன். காதலும் கலியாணமும் எனக்கு வேண்டாம். பழிதான் வேண்டும். வஞ்சம் தீர்க்க வேண்டும். புலிகேசி சாக வேண்டும். வாதாபி எரிய வேண்டும். வாதாபி மக்கள் அலறிப் புடைத்துக் கொண்டு அங்குமிங்கும் ஓட வேண்டும். வேறொன்றும் எனக்கு வேண்டாம்!''

மாமல்லர் மீண்டும் நயமான வார்த்தைகள் கூறினார்.

"சிவகாமி! உன் விருப்பத்தைத் தெரிந்துகொண்டேன். உன்னைக் காட்டிலும் நூறு மடங்கு என் உள்ளம் கொதித்துக் கொண்டிருக்கிறது. உன்னைச் சிறைப்பிடித்து வந்து அவமானப்படுத்திய பாதகனைப் பழி வாங்க என் மனம் துடித்துக் கொண்டிருக்கிறது. கட்டாயம் உன் சபதத்தை நிறைவேற்றி வைக்கிறேன். நீ மட்டும் இப்போது என்னுடன் புறப்பட்டு வந்துவிடு!''

"வரமாட்டேன், இளவரசே! ஆயனச் சிற்பியாரிடம், அவருடைய மகள் இறந்து போய்விட்டாள் என்று சொல்லி விடுங்கள்!''

"சிவகாமி! இது என்ன பிடிவாதம்? கடைசி வார்த்தையாகச் சொல்லுகிறேன்.



கேள்! உன்னுடைய சபதத்தை நான் கட்டாயம் நிறைவேற்றி வைக்கிறேன். ஆனால், இந்தச் சமயம் என்னுடன் நீ வரா விட்டால் என் மனம் கசந்து போய்விடும். என் அன்பை அடியோடு இழந்து விடுவாய்!''

''அன்பு வேண்டாம் சுவாமி! சபதத்தை நிறைவேற்றுங்கள்!''

''பெண்ணே! பல்லவ குலத்தினர் ஒரு நாளும் சொன்ன சொல் தவறுவதில்லை!''

''இளவரசே! ஆயனச் சிற்பியின் மகளும் சொன்ன சொல்லை மாற்றுவதில்லை!''

''ஆகா! இதென்ன அகம்பாவம்?'' என்றார் மாமல்லர்.

''ஆம், இளவரசே! எனக்கு அகம்பாவந்தான். ஏன் இருக்கக்கூடாது? பாண்டியன் மகளுக்கும், சேர ராஜகுமாரிக்குந்தான் அகம்பாவம் இருக்கலாமா? - நான் சிற்பியின் மகள்தான். ஆனாலும் செந்தமிழ் நாட்டு வீரப்பெண் குலத்திலே பிறந்தவள். காதலன் கழுத்திலே மாலை சூட்டிப் போர்க்களத்துக்கு அனுப்பிய மாதர் வம்சத்தில் பிறந்தவள். கண்ணகி தெய்வம் வாழ்ந்த நாட்டில் நானும் பிறந்தேன். எனக்கு ஏன் அகம்பாவம் இருக்கக்கூடாது. பிரபு?''

சிவகாமியின் மனத்தைத் திருப்ப மேலே என்ன சொல்லலாம் என்று அவர் சிந்திப்பதற்குள், சேனாபதி பரஞ்சோதி பரபரப்புடன் உள்ளே வந்தார். மாமல்லரின் காதில் ஏதோ சொன்னார்.

மாமல்லரின் முகத்தில் ஒரு கணம் திகிலின் அறிகுறி தோன்றியது. மறு கணம் சமாளித்துக் கொண்டார். ''சேனாபதி! இந்த மூடப் பெண்ணின் பிடிவாதத்துக்கு முன்னால் நம்முடைய திட்டமெல்லாம் சின்னாபின்னமாகிவிடும் போலிருக்கிறது!'' என்றார். சிவகாமியின் பக்கம் கோபமாகத் திரும்பி, ''பெண்ணே! நீ வருவாயா? மாட்டாயா? உன்னுடன் வாதமிட்டுக் கொண்டிருக்க நேரமில்லை!'' என்றார் மாமல்லர்.

அப்போது சேனாபதி பரஞ்சோதி குறுக்கிட்டு, ''அம்மணி, எங்களுடைய நிலைமையைத் தெரிந்து கொள்ளுங்கள். எதிரிகளின் கோட்டைக்குள்ளே தனியாக நாலு பேர் வந்திருக்கிறோம். கோட்டைச் சுவர் மீது நூலேணியுடன் கண்ணனும் அவன் தந்தையும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். கோட்டைக்கு வெளியில் இந்த நிமிஷத்தில், நரபலி கொடுக்கும் காபாலிகர்கள் எங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயோ அந்தக் கள்ள பிக்ஷு நாங்கள் வந்திருப்பதை அறிந்துகொண்டு, இதோ வீதிமுனையில் வந்து கொண்டிருக்கிறார். தேவி! இந்த நிலைமையில் தாங்கள் இப்படி வீண் விவாதம் வளர்த்தக் கூடாது...'' என்றார்.

'பெண் புத்தி பேதமையுடைத்து' என்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? அது உண்மை என்பதை நிரூபிக்கும்படி சிவகாமி அப்போது பேசினாள்.

''ஐயா! பல்லவ குமாரரும் அவருடைய அருமைத் தோழரும் கேவலம் மண்டை ஓட்டில் பிச்சை வாங்கும் காபாலிகருக்கும்- காவித்துணி தரித்த புத்த பிக்ஷுவுக்கும் பயந்து ஓடுவார்கள் என்பது இதுவரையில் எனக்குத் தெரியாமலிருந்தது. அதற்காக என்னை மன்னியுங்கள். நீங்கள் தப்பிப் பிழைப்பதை நான் குறுக்கே நின்று மறிக்கவில்லையே' தாராளமாகப் போகலாம்!''

''பல்லவ குமாரருக்குக் காலாக்னியையொத்த கோபம் வந்தது. ''அடி பாதகி! சண்டாளி! இதன் பயனை நீ அனுபவிப்பாய்!'' என்று சீறினார். பின்னர் பரஞ்சோதியைப் பார்த்து ''சேனாபதி! இந்த வஞ்சகப் பாதகியின் நோக்கம் இப்போது தெரிந்தது. கள்ள பிக்ஷுவிடம் நம்மைக் காட்டிக் கொடுத்துவிட வேண்டும் என்பது இவள் எண்ணம். வாரும் போகலாம்!'' என்றார்.

அப்போது பரஞ்சோதி, ''பிரபு! மன்னிக்க வேண்டும். நான் எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். ஆயனர் புதல்வி அப்படி வஞ்சகம் செய்யக்





கூடியவர் அல்ல. தான் செய்த சபதத்தை முன்னிட்டுத்தான் 'வர மாட்டேன்' என்கிறார்..." என்பதற்குள்ளே, மாமல்லர் குறுக்கிட்டார். "தளபதி பெண்களின் வஞ்சகம் உமக்குத் தெரியாது. சபதமாம், சபதம்! வெறும் பொய்! வாதாபிச் சக்கரவர்த்தியின் மாளிகையை விட்டு வருவதற்கு இவளுக்கு விருப்பமில்லை. வாரும் போகலாம்!" என்று மாமல்லர் சேனாபதியின் கையைப் பற்றி இழுக்கத் தொடங்கினார்.

தளபதி பரஞ்சோதி நகராமல் நின்றார். "பிரபு! இது நியாயமல்ல. சிவகாமி அம்மையை இங்கு விட்டுப் போவது பெரும் பிசகு...! அவராக வருவதற்கு மறுத்தால், பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு போக வேண்டியதுதான்...!" என்றார்.

இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததும் சிவகாமியின் தேகமெல்லாம் சிலிர்த்தது. ஒரு சமயம் மாமல்லர் தன்னை விஷநாகம் தீண்டாமல் கட்டிக் காத்ததாகக் கனவு கண்டதைப் பற்றிச் சொன்னது அவளுக்கு நினைவு வந்தது. 'அந்தக் கனவு இப்போது மெய்யாகாதா? சேனாபதியின் யோசனைப்படி மாமல்லர் தன்னை நெருங்கி வந்து கட்டிப் பிடித்துத் தூக்கிக் கொண்டு போக மாட்டாரா? என்று எண்ணினாள். ஆகா! அம்மாதிரி மாமல்லர் செய்திருந்தால், பின்னால் எவ்வளவு விபரீதங்கள் நேராமல் போயிருக்கும்!

விதிவசத்தினால் மாமல்லர் அவ்வாறு செய்ய மனங்கொள்ளவில்லை.

"வேண்டாம், சேனாபதி! வேண்டாம். இஷ்டமில்லாத பெண்ணை நாம் பலவந்தப்படுத்தி அழைத்துப் போக வேண்டியதில்லை. இவளுக்கு நான் கொடுத்த வாக்குறுதியை ஒரு சமயம் நிறைவேற்றுவேன். பிறகு இஷ்டமானால் வரட்டும். அது வரையில் அந்தக் கள்ள பிக்ஷுவையே கட்டிக் கொண்டு அழட்டும்...!" என்று மாமல்லர் சொல்லிக் கொண்டிருக்கும்போது சத்ருக்னனும் குண்டோதரனும் உள்ளே ஓடோடியும் வந்தார்கள்.

"பிரபு! பிக்ஷு வீதி முனையில் வருகிறார். அவருடன் வந்த வீரர்களில் பாதிப் பேர் வீட்டின் கொல்லைப் பக்கமாகப் போகிறார்கள்!" என்று சத்ருக்னன் மொழி குளறிக் கூறினான்.

பரஞ்சோதி மறுபடியும் சிவகாமியின் பக்கம் நோக்கிப் பரபரப்புடன், "அம்மா...!" என்றார்.

"வேண்டாம்- தளபதி! வேண்டாம். இந்தக் கிராதகி நம்மைக் கள்ள பிக்ஷுவிடம் காட்டிக் கொடுக்கத்தான் பார்க்கிறாள்! வாரும் போகலாம்!" என்று மாமல்லர் இரைந்து கூறிப் பரஞ்சோதியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அம்மாளிகையின் பின்புறமாக விரைந்தார். அடுத்தகணம் அவர்கள் நால்வரும் சிவகாமியின் பார்வையிலிருந்து மறைந்தார்கள்.

## ஐம்பத்தைந்தாம் அத்தியாயம்

# கத்தி பாய்ந்தது!

மால்லர் முதலியோர் சென்ற பக்கத்தையே சிவகாமி ஒருகணம் வெறித்து நோக்கினாள். மறுகணம் பளீரென்று பூமியில் குப்புற விழுந்தாள்.

அவளுடைய தேகத்தை யாரோ கட்புலனாகாத ஒரு மாய அரக்கன் முறுக்கிப் பிழிவது போலிருந்தது. உடம்பிலுள்ள எலும்புகள் எல்லாம் நறநறவென்று ஒடிவது போலத் தோன்றியது.

அவளுடைய நெஞ்சின் மேல் ஒரு பெரிய மலையை வைத்து அமுக்குவது போலிருந்தது.

அவளுடைய குரல் வளையை ஒரு விஷநாகம் சுற்றி இறுக்குவது போலத்

தோன்றியது.

ஒரு கணம் சுற்றிலும் ஒரே இருள் மயமாக இருந்தது.

மறுகணம் தலைக்குள்ளே ஆயிரமாயிரம் மின்னல்கள் பாய்ந்தன.

வீடும் விளக்கும் அவளைச் சுற்றிக் கரகரவென்று சுழன்றன.

கீழே கீழே கீழே இன்னும் கீழே அதல பாதாளத்தை நோக்கிச் சிவகாமி விழுந்து கொண்டிருந்தாள். ஆகா! இப்படி விழுவதற்கு முடிவே கிடையாதா? என்றென்றைக்கும் கீழே கீழே போய்க் கொண்டிருக்க வேண்டியதுதானா?

"சிவகாமி! சிவகாமி!" என்று எங்கேயோயிருந்து யாரோ அழைத்தார்கள். அது மாமல்லரின் குரல் அல்ல; நிச்சயம்.

முகத்தின் அருகே நாகப்பாம்பு சீறுவது போல் சத்தம் கேட்டது. உஷ்ணமான மூச்சு முகத்தின் மீது விழுந்தது.

சிவகாமி கண்களைத் திறந்தாள். ஐயோ! படமெடுத்தாடும் சர்ப்பத்தின் முகம்! நிப்பிழம்பாக ஜொலித்த பாம்பின் கண்கள்!

இல்லை; இல்லை! நாகநந்தி பிக்ஷுவின் முகம். அவர் மூச்சு விடும் விஷக் காற்றுத்தான் தன்னுடைய முகத்தின் மேல் படுகிறது.

சிவகாமி ஒரு பெரும் பிரயத்தனம் செய்து பளிச்சென்று எழுந்து உட்கார்ந்தாள். பிக்ஷுவை விட்டு விலகிச் சற்றுத் தூரத்துக்கு நகர்ந்து சென்றாள். அவள் தேகமெல்லாம் படபடத்து நடுங்கியது.

நாகநந்தி அவளைக் கருணையுடன் பார்த்து, "பெண்ணே! உனக்கு என்ன நேர்ந்தது? என்ன ஆபத்து விளைந்தது! ஏன் அவ்வாறு தரையிலே உணர்வற்றுக் கிடந்தாய்? பாவம்! தன்னந் தனியாக இந்தப் பெரிய வீட்டில் வசிப்பது சிரமமான காரியம்தான். உன்னுடைய தாதிப் பெண்ணைக் காணோமே? எங்கே போய் விட்டாள்...!" என்று கேட்டவண்ணம் சுற்று முற்றும் பார்த்தார்.

அப்போது அவர் பார்த்த திக்கில் மாமல்லர் போகும் அவசரத்திலே விட்டு விட்டுப் போன தலைப்பாகையும் அங்கவஸ்திரமும் கிடப்பதைச் சிவகாமி பார்த்துப் பெருந்திகிலடைந்தாள். நாகநந்தி அவற்றைக் கவனியாமல் திரும்பிச் சிவகாமியின் அருகில் வந்து, "பெண்ணே! நான் சொல்வதைக் கேள். உன்னுடைய நன்மைக்காகவே சொல்லுகிறேன்!" என்று சொல்லிய வண்ணம் சிவகாமியின் ஒரு கரத்தைத் தன் இரும்பையொத்த கரத்தினால் பற்றினார்.

அப்போது சிவகாமியின் உடம்பு மறுபடியும் நடுங்கிற்று. கொடிய கண்களையுடைய நாக சர்ப்பம் படமெடுத்துத் தன்னைக் கடிக்க வருவது போன்ற பிரமை ஒருகணம் ஏற்பட்டது. சட்டென்று சமாளித்துக் கையை வெடுக்கென்று எடுத்துக் கொண்டாள்.

"ஆ! சிவகாமி! ஏன் இப்படி என்னைக் கண்டு நடுங்குகிறாய்? உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன்! உன்னிடம் உண்மையான அபிமானம் கொண்டதல்லாமல் உனக்கு நான் ஒரு தீங்கும் செய்யவில்லையே! உன் தந்தையின் உயிரைக் காப்பாற்றியதன்றி வேறொரு அபசாரமும் உனக்குச் செய்யவில்லையே? ஏன் என்னை வெறுக்கிறாய்?" என்று பிக்ஷு கனிவு ததும்பும் குரலில் கேட்டார்.

"சுவாமி! தங்களைக் கண்டு நான் பயப்படவும் இல்லை. தங்களிடம் எனக்கு வெறுப்பும் இல்லை. தாங்கள் எனக்கு என்ன தீங்கு செய்தீர்கள், தங்களை நான் வெறுப்பதற்கு? எவ்வளவோ நன்மைதான் செய்திருக்கிறீர்கள்!" என்றாள் சிவகாமி.

"சந்தோஷம் சிவகாமி! இந்த மட்டும் நீ சொன்னதே போதும். உன் தேகம் அடிக்கடி நடுங்குகிறதே. அது ஏன்? உடம்பு ஏதேனும் அசௌக்கியமா?" என்று வினவினார்.

"ஆம், அடிகளே! உடம்பு சுகமில்லை!" என்றாள் சிவகாமி.

"அடடா! அப்படியா? நாளைக் காலையில் நல்ல வைத்தியனை அனுப்புகிறேன். ஆனால், இப்படி உடம்பு அசௌக்கியமாயிருக்கும்போது உன்னை விட்டு விட்டு உன் தாதிப் பெண் எங்கே போனாள்? எங்கேயாவது, மூலையில் படுத்துத் தூங்குகிறாளா, என்ன?" என்று அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தார் பிக்ஷு.


சற்றுத் தூரத்தில் தூணுக்குப் பின்னால் கிடந்த தலைப்பாகையும் அங்கவஸ்திரமும் இப்போது அவருடைய கண்களைக் கவர்ந்தன.

"ஆ! இது என்ன இங்கே யாரோ வந்திருக்கிறார்கள் போலிருக்கிறதே?" என்று





## அருள்வாக்கு



ரொம்பவும் controversial ஆன (சர்ச்சைக்கிடமான) புஸ்தகம் எழுதின ஒரு வெள்ளைக்காரர் (ஆர்தர் கீஸ்லரும் அவர் எழுதிய 'Darkness at Noon) என்ற நூலும் குறிப்பிடப் பெறுகின்றன) என்னிடம் உங்கள் கோயில்களில் என்ன இப்படி ஒரே சத்தமும் கூச்சலுமாயிருக்கே?" என்று கேட்டபோது, நான் சொன்னேன்: - 'சர்ச்சில், மசூதியில், புத்த விஹாரத்தில் silent prayer செய்கிறது போலக் கோயிலில் செய்யணும் என்பது முக்ய உத்தேசமில்லை. எங்களுக்கு ஏகாந்தத்தில் த்யானம்தான் முக்யம். த்யானம் Congregation worship (கூடிப் பிரார்த்தனை சொல்லி வழிபடுவது) ஆகியவற்றிற்காகக் கோயில் இல்லை. ராஜா நம்மை ரக்ஷிக்கிறான் என்பதற்காக அவனுக்கு அரண்மனை, அலங்காரம், பரிவாரம், படாடோபம் எல்லாம் கொடுக்கிறோம். வரியும் கொடுக்கிறோம் அல்லவா? அதேமாதிரி ஸர்வலோக ராஜாவாக ஸர்வ கால ரக்ஷகனாக இருக்கப்பட்ட பகவானுக்குப் பொன்னையும் பூஷணத்தையும் கொடுத்துப் பெரிசாகக் கோயில் கட்டி வைத்து, மேளதாள விமரிசைகளோடு உத்ஸவம் செய்யவே Community thanksgiving ஆக (ஸமூஹ நன்றியறிவிப்பாக) collective offering ஆக (கூடிக் காணிக்கை செலுத்துவதாக) எங்கள் ஆலய வழிபாட்டு முறை அமைந்திருக்கிறது. இங்கே அமைதியை எதிர்பார்க்க முடியாது. அமர்க்களம், ஆரவாரம், மேளதாளம், கண்டா மணி, அதிர்வேட்டு இருக்கத்தானிருக்கும். அமைதியாக த்யானம் பண்ண அவரவர் வீட்டிலும் பூஜாக்ருஹமுண்டு. ஆற்றங்கரை, குளத்தங்கரை உண்டு" என்று சொன்னேன்.

இப்படிச் சொன்னதால், கோயிலில் அவரவரும் இரைச்சல் போட்டுக் கொண்டு, அரட்டை அடித்துக் கொண்டிருப்பதற்கு லைஸென்ஸ் தந்ததாக அர்த்தமில்லை. சாஸ்த்ரோக்தமாக அனுமதிக்கப்பட்டிருக்கும் ஓசைகளை - மணி அடிப்பது, வேத கோஷம், தேவாரம், பஜனை, மேளம், புறப்பாட்டில் வெடி இவற்றைத்தான் - நான் சொன்னது.

இந்த மாதிரி சாஸ்த்ரோக்தமான சப்தங்களுக்கே மௌன த்யானத்தில் ஒருத்தனை ஈடுபடுத்துகிற அபூர்வமான சக்தி உண்டு. இம்மாதிரி சப்தங்களுக்கு நடுவிலேயே ஸந்நிதானத்தில் சிறிது கண்ணை மூடிக் கொண்டால், அல்லது தக்ஷிணாமூர்த்திக்கு எதிரே ஜபம் பண்ண உட்கார்ந்துகொண்டால், சட்டென்று ஒரு லயிப்பு உண்டாகி விடும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்

அருகில் சென்று உற்றுப் பார்த்தார்.

திரும்பிச் சிவகாமியை நோக்கி, "சபாஷ்! சிவகாமி! அதற்குள்ளே இங்கே உனக்குக் காதலர்கள் ஏற்பட்டு விட்டார்களா? உள்ளூர் மனிதர்கள்தானா! அல்லது வெளியூர்க்காரர்களா?" என்று பரிகாசச் சிரிப்புடன் கேட்டார். சிவகாமி மௌனமாய் நின்றதைப் பார்த்துவிட்டு, "நல்லது; நீ மறுமொழி சொல்ல மாட்டாய். நானே போய்க் கண்டுபிடிக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு வாசலை நோக்கிச் சென்றார்.

அப்போது சிவகாமிக்கு, "இவன் புத்த பிக்ஷுவிடம் நம்மைக் காட்டிக் கொடுக்கப் பார்க்கிறான்!" என்று மாமல்லர் சொன்னது நினைவு வந்தது. பளிச்சென்று பிக்ஷு அவர்களைக் கண்டுபிடிப்பதால் நடக்கக்கூடிய விபரீதங்கள் எல்லாம் நினைவுக்கு வந்தன.

சிவகாமி துடிதுடித்து அங்குமிங்கும் பார்த்தாள். இளவரசரின் அங்கவஸ்திரத்துக்கு அடியில் ஏதோ பளபளவென்று ஒரு பொருள் தெரிந்தது.

சிவகாமியின் கண்களில் விசித்திரமான ஒளி தோன்றியது.

பாய்ந்து சென்று அந்தப் பொருளை எடுத்தாள். அவள் எதிர்பார்த்தது போல் அது ஒரு கத்திதான்.

சிவகாமி அடுத்த கணம் அந்தக் கத்தியைப் புத்த பிக்ஷுவின் முதுகை நோக்கி எறிந்தாள்.

பிக்ஷு 'வீல்' என்று சத்தமிட்டுக் கொண்டு விழுந்தார்.

முதுகில் கத்தி பாய்ந்த இடத்திலிருந்து இரத்தம் கசிந்தது.

சிவகாமியைப் பிக்ஷு திரும்பிப் பார்த்து, இரக்கம் ததும்பிய குரலில், "பெண்ணே! என்ன காரியம் செய்தாய்? உன்னை உன் காதலன் மாமல்லனிடம் சேர்ப்பித்து விடலாமென்று எண்ணியல்லவா அவசரமாகக் கிளம்பினேன்?" என்றார்

(தொடரும்)

# எல்லையில் இரத்தம்; இங்கே வியர்வை!

மின்சாரப் பாய்ச்சலோடு நிகழ்ந்த நெய்வேலிப் போராட்டத்துக்குத் தலைமை வகித்த பாரதிராஜா எங்கே? அவரது அலுவலகத்தில் நின்று தேடியபோது, "என்னை நானே மறுகண்டுபிடிப்பு செய்து திரும்பியிருக்கிறேன்" என்று தோளைத் தொட்டுத் திருப்பினார் பாரதிராஜா. மறுகண்டுபிடிப்பு? "ஏதேனும் கட்சி தொடங்கி, அரசியல் பிரவேசம் செய்யப் போகிறீர்களா?" என்றதற்கு, "இல்லை! இல்லை! மீண்டும் எனது மண்ணை மிதித்துவிட்டு வந்திருக்கிறேன்" என்று வழக்கமான கம்பீரக் குரலில் பேசத் தொடங்குகிறார்.

" 'தாஜ்மஹால்' படத்தில் ஒரு கற்பனை கிராமத்தை வடித்தேன். இது பாரதிராஜா படமில்லையே என்று தூக்கியெறிந்தார்கள். கடல்புறத்து வாழ்க்கையை உணர்ச்சிகரமாய்ப் படம்பிடித்தேன். காலதாமதமாய் வெளியானதில் 'கடல் பூக்கள்' வாடிப் போயின. இந்த முறை 'ஈரநிலம்' படத்தை

• மனோஜ் - நந்திதா





ஒரே மூச்சில் முடித்துத் திரும்பியிருக்கிறேன். சினிமாவுக்கான அடையாளங்கள் எதுவுமில்லாமல், ஒரு வாழ்க்கையை அருகிலிருந்து பார்ப்பது போல பதிவு செய்திருக்கிறேன். எனது 'கிழக்குச் சீமையிலே', 'கருத்தம்மா' இரண்டிலுமே எமோஷன் அதிகம். இந்தப் படமோ பாறை மனிதர்களிடமும் ஈரம் கசிய வைக்கும்" என்று பாரதிராஜா ஒரு கணம் இடைவெளி விட்டபோது, அவரது அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையில் வரிசையாய்ப் பொருத்தப்பட்டிருந்த 'ஈரநிலம்' படத்தின் புகைப்படங்கள் நமது கவனத்தை ஈர்த்தன.

பசுமை போர்த்திக் கிடக்கிற வயல் வெளிகள், ஒப்பனை இல்லாத மனிதர்கள், வெள்ளைச் சிரிப்பு என்று தமிழ்க் கிராமத்தின் அடையாளம் பரவிக்கிடக்கும் படங்களில் ஒரு முகம் பட்டென்று கவனிக்க வைக்கிறது. அட! சுஹாசினி!

"மூன்று பிள்ளைகளுக்குத் தாயாக நடிக்கணும் என்று சுஹாசினியைத் தேர்ந்தெடுத்தபோது, பலர் ஒட்டுமா என்றார்கள். எனக்கும் கூட கொஞ்சம் தயக்கமிருந்தது. ஆனால் கொசுவம் வைத்துச் சேலை கட்டி, முன் தலையில்





கொஞ்சம் நரை முடியோடு அவர் வந்து நின்றபோது, பெரிய நடிகை, இயக்குனர் மணிரத்னத்தின் மனைவி என்கிற எந்த இமேஜும் அவர் தோற்றத்தில் பிரதிபலிக்க வில்லை. ஒரு கிராமத்துத் தாயாகவே எங்களுடன் வாழ்ந்தார்'' என்ற பாரதி ராஜாவிடம் ஈரநிலத்தின் கதை குறித்துக் கேட்டோம். "அய்யய்யோ, சொல்ல மாட்டேன்!'' என்றெல்லாம் பயந்து பதறாமல், சொல்ல ஆரம்பித்தார்.

இராணுவ வீரர் என்றால் பஞ்சாப் காரர்களுக்கு மட்டும் மக்கள் மத்தியில் மரியாதை இருந்தது. கார்கில் போரில் வீரமரணம் எய்திய வீரர்களின் உடல்கள் இங்கே வந்தபோது, இத்தனைத் தமிழர்கள் எல்லையில் நின்று போராடியிருக்கிறார்களா, என்று மக்கள் கனத்த மனத்தோடு பெருமிதப் பட்டார்கள். இப்போது இராணுவ வீரன் என்றால் தமிழனின் பங்களிப்பும் போற்றப்படுகிறது. இந்த நேரத்தில் தான் கருநாத்தம் பட்டி கிராமம் பற்றிக் கேள்விப்பட்டேன். அந்தக் கிராமத்தில் வீட்டுக்கு ஒருவராவது இராணுவத்தில் பணிபுரிகிறவர்களாக இருக்கிறார்கள். கருநாத்தம்பட்டி எப்படி கார்கில்பட்டியாக மாறியது என்று யோசித்த போதுதான் 'ஈரநிலம்' பிறந்தது.

"சுஹாசினிக்கு மூன்று மகன்கள். நாட்டைக் காக்க இரண்டு மகன்களை இராணுவத்துக்கு அனுப்புகிறார். வீட்டைக் காக்க மூன்றாவது மகன் மனோஜ். யுத்தம் வருகிறது. ஏற்கெனவே புருஷனைப் பறி கொடுத்தவளின் செவிகளில் மகன்கள் எல்லையில் இரத்தம் சிந்தி எதிரியோடு

-பாரதிராஜா



• நந்திதா

போரிட்டு வீழ்ந்து போன செய்தி வந்து விழுகிறது. உடல்கள் வருவதற்குமுன் இழப்பீட்டுத் தொகையைக் கொண்டு வந்து தருகிறது இராணுவம். ஆனால் "எனது பிள்ளைகளின் தியாகத்தைக் கொச்சைப் படுத்தாதே. வேண்டுமானால் எஞ்சியிருக்கும் எனது கடைசி மகனையும் எடுத்துக் கொள்" என்று மான்யத்தை மறுத்துவிட்டு, மனோஜையும் இராணுவத்துக்கு அனுப்பி வைக்கிறாள் அந்த வீரத்தாய். ஆண்கள் அத்தனை பேரும் இராணுவத்திற்குப் போய்விட்ட நிலையில் பெண்கள் கலப்பை பிடித்து வயலில் இறங்குகிறார்கள். எல்லையில் இரத்தம் என்றால் இங்கே வியர்வை" என்று விவரித்த பாரதிராஜாவிடம், 'இது உங்கள் மகன் மனோஜ் கே. பாரதியை நிலை நிறுத்துவதற்கான மண்வாசனை முயற்சியா?' என்று செல்லமாய்ச் சீண்டினோம்.

"அப்படித் திட்டமிட்டு இந்தப் படைப்புக்குள் நான் நுழையவில்லை. ஆனால் இந்தப் படத்தில் மனோஜ் மொத்தமாக மாறியிருக்கிறார். இப்போது சொன்னால் பிள்ளை என்பதற்காகச் சொல்கிறேன் என்று ஆகிவிடும். படத்தைப் பார்த்துவிட்டு நீங்களே சொல்லுங்கள்" என்றவர் கதாநாயகி நந்திதா பற்றியும் சிலாகித்துச் சொல்கிறார். "நந்திதா பதனீர் விற்கிற பெண்ணாக வருகிறார். திறமையான பெண் என்பதை நிரூபித்திருக்கிறார்" என்று சான்றிதழ் வழங்கினார் பாரதிராஜா.

**த**மது மண்வாசனைப் படங்களில் மண்ணின் மனிதர்களைத்தானே அதிகம் நடிக்க வைப்பார். ஈரநிலத்தில் அப்படி யாரேனும்?

"கிராமங்களில் எல்லா வீட்டிலும் பெரிய கிழவி என்றொரு வயசான கிழவி நிச்சயம் இருக்கும். அப்படியொரு கிழவியை சுஹாசினியின் மாமியார் பாத்திரத்துக்காகத் தேடியபோதுதான் படப்பிடிப்புக்கு போன இடத்திலே ஒரு பழுத்த கிழவி கிடைத்தார். இத்தனை வருஷ சினிமா அனுபவத்தில் இப்படியொரு கிழவியைப் பார்த்ததேயில்லை" என்று பிரமிப்பாகச் சொல்லும் பாரதிராஜா, பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில், அனுமார் கோவிலில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த லட்சுமி என்ற பாட்டியை அழைத்து வந்து நடிக்க வைத்திருக்கிறாராம்.

"எவ்வளவு பெரிய காட்சி என்றாலும் சரி... நான் விளக்கிச் சொல்லிவிட்டு, ஒரு தடவைப் பேசிக் காட்டு என்பேன். அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்... நீ ஆக்ஷன் சொல்லு நான் பேசறேன்னு சொல்லுவார். ஆக்ஷன் சொன்னதும் அவ்வளவு அற்புதமாகப் பேசி மிரட்டி விடுவார் மிரட்டி. ஒரு தேர்ந்த நடிகை கூட இவ்வளவு அழகாய்ப் பண்ண முடியுமா என்பது சந்தேகம். "நீ எடுத்த காட்சியெல்லாம் என் வாழ்க்கையிலே அனுபவிச்ச மாதிரி இருக்கிறது" என்று கிளிசரின் போடாமல் பட்டென்று அழுது விடுவார். படப்பிடிப்பு நடந்த அத்தனை நாளும் எங்களோடு உண்டு, உறங்கிக் கிடந்த அவரைப் பிரிய வேண்டி வந்த போது, மனம் பொறுக்க முடியவில்லை. தங்கத்தில் தண்டட்டி வாங்கிக் கொடுத்து போட்டுக் கொள்ளச் சொன்னேன். "எம்மகங்கூட செஞ்சதில்ல ராசா"ன்னு கட்டிப் பிடித்து அழுதுவிட்டார். எனக்கு என் தாய் ஞாபகம் வந்துவிட்டது" என்று இரண்டு மாதங்களுக்கு முன் இறந்துபோன தமது தாய் கருத்தம்மாவின் ஈமச்சடங்கிற்காக மொட்டை அடித்திருந்த தமது தலையை மெல்லத் தடவியபடியே கலங்கிய பாரதிராஜாவுக்குள் அப்படியே இருக்கிறது மண்ணின் ஈரம்.

**— ஆர். சி. ஜெயந்தன்**



**பித்ரு தோஷ நிவர்த்தி வம்ச விருத்திக்கு வழிகாட்டும்!**

**தடைப்பட்ட திருமணம், பிள்ளைப்பேறு, கடன் தொல்லை நீங்கி ஆயுள் விருத்தியாக**

# பரிகார ஸ்தலமான இராமேஸ்வரத்தில் அமாவாஸை திதியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். திருமாலின் அவதாரங்களான ஸ்ரீ இராமனும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும், முனிவர்கள் பலரும் இங்கு வந்து நீராடியதால் இராமேஸ்வரம் க்ஷேத்ரத்திற்கு மென்மேலும் பெருமை உண்டு. இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் அழியாத புண்ணியப் பலனை கொடுக்கும்.

இராமேஸ்வரத்தில் நீராடி அன்னதானம் செய்தால் கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகளில் நீராடிய புண்ணிய பலனும் ஒருசேர கிடைக்கிறது. இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். அனைவரும் நலம் பெறுவர். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். அன்னமளிப்பது அமிர்தமளிப்பதற்கு சமம். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். வறுமை நீங்கி, பெரும் பணக்காரனாவான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக வடை,பாயசத்துடன் அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ சிறிய தொகை மற்றும் அரிசி போன்ற உணவுப் பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## நீங்கள் நினைக்கும் நாளில் இராமேஸ்வரத்தில் அன்னதானம்!

இராமேஸ்வரத்தில் நீங்கள் நினைக்கும் நாளில் அன்னதானம் செய்வதற்கு எமது அறக்கட்டளை சிறப்பான ஏற்பாடுகள் செய்துள்ளன. ஆகவே, நீங்கள் நினைக்கும் தேதியில் இராமேஸ்வரத்தில் அந்தணர்களுக்கும், சாதுக்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் அன்னதானம் செய்யலாம். ரூ.1000, ரூ. 5000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் அல்லது பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித சேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.

*CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :*

## கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை

**GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST**

**M-11/F-4, RAGAM APTS., I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA**

**☎: (044) 24900303, 24900603, 24416122 Fax: (044) 24916316**

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து

# திருட முடியாத மேஜிக்!



• சிறப்புக் காட்சியை படத்தில் நடித்த நாயும் பார்க்கிறது

**மை** டியர் குட்டிச் சாத்தானை, 3டி எஃபெக்ட்டுடன் கறுப்புக் கண்ணாடியெல்லாம் அணிந்து பார்த்து ரசித்த அனுபவம் ஞாபகமிருக்கிறதா? அதே நிவோதயா நிறுவனம், பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் 'மேஜிக் மேஜிக்' என்ற 3டி படத்தைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறது.

இந்த முறை டிஜிட்டல் ஒலி அமைப்பு, கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் ஆகிய நுட்பங்களையும் இணைத்து, ஒரு 3டி படத்தைப் பார்க்கும் த்ரில்லான அனுபவத்திற்கு மேலும் சுவாரஸ்யம் கூட்டியிருக்கிறார்கள். தமிழ், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய ஐந்து மொழிகளில் தயாரித்திருக்கிறார்கள். ஆனால் தமிழ்ப் பதிப்பைதான் முதல் கட்டமாக ரிலீஸ் செய்திருக்கிறார்கள். கையோடு ஐயாயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் வழங்கியிருக்கிறார்கள். 3டி லென்சை சினிமா புரொஜக்டரில் பொருத்தி, அதன் அலைன்மெண்ட்டை சரி செய்தல், படம் திரையிடப்படும் திரையங்குகளில் 3டிக்கான விசேஷ வெள்ளித் திரையைக் கட்டுதல், 3டி கண்ணாடிகளை பார்வையாளர்களுக்கு விநியோகித்து, காட்சி முடிந்ததும் அவற்றைச் சுத்தப்படுத்துதல் ஆகிய மூன்று முக்கிய பணிகளைச் செய்ய, வேலையில்லாப் பட்டதாரிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்து பணியில் அமர்த்தியிருக்கிறார்களாம். 3டி படம் திரையிடப்படும் ஒரு தியேட்டரில் குறைந்த பட்சம் இரண்டு தொழில் நுட்ப அலுவலர்கள், ஐந்து காவலர்கள், இருபது உதவியாளர்கள் தேவையாம். மே மாதத்தின் முதல் வாரத்தில் நாடு முழுவதும் நூறு மையங்களில் படம் திரையிடப்படும்போது, பணியில் அமர்த்தப்பட்ட இளைஞர்களை இந்தியா முழுவதும் அனுப்பப் போகிறார்கள். தவிர சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, மியான்மார், நேபால், பூடான், சீனா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் திரையிடும்போது, இதே இளைஞர்கள் படப்



• 3டி கண்ணாடியைச் சுத்தம் செய்யும் இளைஞர்கள்

பெட்டியோடு பயணப்படுகிறார்கள்! பலே! படம் எப்படி?

ஆச்சார்யா எழுபது வயதான பரம்பரை மேஜிக் நிபுணர். அவரது ஒரே மகன் மேஜிக் தொழிலில் விருப்பமில்லாமல் அமெரிக்காவுக்குப் போய் செட்டிலாகி விடுகிறார். ஆச்சார்யாவின் ஒரே ஆறுதல், பேரன் இந்திரஜித். பரம்பரை மேஜிக் கலையை, பேரனுக்குக் கற்றுக் கொடுக்கிறார். இதைப் பொறுக்க மாட்டாமல் இந்திரஜித்தை அமெரிக்காவுக்கு அழைத்துக் கொண்டு போய்விடுகிறார் அவனது தந்தை. ஆனால் போன இரண்டாவது நாளே அமெரிக்கா பிடிக்காமல், தாத்தாவின் நினைவுகளோடு வீட்டை விட்டு வெளியேறி, நியூயார்க் தெருக்களில் பசியோடு அலையும் இந்திரஜித்துக்கு, ரோமியோ என்கிற தெரு நாயின் நட்பு கிடைக்கிறது.

கூடவே மூன்று அமெரிக்கச் சிறுவர்களின் ஆதரவும் கிடைக்கிறது. தெரு முனைகளில் மேஜிக் செய்து பணம் திரட்டி இந்திரஜித்தை இந்தியாவுக்கு அனுப்ப, ஐடியா போடுகிறார்கள் சிறுவர்கள். இந்த நேரத்தில் எதிர்பாராத திருப்பமாக இந்திரஜித் கடத்தப்பட, செய்தியறிந்து அதிர்ச்சியோடு அமெரிக்கா வரும் ஆச்சார்யாவால், பேரனை மீட்க முடிந்ததா என்பதுதான் படத்தின் முடிவு.

'மை டியர் குட்டிச் சாத்தான்'



• மேஜிக் தாத்தாவும், பாசப் பேரனும்

முழுவதும் இந்தியாவில் நடக்கிற கதை. ஆனால் 'மேஜிக் மேஜிக்' படத்தை, நியூயார்க், நியூஜெர்சி, லாஸ் ஏஞ்சல்ஸ் என்று அமெரிக்காவிலேயே படம் பிடித்திருக்கிறார்கள். மேஜிக் நிபுணர் ஆச்சார்யாவாக எஸ்.பி. பாலசுப்ரமண்யமும், அவரது பேரனாக, நடிகரும் தயாரிப்பாளரு மான கே. பாலாஜியின் பேரன் சூரஜ் பாலாஜியும் நடிப்பில் கலக்கியிருக்கிறார்கள். படத்திற்காகவே முறையாக மேஜிக் கற்று இருவரும் நடித்தார்களாம். படத்தின் ஹீரோ யார் என்றால், 'ரோமியோ' என்ற பெயரில் நடித்திருக்கும் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்த நாய்தான். இதன் நிஜப் பெயர் 'பர்க்லி'. ஆஸ்கார் விருதுபெற்ற 'அமெரிக்கன் ப்யூட்டி', 'தி பார்ட்ஸ்லைட்' ஆகிய படங்களில் நடித்துள்ள இந்த நாயின் சம்பளம் இந்தியப் பணத்துக்கு எண்பது லட்சம் என்றால் நம்புங்கள்! வீட்டு நாய்களுக்கென்று நடத்தப்படும் டாக் ஷோவில், நைசாக உள்ளே புகுந்து, விருதைத் தட்டிக் கொண்டு வரும் பர்க்லியின் அறிமுகக் காட்சியே அசத்தல் என்றால், தன்னை பிக்பாக்கெட் அடிக்கப் பயன் படுத்தும் திருடர்களுக்கு கடுக்காய்க் கொடுத்து விட்டு, தப்பித்து வருவதில் தொடங்கி, நாணயத்தை வெண்டி மெஷினில் போட்டு குளிர்பானம் எடுத்துக் குடிக்கும் காட்சி என்று படம் முழுக்க ஜமாய்க்கிறது. இந்திரஜித்தைக் கடத்திக் கொண்டு போய் ஒரு மில்லியன் டாலர் கேட்கும் தெருவோரத் திருடர்களாக நடித்திருக்கும் ஹாலிவுட்டின் தொழில் முறை மேடை நடிகர்களான ராப் மற்றும் பட் அடிக்கும் லூட்டிகள் வயிற்றைப் புண்ணாக்கி விடுகிறது.

**தொ**ண்ணூற்று ஆறு நிமிடங்கள் மட்டுமே திரையில் விரியும் இந்தப் படத்தின் விறுவிறுப்பான திரைக் கதையை ரகுநாத் பலேரி எழுதியிருக்கிறார். நவோதயா நிறுவனர் அப்பச்சனின் மகன் ஜோஸ் புன்னூஸ் இயக்கத்தில் பிரமாதப்படுத்தியிருக்கிறார். மேஜிக் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் ஸ்டோர் ரூமை அற்புதமாக வடிவமைத்திருக்கும் கலை இயக்குனர் சாபு சிரிலையும் பாராட்டலாம். நம் கண்களின் அருகில் நெருங்கி வரும் எஃப்.பி (ஃபோர்ஸ் பார்ஸ்பெக்டிவ்) ஷாட்டுக்களை (3டி படங்களின் சிறப்பு அம்சம்) அடிக்கடி பயன்படுத்தி எரிச்சலூட்டாமல், போதிய இடைவெளிவிட்டு, லாஜிக்குடன் பயன் படுத்தியிருப்பதால் ஒன்றரை மணி நேரம் சந்தோஷ அனுபவத்தைத் தந்துவிடுகிறது. மந்திரம் என்பதைத் தந்திரம் என்பதாகச் சித்திரித்து, குழந்தைகளுக்கு தைரியம், புத்திசாலித்தனம், தாய் நாட்டின்மீது பற்று முதலியவற்றையும் சொல்லித் தருகிறது படம்.

இந்தப் படத்தின் மற்றொரு சிறப்பம்சம் இதை திருட்டு வீசிடி மூலம் படியெடுக்கவும் முடியாது. பார்க்கவும் முடியாது.

- ஜெய்

# வானொலியில் சிவகாமி!



**வா**னொலி பிரியர்களுக்கு ஒரு நற்செய்தி! எத்தனை முறை படித்தாலும், அலுக்கவே அலுக்காத அமரர் கல்கியின் 'சிவகாமியின் சபதம்' வரலாற்று நாவல், வானொலி நாடகத் தொடராக உருவாக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 19ம் தேதி முதல் தொடர்ந்து வாரந்தோறும் சனிக்கிழமைகளில் இரவு எட்டு மணிக்கு தமிழக வானொலி நிலையங்கள் அனைத்திலும் ஒலிபரப்பாகிறது.

வானொலியின் முதல் வரலாற்று நெடுந் தொடர் என்ற சிறப்பைப் பெறுவதோடு, முழுமையும் கணினி வழி அமைக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது.

- மா. ஜோதிமணி
(மதுரை வானொலி நிலையம்)

"புஷ் அங்கிள், ஸ்டாப் வார்" என்று எக்மோர் பேபி ஆஸ்பத்திரியில் போன வாரம் பிறந்த குழந்தை கூட ஃபீடிங் பாட்டிலும் கையுமாக எதிர்க்கும் போது, அமெரிக்கர்களும் அமெரிக்கப் பத்திரிகைகளும் மாறுபட்டனர்.

www.newyorktimes.com தளத்தில் பால் கிரக்மேன் என்கிற புகழ் பெற்ற எழுத்தாளர் அமெரிக்க ஊடகங்களை கச்சாமுச்சா என்று திட்டியிருந்தார் "என்னாய்யா... பொய் பொய்யா அள்ளி விடறீங்களே! ஏதோ வேற்று கிரகத்துலேயிருந்து செய்திகளைத் தட்டி விடற மாதிரி, ஒரே பீலாவா

# ரட்சகனே வாழ்க!



இருக்குதே. உள்ளது உள்ள படி எழுதுற, மற்ற நாட்டு ஊடகங்க மாதிரி நீங்களும் எப்பதான் நேர்மையா எழுதுவீங்களோ"ன்னு போர் ஆரம்பிக்கிறதுக்கு ஒரு மாசம் முன்னாடியே குறிப்பிட்டிருந்தார்.

போர் ஆரம்பிச்ச மூணாவது நாள், இதே தளத்தில் பெரும்பாலான அமெரிக்கர்கள் (62% சதவிகிதம்) ஈராக் போரை, ஆரத்தி சுற்றி வரவேற்கிறார்கள்னு ஒரு செய்தி வந்தது. அதுமட்டுமா? ஈராக்கிய மக்களும் முன்னேறி வரும் அமெரிக்கப் படைகளை வாழ்த்தி, வரவேற்கிறார்கள் என்றும் இங்கே செய்தி!

சதாம் ஹுசேனின் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து ஈராக் மக்களை விடுவித்த ரட்சகனாகவே அமெரிக்காவை, பெரும்பாலான அமெரிக்கர்கள் நம்புகிறார்கள். எரியும் தீயில் பெட்ரோல் விட்ட மாதிரி, 'செப்டெம்பர் 11' சம்பவத்துக்கும் ஈராக்கியருக்கும் ரகசிய பங்குண்டு என்ற தகவலும் சேர்ந்து கொள்ளவே, பல அமெரிக்கர்கள் இந்தப் போரை தர்மயுத்தமாகவே கருதினார்கள்.

* நீங்கள் நினைச்சதை யெல்லாம் எழுதி காகிதக் குப்பை சேர்ப்பவரா? இல்லை... காவியம் படைக்கும் ஆசையிலிருப்பவரா? உங்கள் எழுத்தாணி ஆர்வத்துக்கு என்றே 'வெப்லாக்' எனப்படும் இணைய பிரசுரவகை எக்கச்சக்கமாக உள்ளன. www.scripting.com<http / www.scripting.com> என்கிற தளத்தைப் பாருங்களேன். யதார்த்தமும் சுவையும் கொண்ட அறுசுவை எழுத்துக்களை ரசிக்கலாம். சில சமயம் அழகான புதையல் கிடைத்தாலும் கிடைக்கும்.

* உங்கள் கணினியில் புதிதாக Screen Saver மாற்றும்போது மறக்காமல் www.webshots.com தளத்தில் Ocean Life பக்கத்தைப் புரட்டுங்கள். பல படங்கள் கண்ணுக்கு ரம்யமாக உள்ளன.

— அருணா ஸ்ரீனிவாஸன்

# சில்லுக் கருப்பட்டி

2

அடுப்புப் புகை கண்ணைக் கரித்தது. ஈரமான சிமை உடை விறகைப் பிளந்து காய வைத்து அப்புறமாக அடுப்பைப் பற்ற வைக்கலாம் என்றிருந்தாள் செண்பகம். ஆனால் அதற்குள் 'விருந்து' வந்துவிட்டது. கண்ணன் தான். மாமா வீட்டுக்கு வருகிற அவசரத்தில் வெறும் வயிற்றோடு வந்து இறங்கியிருப்பானோ என்னவோ! நேரம் கடத்தினால் பாவம்!

அதனால் பச்சை விறகை அடுப்புக்குள் திணித்து அசுர சாதகம் செய்து கொண்டிருந்தாள் செண்பகம். அந்த நேரத்தில் பார்த்து அடுக்களை வாசற்புறம் வந்து நின்றான் கண்ணன்.

"செண்பகம்!"

## சென்ற வாரம்...

'விளை'யிலிருந்த அம்மாவைப் பார்க்கச் சென்றாள் செண்பகம். அப்போது ஊரிலிருந்த வந்த அவளது மாமன் மகன், வருகிறான். முக்கியமான விஷயம் பேச வந்ததாகச் சொன்னான். செண்பகம் அவனிடம் புளியங்காய் கேட்க, ஆசையாய் பறித்துக் கொடுத்தான். அவற்றைச் செண்பகம் பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் கொடுக்க அவனுக்கு அதிர்ச்சி!

கண்ணைக் கசக்கிக் கொண்டு திரும்பிப் பார்த்த செண்பகம், "என்ன அத்தான், தண்ணி வேணுமா?" என்று கேட்டாள்.

"இல்லே. வந்து செண்பகம், ஒரு பெரிய விஷயம் என் மனசுக்குள்ளே இருக்கு. அதை, அம்மா வந்து சொல்றதுக்கு முன்னாடி நானே உங்கிட்டே சொல்லிடலாம்னு பாக்கேன்!.." விடலைத்தனமான ஆர்வத்துடன் ஆரம்பித்தான்.

ஆனால் செண்பகம் நறுக்கென்று மடக்கி, "ஐயையோ, வேணாம், அத்தான்! பெரிய விஷயங்களைப் பெரியவங்க கிட்டேயே பேசுங்க. நான் ரொம்பச் சின்னவ. தாங்க மாட்டேன். இப்ப, இந்தப் புகை அடுப்பில சோறாக்குறது தான் எனக்குப் பெரிய விஷயம்" என்று அடுப்புப் பக்கமாகத் திரும்பிக் கொண்டாள்.

அவன் தயங்கி நிற்கவே, "அத்தான், பொழுது போகலைன்னா, அப்பா நாற்காலியில போய் ஒக்காருங்க." என்றாள்.

அதற்குமேல் நிற்க முடியவில்லை. முன்பக்க அறையில் கிடந்த ராசலிங்கத்தின் நாற்காலியில் போய்ச் சலிப்புடன் உட்கார்ந்தான். உட்கார்ந்திருப்பது மாமாவின் நாற்காலி என்ற உணர்வு



வந்ததும், சலிப்பு மாறி, மாமாவோடு பழகிய நினைவுகளின் ரசாயனம் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தியது.

பக்கத்தில் இருந்த அலமாரியில் தடித்தடியாகப் புத்தகங்கள். கண்ணனுக்குப் புத்தகங்களில் பெரிதாக ஆர்வம் கிடையாது. ஆனால் மாமாவின் புத்தகங்கள் என்பதால் நேசத்துடன் எடுத்துப் பார்த்தான். மகாபாரதம், ராமாயணம், கீதை, தேவி பாகவதம், தர்க்க சாஸ்திரம் இப்படிப் பல... பழைய பிரதிகள். மக்கிப் போன மஞ்சள் நிறத்தில் ஏடு ஏடுகளாகப் பக்கங்கள். புரட்டினால் உடைந்து விடுகிற மாதிரி.

இவற்றையெல்லாம் படிப்பவரா மாமா?

கண்ணனின் நினைவு சிலிர்த்தது.

மாமா வித்தியாசமானவர். தன் தங்கை குடும்பத்தைச் சிரிப்பும் வேடிக்கையுமாக மிட்டாய்ப் பெட்டியுடன் பார்க்க வரும் மாமா; தன்னையும் தன் தங்கை செல்வியையும் குழந்தைப் பருவத்தில் முதுகில் ஏற்றி 'யானைச் சவாரி' நடக்கும் மாமா... அம்மா அந்தக் காட்சியைப் பார்த்து விழுந்து விழுந்து சிரிப்பாள்.

அம்மா சிரிப்பதே, மாமா வந்தால்தான். கண்ணனின் அம்மாவிடமிருந்து சிரிப்பைப் பறித்துக் கொண்டது, கண்ணனின் அப்பா முத்தையாவின் அகால மரணம். தங்கை செல்வி கைக்குழந்தையாக இருந்தபோது, அவர் ஒரு வியாதியில் போய்விட்டார். அதற்குப் பின் தங்கையின் குடும்பத்துக்கு மாமா ராசலிங்கம் தான் கொழுகொம்பு. தங்கையையும் தங்கை குழந்தைகளையும் பார்க்க, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வருவார். சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொண்டுவருவார். நிராதரவான அந்தக் குடும்பத்தின் தேவைகளை மாமா தான் சுகமாகச் சுமந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக அங்கு வரும்போது அவர் முகத்தில் இருக்கும் வெளிச்சமான சிரிப்பு.. வேடிக்கைப் பேச்சுக்கள்.

அந்த மாமா, இங்கே தேரியூரில் தன் சொந்த வீட்டில் மிகவும் வித்தியாசமானவராக இருந்திருப்பதைக் கண்டான் கண்ணன். சுவரில் தொங்கும் ஒரு படத்தில் ஆழ்ந்த சிந்தனையுடன் கடுமையாகக் காணப்பட்டார். தன் மகன் செண்பகம், மனைவி ராமக்கனி இருவருடனும் இருக்கும் படத்திலும் இறுக்கமாகவே தோன்றினார்.

தன் வீட்டுக்கு வரும் சிரிப்பு மாமா, இங்கே வீட்டில் இருக்கும் சீரியஸ் மாமா - இரண்டிலும் உண்மையான மாமா யார்? கடுகடுவென்றிருக்கும் செண்பகம், இங்குள்ள கரடுமுரடான மாமாவின் சாயலா?

நினைவுகளில்



தாமரை மணாளன்

லயித்துக் கொண்டிருந்தபோது, செண்பகம் சாப்பிட அழைத்தாள்.

சாப்பிட ஆரம்பித்தான், கண்ணன்.

"செண்பகம், இன்னும் கொஞ்சம் உப்பு போடணும்."

"அத்தான், அரை உப்புத்தான் போடணும். அதுக்கு மேல போட்டா வியாதி. அப்பா சொல்லியிருக்காங்க."

"உப்பு போடறதில்கூட அப்பாவா?" விளையாட்டாகக் கேட்டான் கண்ணன்.

"உயிருள்ளவரை உழைச்சு உழைச்சு உப்பு இட்டவங்க ஆச்சே, அப்பா? அவங்களை மறக்க முடியுமா? ஆமா, நீங்க எங்க அப்பாவை மறந்துட்டீங்களா?" வெடுக்கென்று கேட்டாள் செண்பகம்.

பதில் கூற முடியாமல் தடுமாறினான் கண்ணன்.

தட்டைவிட்டு எழும்போது, "செண்பகம் நீ சாப்பிடலையா?" என்றான் உபசாரமாக.

"அம்மா வந்தப்புறம் ஒண்ணடியாச் சாப்புடுவோம். இப்ப எனக்கு வேலை இருக்கு."

"அதான் சமையல் வேலை எல்லாம் முடிஞ்சுட்டுதே."

"சமையல்ங்கிறது வீட்டு வேலை. என் வேலை வேற. அதான் படிக்கிறது" என்றாள் செண்பகம்.

"படிக்கிறதா?" ஆச்சரியமாகக் கேட்டான் கண்ணன்.

"ஆமா, கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸில் எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிறேன். அஞ்சல் வழிக் கல்வி கேள்விப்படலையா?"

உண்மையில் கண்ணன் கேள்விப்படவில்லை. படிப்பில் ஈடுபாடு வரவில்லை என்பதற்காக, பள்ளி கூடத்துக்குத் தலைமுழுகி விட்டு ஒரு பலசரக்குக் கடையில் வேலை பார்க்கிறான். படிப்பு விஷயத்தில் அம்மா கண்டிக்கவில்லை. மாமாவும் அவனைச் சங்கடப்படுத்த விரும்பவில்லை. 'படிப்பு வரா விட்டால் தொழிற் பயிற்சியாவது கிடைக் கட்டும்' என்று விட்டு விட்டார், மாமா ராசலிங்கம்.

ஆனால் ராசலிங்கம், தன் மகள் செண்பகத்தின் கல்வி விஷயத்தில் தீவிரக் கண்காணிப்போடு வழி நடத்தினார். அதற்குக் காரணம், செண்பகத்துக்கு இயல்பாய் அமைந்த படிப்பு ஆர்வம்.

செண்பகம் 'வயதுக்கு' வந்ததும், அவளுடைய பள்ளிப் படிப்புக்கு முட்டுக்கட்டை விழுந்தது. தந்தை அவளைப் பள்ளிக்கு அனுப்ப விரும்பினாலும் உறவுக்காரர்கள், குடும்பத்துப் பெரியவர்கள், எல்லாரும் ஒரே குரலில், "நம்ம குடும்பத்துப் பெண்களை, ஆளானதுக்கப்புறம் வெளியே அனுப்புற தில்லை. கிராமத்தில அது வசையாக இருக்கும், பட்டணத்தில எப்படி எப்படியோ இருக்கும்" என்று நிர்ப்பந்தம் செய்துவிட்டார்கள். ராசலிங்கத்துக்கும் ஒரு கோணத்தில் 'அது சரி' என்றே பட்டது. ஆளான பெண் கல்யாணம் ஆகும்வரை வீட்டில் அம்மாவுடன் இருந்து குடும்ப நிர்வாகத்தில் பயிற்சி பெற வேண்டிய திருக்கிறதே. அதோடு, வயதுப் பெண்கள் வெளியே சுதந்திரமாகப் பழகுவதற்கு வசதியாக, கிராம சுற்றுப்புற நிலை போதிய ஆரோக்கியமாக இல்லை. விவரம் தெரியாதவர்களின் பாமரத்தனமான வம்புகள், வெட்டிக் கதை, சோம்பேறித்தனமான அரட்டை... இதற்கெல்லாம் இடம் தர வேண்டாமே.

- இப்படி ராசலிங்கம் மனத்தைத் திருப்திப் படுத்திக் கொண்டாலும் மகளின் கல்வியை அஞ்சல் வழி மூலம் தொடர ஏற்பாடு செய்தார். படிப்போடு, புராண சரித்திர நாயகிகளின் தனித்தன்மை மிக்க பண்புகளை மகளுக்கு எடுத்துச் சொல்வார். உலகச் செய்திகளை அவளோடு அலசுவார். அப்போதெல்லாம் அப்பாவும் மகளும் நண்பர்கள்.

அப்பா இறந்துவிட்டாலும், அவர் தந்த ஊக்கம் ஓர் உந்து சக்தியாக, செண்பகத்துக்குள் இருந்தது. சீக்கிரம் எஸ்.எஸ்.எல்.சி. எழுதவிருக்கிறாள். அதற்கிடையில், கம்ப்யூட்டர் கற்க, ஒரு நிறுவனம் தந்த விளம்பரத்துக்குப் பதில் எழுதி, அழைப்புக் கடிதத்தையும் பெற்றிருக்கிறாள்.

இந்த நிலையில் இன்று அத்தை மகன் கண்ணன் ஏதோ 'பெரிய விஷயத்தை'ச் சொல்ல வீடு தேடி வந்திருக்கிறான்.

பதனீர் காய்த்து கருப்பட்டி வார்த்து விட்டு ராமக்கனி அம்மாள் திரும்பியபோது, ஒரு சிறு கூடையை செண்பகத்திடம் கொடுத்து, "இதைத் தனியாக வைத்திரு. உன் அத்தை வந்து போகும்போது அவளிடம் கொடுத்து அனுப்பணும்." என்றாள்.

அதைப் பார்த்த செண்பகம், "ஹை! சில்லுக்கருப்பட்டி அத்தைக்கு ரொம்பப் பிடிக்கும்" என்று பரவசப்பட்டாள்.

பதனீர் காய்த்து, பாகு எடுத்து கருப்பட்டி தயார் செய்வதில் பல தரங்கள் உண்டு. கட்டிக் கருப்பட்டி பரவலான உபயோகத்துக்கு. 'வார்ப்பு கருப்பட்டி' என்பது வீடுகளில்

---

"ஃபேனைப் போட்டுக்கிட்டுதான் என் அம்மாவும் மனைவியும் சண்டைபோடுவாங்க!"

"ஏன் அப்படி?"

"அவங்களுக்குக் காற்றுள்ளபோதே தூற்றிக்கணுமாம்!"

- சாவித்ரி வேங்கட சுப்ரமணியன்

சேகரம் செய்து வைத்து நெடுநாள் வரை பயன்படுத்துவது. பனங்கற்கண்டு தயாரிப்பது ஒரு நிலை. எல்லாவற்றிலும் தனித்தன்மை மிக்கது, சில்லுக் கருப்பட்டி. பதனீர் பாகுடன் எள்ளு, சுக்கு, ஏலக்காய் போன்றவை சேர்த்து, ஒரு தனிப் பக்குவத்தில் தயாராகும் சில்லுக் கருப்பட்டி, இந்தியாவெங்கும் கொண்டு போகப்பட்டு, ஒரு பரவலான ரசனைக்கு உள்ளானது. ரயில்வே ஸ்டேஷன்களில் கூட பரபரப்பாக விற்பனையாகும்.

"அம்மா, நீ அத்தைக்கு சில்லுக்கருப்பட்டி கொணர்ந்துட்டே. நான் அவங்களுக்கு ஏதாவது பலகாரம் செய்து சாயங்காலம் வந்ததும் கொடுக்கணுமே..." என்றாள் செண்பகம் ஆர்வத்துடன்.

"செய்யேன். உனக்குத்தான் உன் அத்தை என்றால் உசிராச்சே..."

"அப்பாவின் உசிருக்கு உசிரானவங்களாச்சே... வீட்டில என்னம்மா இருக்கு..."

"உளுந்து இருக்கு."

"அப்படின்னா வடை செஞ்சுடறேன்."

"அத்தை வர்றான்னதும் பறக்கிறதைப் பாரு" என்று மகளைக் கேலி செய்தாள், தாய் ராமக்கனி.

இந்தப் பேச்சு காதில் விழுந்ததும், கண்ணனுக்கு ரோமக் காலெங்கும் பரவசம். 'அடேயப்பா, செண்பகத்துக்கு அம்மா பேரில இவ்வளவு பாசம் இருக்கா? அப்ப நாம வந்த காரியம் வெற்றிதான்' மனம் குளிர்ந்தது.

"எனக்கு வடை கிடையாதா?" என்று அவர்கள் முன்னால் போய் நின்றான் கண்ணன்.

"அத்தை சாப்பிட்டதுபோக, மிச்சம் மீதி இருந்தா உங்களுக்கும் கிடைக்காமலா போகும்?" என்று சிரித்தாள் செண்பகம்.

மனம் இலேசாகி, குதூகலமாகச் சிரித்தான் கண்ணன்.

"கண்ணா, நீ ரோட்டுப் பக்கம் போய், அம்மா வந்ததும் கூட்டிட்டு வா!" என்று ராமக்கனி அம்மாள் கூற, வேகமாக வெளியேறினான்.



'மயினி - சம்பந்தி' உறவு என்பது, நம் கதை நிகழும் நெல்லைச் சீமையின் தென் கோடிப் பகுதியில், மிக அபூர்வமானது. கணவனின் தங்கையை, மற்றப் பகுதிகளில் 'நாத்தனார்' என்பார்கள். இங்கே, அவள்தான் 'சம்பந்தி'. ஒரு வேளை, 'முறைப் பெண்ணும் முறைப் பையனும்தான் திருமணம் செய்து கொள்வார்கள்' என்ற பழம் மரபு இருந்ததை யொட்டி நாத்தனாரை முன்கூட்டியே 'சம்பந்தி' என்று அழைக்கத் தலைப்பட்டிருக்கலாம். இந்த மயினி - சம்பந்தி இருவரும் ஒருவரையொருவர் விளிக்கும்போது, 'மயினி!' என்றே பரஸ்பரம் அழைத்துக் கொள்வார்கள். இவர்களுக்குள் கேலி, விளையாட்டு எல்லாம் உண்டு.

அதன்படி, ராமக்கனி அம்மாள், மயினி (மதனி), கண்ணனின் தாயாரான பூமணி அம்மாள், 'சம்பந்தி'!

இன்றும் அப்படித்தான்.

பஸ் ஸ்டாண்டிலிருந்து, கண்ணன் அழைத்து வந்த பூமணியை வீட்டு வாசலில் நின்று, கட்டியணைத்து வரவேற்றாள் ராமக்கனி அம்மாள்.

சிறிது நேரம் வரை, ஒருவருக்கொருவர் குசலம் விசாரிப்பு, ஊர்க்கதை, உறவினர் கதை...

எல்லாம் முடிந்ததும், பூமணி மெதுவாக ராமக்கனியிடம், "மயினி, நம்ம ஊர் நாராயணசாமி கோயிலுக்குப் போயிட்டு வருவமா?" என்று கேட்டாள்.

"என்ன திடீர்னு கோயிலுக்கு?"

"நேற்று, நானும் என் மகனும் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசினோம். அதை, தெய்வ சம்மதத்தோடு உங்ககிட்டே சொல்லணும்னுதான் கோயிலுக்குக் கூப்பிடுதேன்."

அப்போது செண்பகம் குறுக்கிட்டு, "ஓ, காலையிலிருந்து ஏதோ 'பெரிய விஷயம்'னு அத்தான் சொல்லிக்கிட்டிருக்காங்களே, அதுவா?" என்று சாதுவாகக் கேட்டாள்.

பூமணி ஆமோதிப்பாகச் சிரித்தாள்.

பூமணி அந்த ஊரில் பிறந்தவள். அதனால் கோயிலில் அவளுக்கு வாத்சல்யமான வரவேற்பு. அங்கிருந்த பெரியவர்கள் நிறைய விசாரித்தார்கள். 'ஒரு நல்ல விஷயமாக வந்திருப்பதாக' எல்லாரிடமும் சொன்னாள். பூசாரியிடம், 'சீக்கிரமே பொங்கல் வச்சு சிறப்பு அர்ச்சனை செய்ய வேண்டியதிருக்கும்' என்றாள்.

இத்தனைக்கும் கூடவே வந்த ராமக்கனி வாயைத் திறக்கவில்லை.

வழிபாடு முடிந்து, கோயிலைச் சுற்றி வந்ததும் மண்டபத்தின் ஒதுக்குப்புறமாக எல்லாரும் அமர்ந்தார்கள்.

கொஞ்ச நேரம் மௌனம். செண்பகம்தான் அமைதியைக் கலைத்தாள்.

"ஏதோ பெரிய விஷயம்னு சொன்னீங்களே, அதை இப்போ சொல்லப் போறீங்களா, அத்தை?"

"ம்ம்" என்று தன்னைத் தயார் செய்தாள் அத்தை.

"அத்தை, நீங்க பேசும்போது நான் இருக்கலாமா?" என்றாள் செண்பகம்.

"நீதான் கட்டாயமா தெரிஞ்சுக்கணும்" என்று பூமணி தொடர்ந்தாள்.

"மயினி, உங்களுக்கு நான் புதுசா சொல்ல வேண்டியதில்லை. அண்ணன் இருந்தபோது, அவங்க உசிர்த்துடிப்பெல்லாம், இந்தத் தங்கச்சி பேரிலேயும் தங்கச்சி பெத்த தகப்பனில்லாத பிள்ளைகள் பேரிலேயும் தான் கெடந்து அடிச்சது. நாங்க வாழ்ந்த வாழ்வெல்லாம் அண்ணனால தான். பொழச்ச பொழப்பும் அவியளால தான். அந்த நன்றிக்கு நாங்க ஜென்மம் பூராவும் கடமைப்பட்டிருக்கோம். அண்ணன் நம்மளையெல்லாம் விட்டுப் போனப்புறம் இப்ப நீங்க நிர்க்கதியா இருக்கீங்க. ஒரு கொமரிப் பொண்ணைக் கடத்தற கமை உங்களுக்கு இருக்கு. செண்பகம் கல்யாணத்துக்காக செப்புக் காசையும் அண்ணன் சேர்த்து வைக்கலை. அதனால, செண்பகத்தை, எந்தச் செலவும் இல்லாம, கண்ணனுக்குக் கட்டி வச்சுட்டா, உங்க பாரம் நீங்கும். ஒண்ணுக்குள்ளே ஒண்ணாப் போயிடும். அதைத்தான் கண்ணனும் நானும் பேசிட்டு, உங்ககிட்டே கேட்க வந்தோம். கோயில்லே வச்சு, நீங்க நல்ல முடிவாச் சொன்னா, எல்லாம் மங்களமாக இருக்கும்" என்றாள் பூமணி.

ராமக்கனி அம்மாள், மௌனச் சிலையாக இருந்தாள். அனுபவசாலியான அவள், தன் சம்பந்தி பூமணி இதைத்தான் சொல்வாள் என்று ஊகித்திருந்தாள். கல்யாணத்தைப் பற்றிப் பேசினாலும், இப்படிப் பெரிய பெரிய வார்த்தைகளைப் போட்டு, இடுக்கிப் பிடியாகப் பேசுவாள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அதனால் பதில் சொல்லத் தோன்றாமல் இருந்தாள்.

ஆனால் செண்பகத்தின் முகம் தெளிவாக இருந்தது. அவள் தன் தாயின் முகத்தையும், அத்தையின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள். பின் மெதுவாக, "அத்தை, நீங்க கேட்டதுக்கு அம்மா பதில் சொல்லணும்னா, இன்னும் ரெண்டு மூணு வருஷம் ஆகும். ஒரு வருஷம் வரை யோசிச்சுக்கிட்டே இருப்பா. அப்புறம் இன்னும் ஒரு வருஷ காலம், ஜாதகத்தைத் தூக்கிக்கிட்டுத் தெரிவாள்; தெய்வம் தேவாதிகள் கிட்டே உத்தரவு கேட்பாள். இப்படி நிறைய இருக்கு. அப்புறமும் அம்மா 'பட்'டுன்னு ஒரு பதிலைச் சொல்ல மாட்டாள். வளவள கொளகொளன்னு தான் பதில் சொல்வாள். ஆனா, இதே விஷயத்துக்கு நான் பதில் சொல்லணும்னா, இப்பவே, உடனேயே சொல்லிப் புடுவேன்." என்று நிறுத்தினாள்.

# சம்மதமே!



மசூதியாகட்டும்
ராமர் கோயிலாகட்டும்
எம்மதமும் சம்மதம்தான்
அந்தச் செங்கல்லுக்கு!

**டெல்லி எஸ்.ராமஸ்வாமி**

"சொல்லேம்மா!" என்றாள் பூமணி.

"இதை அம்மா சொல்லணும். அம்மா வாய் திறந்து 'சொல்லு'ன்னு சொல்லாம நான் சொல்லக் கூடாது. தலை இருக்க வால் ஆடலாமா? அம்மா சொல்லச் சொன்னால் சொல்றேன்." என்றாள் செண்பகம் கெத்தாக.

ராமக்கனி அம்மாள் மகளை நிமிர்ந்து பார்த்தாள். பூரணப் பிரகாசமான முகத் தெளிவுடன் மகள், தன் அனுமதியைக் கேட்பதை உணர்ந்தாள்.

"செண்பகம், நான் பேசறதுக்கு என்ன இருக்கு? உங்கப்பா இருந்தபோது, நான் உலகம் தெரியாதவளா இருந்தேன். அவிய போனப்புறம், நானும் செத்த கட்டையா அலையுறேன். அத்தை கேட்கிறது, உன் வாழ்க்கை சம்பந்தப்பட்ட விஷயம். நீயே சொல்லு. வேற யாரு கிட்டே சொல்லப் போறே. அந்நியர் கிட்டேயா? இல்லையே, உன் அத்தை கிட்டேயும் உன் அத்தை மகன் கிட்டேயும் தானே... சும்மா சொல்லு." என்றாள் தாய்.

"இதை நானாப் பேசலை. சின்ன வயசிலிருந்தே எங்கப்பா எனக்குச் சொல்லித் தந்த விஷயங்களை வச்சுத் தான் நான் சொல்றேன்." என்ற பீடிகையுடன், செண்பகம் தெளிவாகப் பேச ஆரம்பித்தாள்.

அவள் பேசப்பேச தாய் ராமக்கனிக்கு மிரட்சி, அத்தைக்கும், அத்தை மகனுக்கும் அதிர்ச்சி.

(தொடரும்)



# காபி குடித்தார், விருது கிடைத்தது!

'காலையில் எழுந்தவுடன் ஒரு கப் காப்பி குடித்தால் தான் வேலையே ஓடும்' என்று சொல்பவர்கள் ஏராளம். ஆனால் காப்பி குடிப்பது தான் வேலையே என்று ஒரு பெண்மணி சொன்னால்...? ஜோக்கல்ல நிஜம்!

இந்தியாவின் முதல் 'காபி டேஸ்டர்' பெண்மணி சுனாலினி மேனன். தினமும் கோப்பை கோப்பையாகக் காபி குடித்து, நிறம், சுவை, திடம் என்று தரம் பிரிக்கும் வேலை!

''முப்பது வருஷங்களுக்கு முன்பு, டிகிரி முடித்த கையோடு நாளிதழில் 'டேஸ்டர் தேவை' விளம்பரம் பார்த்தேன். விண்ணப்பித்தேன். அதுவும் ஒரே பெண்... எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு நடந்தன. காபி போர்டில் அதுவரை பெண்களை அந்தப் பதவிக்கு எடுத்ததில்லை. ஆனால் முதலாவதாகத் தேர்ச்சி பெற்ற பின் எனக்கு அந்த வேலையைக் கொடுப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. 'என் பாஸ் எச்.ஜி.வி. ரெட்டி உற்சாகம் ஊட்டினார். பயிற்சிக்காக, ஸ்விட்ஸர்லாந்து, ஜெர்மனி என பல வெளிநாடுகளுக்கு காபி போர்டு என்னை அனுப்பி வைத்தது. அந்தக் காலத்தில் இது பெரிய விஷயம். ஐந்தே வருடத்தில் என் திறமைக்கேற்ற பரிசு! ரெட்டியின் இடத்தில் சேர்மனாக எனக்கு பிரமோஷன். அப்போது என் வயது இருபத்தைந்து தான். பிறகு இருபது வருடங்கள் காபி போர்டில் பணிபுரிந்து வி.ஆர்.எஸ். வாங்கிக் கொண்டேன்'' மென்ள அறிமுகம் செய்து கொள்கிறார் சுனாலினி.

கையிலிருந்த பணம், நெஞ்சில் இருந்த திடம் இரண்டையும் சேர்த்து சுனாலினி 'காபி லேப்' எனும் புதுமையான கூடத்தை பெங்களூர் சதாசிவ நகரில் தொடங்கியது அடுத்த முயற்சி. காபி போர்டினால்

**சபாஷ்!**

**வட்டமேஜை**

டி.ஏ.சி. பிரகாஷ், திருச்செங்கோடு

வாழ்க்கையை கிரிக்கெட்டுடன் ஒப்பிட்டு, வாசகி எழுதியிருந்த முதல் பரிசுக் கவிதை அருமை. முதல் பரிசுக்கு சரியான தேர்வு!

அங்கீகரிக்கப்பட்ட இந்தக் கூடத்தில், காபிக் கொட்டைகளின் தரம் ரகவாரியாக அலசப் பட்டு, மணம், ருசி, நிறம் என கிரேடு போடப்படுகிறது.

"எங்களுடைய முத்திரை இருந்தாலே அந்தக் காபி நன்றாகத்தானிருக்கும் என்ற நம்பிக்கையைச் சம்பாதித்திருக்கிறேன். காபிக் கொட்டை பயிரிடுவதிலிருந்து ஒவ் வொரு கால கட்டத்திலும் விவசாயிகளுக்குச் சரியான வழிமுறைகள் சொல்லிக் கொடுக் கிறோம். டிசம்பர் என்றால் சென்னையில் சங்கீத சீஸன். காபியைப் பொறுத்தவரை அது தான் அறுவடை நேரம். பயங்கர பிஸியாக இருப்போம்" என்றார்.

இவருடைய காபி லேப் மிக வித்தியாச மான அலங்காரத்துடன் காட்சி தருகிறது. நம் வீட்டுப் பரணில் ஒட்டடையுடன் உட் கார்ந்திருக்கும் பித்தளை காபி ஃபில்டர்கள், சம்புடங்கள் எல்லாம்... ஜம்மென்று ஆசனம் போட்டுக் கவர்ந்திழுக்கிறது. காபி ரோஸ் டர்கள், காபி கொட்டை மிஷின்கள், பர்க்கு லேட்டர்கள், காபிக் கோப்பைகள், ஜாடிகள் என சைஸ் வாரியாக அடுக்கப்பட்டிருக் கின்றன. (பாட்டிமார்கள் பார்த்தால் சுனாலினிக்கு கண்டிப்பாக திருஷ்டி சுற்றிப் போடுவார்கள்.) ஒவ்வொரு நாட்டிலிருந்தும் காபி சம்பந்தப்பட்ட பொருளை வாங்கி அடுக்கி அழகு பார்க்கிறார் சுனாலினி.

இவருக்குக் கிடைத்த விருதுகள் ஏராளம். 'டீ அண்ட் காபி டிரேடு ஜர்னல்' எனும் இதழ், சுனாலினிக்கு இவ்வருடத்து சிறந்த நபர் (பர்ஸன் ஆப் தி இயர்) என்னும் விருதை வழங்கி கௌரவித்திருக்கிறது.

"உலகமெங்கிலிருந்தும் நான்கு பேரைத் தேர்வு செய்து, வழங்கப்படும் கௌரவம் இது. முதல் ஆசியப் பெண்மணி என்ற கூடுதல் சிறப்பும் இதிலடக்கம்" என்கிறார் தன்னடக்கத்துடன்!

ஒரு திறமையான டேஸ்டருக்கு என்ன குணாதிசயங்கள்?

"நல்ல நினைவாற்றல் வேண்டும். ஒரு நாளைக்கு நான் எழுபத்து இரண்டு கோப்பை காபி குடிக்கிறேன். (பாலுடன் அல்ல) ஒரு கப்பிற்கும் இன்னொரு கப்பிற் கும் உள்ள சுவை, வித்தியாசத்தை நினைவில் கொள்ள வேண்டும். 'இந்த காபியில் எனக்கு கிடைத்த ருசி இது' – என பட்டவர்த்தன மாக சொல்லும் ஆற்றல் வேண்டும்" என்கிறார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சுவைஞர் சுனாலினியைக் கவர்ந்தது மூன்று விஷயங்களாம்...

"காபி, காஞ்சிபுரம், கல்ச்சர்."

**– லதா சேகர்**

## கவிப் பிசாசும் தீரா காதலும்!



✉ இருபத்து மூன்று வாரம் காதல் பற்றிச் சொல்லி, இலக்கியத்தி லிருந்து சினிமா வரை தீராத காதல் கொள்ள வைத்து விட்டார் யுகபாரதி!
பள்ளிபாளையம், ரஞ்சனிப்ரியன்.

✉ 'காதலை நெய்து வைத்திருக்கிறது காலம். மிகச் சரியாக பொருந்து கிறவர்கள் மகிழலாம், அல்லாதவர்கள் தவிர்த்து ஒதுங்கலாம்' - யுகபாரதியின் வரிகள் உயிரோட்டமானவை.
சென்னிமலை, எஸ். கௌதம்


✉ திகட்டாத தேன் அமுதைச் சிறப்பாக தம் கன்னி முயற்சியிலேயே பிரசவித்த யுகபாரதிக்கு வாழ்த்து. 23 - வாரங்கள் நிமிஷங்களாகக் கரைந்தன.
சென்னை - 61, ஆர்.நாகராஜன்

✉ கவித்துவமான அனுபவத்தில் ஆழ்த்தி விட்ட யுகபாரதியின் 'காதல் பிசாசே' தொடர் மனத்திலிருந்து 'ரன்'ஆகி விடாத தொடர்தான்... பரவாயில்லை.
அயன்புரம், த. சத்தியநாராயணன்

✉ பழசையும் புதுசையும் இணைத்து, பிசாசை நன் றாகவே பின்னியெடுத்தார் கவிப்பிசாசு. அத்தியாயம் 22ல் ஒரு திருத்தம். 'இரண்டு மனம்' கேட்கும் கண்ணதாசன், நினைத்து வாழ ஒன்றும், மறந்து வாழ ஒன்றும் கேட்கவில்லை. நினைத்து வாழ ஒன்றும், மறந்து வாட ஒன்றும்தான் கேட்கின்றார்!
சென்னை - 94, நவம்

# வழிகாட்டும் வள்ளுவன்!


"லஞ்சம் கொடுப்பதும் குற்றம், வாங்குவதும் குற்றம். மக்களே எஜமானர்கள், அவர்களுக்கு சேவை செய்யும் தலைமைச் சேவகன் நான்" - எனச் சொல்லும் விருத்தாசலம் நகர மன்றத் தலைவர் டாக்டர் மு. வள்ளுவன் பதவியேற்று இருபது மாதங்களாகின்றன.



• மு. வள்ளுவன்

முன்பு எந்த அடிப்படையில் (வீடு, கடை, மனைகள்) வரி விதிக்கப்படுகிறது என உரிமையாளருக்குத் தெரியாமலிருந்தது.

இப்போது நகரசபைப் பகுதியை மூன்றாகப் பிரித்து (தரத்திற்கேற்ப) ஏ பகுதி சதுர அடிக்கு 70 காசும்; பி-க்கு 55 காசும், சி-க்கு 40 காசும் வரி விதிக்கப்படும் என்ற தகவல் தந்து, உரிமையாளர் தருகிற தகவல் சரியாக இருந்தால் அதன்படி வரி விதிக்கின்றனர். குறிப்பிட்ட பகுதியில் வீடு வீடாகச் சென்று ஆய்வு நடத்தியதில் பல வீடுகளுக்கு புதிய வரி விதிக்காமல் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அவர்களை







வரி கட்ட வைத்ததில் நகராட்சிக்கு இருந்து வந்த 50 லட்ச ரூபாய் கடன் தீர்ந்து போனது.

மாவட்ட ஆட்சியர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் உதவியுடன் பலத்த எதிர்ப்புக்கிடையே, அடிக்கடி விபத்து நடக்கும் பாலக்கரை பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, காய்கறி மார்க்கெட்டின் தென்புறம் பெரிய மதிற்சுவரை பதினான்கு மணி நேரத்தில் கட்டி முடித்தார். இன்று வரை எந்த விபத்தும் நடக்கவில்லை என்பது ஆறுதலான விஷயம்.

செவ்வாய் தோறும் காலை ஐந்தரை மணிக்கு என்சிசி மாணவர்கள், ஜூனியர் ரெட்கிராஸ் அமைப்பினர், தன்னார்வ ஆர்வலர்களுடன் சேர்ந்து, நகரின் நடுவில் உள்ள மணி முத்தாறு நதி பாலத்தின் இரு முகப்புகளிலும், வாகனங்கள், காற்றால் ஏற்படும் மண் குவியல்களைப் பெருக்கி அகற்றுகின்றார். இதே போல் சனிக்கிழமைகளில் நகருக்குள் குறிப்பிட்ட பகுதி சாலைகளைத் தூய்மையாக்குகின்றனர். முப்பத்து மூன்று வார்டுகளுக்கும் இதற்காக மூன்று சக்கர சைக்கிள் வழங்கிய பின்பு நகரே தூய்மையாகி விட்டது.

– இரா. செயபாலன்

# ஏறு நூறு



உங்களையே எடை போட்டுப் பார்த்ததில் ஓரளவு உங்களுக்கான கேரியர் எது என்று கண்டு கொண்டிருப்பீர்கள். அடுத்தபடி, வேலை வாய்ப்பு உலகம் பற்றிய தகவல்களைத் திரட்டி இருப்பீர்கள். ஆனால் இரண்டையும் இணைத்தால்தான் இது முழுமை பெறும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? உங்களை எடை போட்டுக் கிடைத்த விவரங்களையும், வெளியே உள்ள வேலை வாய்ப்புகளையும் இணைக்க வேண்டும். இதைத்தான் முடிவு எடுக்கிற முக்கியக் கட்டமாகக் குறிப்பிடுவார்கள். இந்த சாய்ஸில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாய்ப்புகள் உங்கள் கணிப்பில் கிடைக்கலாம்.

எப்படி முதல் அடி எடுத்து வைப்பது? ஒரு நபரின் கேரியர் பிளானிங்கில் மூன்று வழிகள் இருக்கின்றன.

முதலாவது, 10 ஆம் வகுப்புப் படிக்கும் போது எந்த குரூப்பில் சேர்வது - சயன்ஸா, காமர்ஸா, ஆர்ட்ஸா?

இரண்டாவது, 12ஆம் வகுப்பில் உங்கள் லட்சியம் என்ன? சயன்ஸை எடுத்துக் கொண்டிருந்தால் இஞ்சினியரிங், மெடிகல், அல்லது பிஎஸ்ஸி. சரி, பிஎஸ்ஸி என்றால், எந்த சப்ஜெக்ட்?

மூன்றாவது, டிகிரி படிப்பில் கடைசி ஆண்டு. மேலே படிப்பதா அல்லது வேலை தேடுவதா? மேலே படிப்பது என்றால் எந்தத் துறையில்? வேலை தேடுவது என்றால், வேலை வாய்ப்பு உலகம் பற்றிய முழுத் தகவல்களையும் திரட்ட முற்படுவீர்களா?

இந்த ஒவ்வொரு படியிலும் ஒரு முடிவை எடுக்க,விஷயம் தெரிந்த விவரமான நபர்களிடம் யோசனை கேட்கலாம். உங்கள் பள்ளி - கல்லூரி ஆசிரியர்களோ, உங்கள் பெற்றோரோ, தொழில் முறை ஆலோசகர்களோ - யாரானாலும் சரி. இதை முன்பே சொல்லியிருக்கிறேன். கேரியர் வழிகாட்டி நூல்கள், கல்வி சம்பந்தமான

**ஆர். கண்ணன்**

### திகிலுக்கு ஈடு!

அட்டையில் 'இடி' முதல்பக்கம் 'பரபரப்பு' தலையங்கத்தில் 'படுகொலை' சிறுகதைகளில் 'பிசாசு' 'முள் படுக்கை' புதிரில் 'தாம் தூம் வி.ஐ.பி.... என்றெல்லாம் இருப்பதால் தான்- இலவச இணைப்பில் 'ஜில்லுனு ஜோரா' வாசகர்களுக்கு 'ஐஸ்' வைத்து ஈடு செய்கிறீர்களோ!

**வட்டமேஜை**
அய்யாறு வாசுதேவன், சென்னை.



8

# ரெடி; பிளான்; ஆக்ஷன்!

வெப்தளங்கள், எல்லாம்கூட நீங்கள் ஒரு முடிவு எடுக்க மிகவும் உதவும்.

**அலசும் வழிகள்:**


தொழில்துறைகள், அவற்றின் எதிர்காலம், உங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்று கூர்ந்து கவனித்து வாருங்கள். நாம் வாழுகிற உலகச் சூழலில், கண் மூடித் திறப்பதற்குள் என்னென்னவோ நடந்து விடுகிறது. தொழில் வளங்கள், புதிய வாய்ப்புகள், புதிய பாதைகள், எதிர்காலத் திருப்பங்கள், இவை பற்றி எல்லாம் நீங்கள் அறிந்திருப்பது அவசியம். புதிய டெக்னாலஜியை எடுத்துக் கொள்ளுங்கள். சயன்ஸில் அது பல மாற்றங்களை உருவாக்கி, பயோ-டெக்னாலஜி, பயோ-இன்ஃபர்மேட்டிக்ஸ் என்று பல வடிவங்களை எடுத்து வசீகரிக்கின்றன.


நீங்கள் சேகரித்த தகவல்களில் இரண்டு அல்லது மூன்று வாய்ப்புகளை மட்டும் பட்டியல் இடுங்கள். இதை ஷார்ட் லிஸ்ட் என்பார்கள். பிறகு முக்கியமானதாகத் தோன்றும் ஒரே ஒரு வாய்ப்பை மட்டும் தேர்ந்தெடுங்கள்.

எது உங்களுக்கு ஏற்றதாக இருக்கும் என்று நீங்களே எடை போட வேண்டும். உங்கள் திறமை, பெர்சனாலிடி, மதிப்பீடுகள் இவற்றுக்குப் பொருந்தி வருகிற மாதிரியான மேற்படிப்பை, வேலையைத் தேர்ந்தெடுங்கள். பகல் நேரப் படிப்புத்தான் உகந்தது என்று நீங்கள் தீர்மானித்தால், சிறந்த கல்லூரி எது என்று பாருங்கள். குடும்பச் சூழல், பொருளாதார நிலை, எல்லாமே நீங்கள் ஒரு முடிவை எடுக்கு முன் பரிசீலிக்கப்பட வேண்டும்.

நீங்கள் கேரியர் பிளானிங்கில் முடிவு எடுக்க, தெளிந்த சிந்தனை, மிக அவசியம். அதுதான் பிறகு தன்னம்பிக்கையைத் தரும். அடுத்தது திட்டமிடுதல். நீங்கள் ஒரு பிளான் ஆஃப் ஆக்ஷன் தயாரித்துக் கொள்ள வேண்டும். இதுதான் கடைசி வரை உங்கள் வழிகாட்டியாக உதவும்.








## யார் அந்த கர்ண மகாராஜா?

அந்தக் கிரிக்கெட் நட்சத்திரத்துக்கு குழந்தைகள் என்றால் உயிர். அவர் வசிக்கும் இடத்துக்கு அருகே உள்ள 'அப்னா லய்' என்ற குழந்தைகள் நல காப்பகத்துக்கு, அடிக்கடி குடும்பத்தோடு சென்று வருவதோடு, பண உதவியையும் செய்து வருகிறார். தாம் உபயோகித்த மட்டை, பந்து, உறைகள் போன்றவற்றை ஏலத்தில் விட்டு, கிடைக்கும் பணத்தை 'அப்னா லய்' காப்பகத்துக்கு நன்கொடையாக அளித்து ஆறுதல் அடைகிறாராம்!

யார் அந்த கிரிக்கெட் ஸ்டார்?

சாட்சாத் சச்சினேதான்!

**நவிமும்பை மஞ்சுதேவன்**

---

இதற்கு என்ன செய்ய வேண்டும்?

கேரியர் பிளானிங்கில் நீங்கள் எடுக்கும் முடிவுகளை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அவற்றைச் செய்து முடிப்பதற்கான கால அவகாசத்தையும் குறித்து வையுங்கள். கூடுமானவரை உங்களுக்கு ஆலோசனை தந்து உதவக்கூடிய நபர்களையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் ஆக்ஷன் பிளான் இப்படி இருக்கலாம்:

முடிவு : எந்தத் துறையில் விருப்பம்

உதவுபவர்கள்: பெற்றோர், ஆசிரியர், ஆலோசகர்கள்

செயல்: 10ஆம் வகுப்பு முடிக்கு முன்

கேரியர் பிளானிங் சாதாரண விஷயமல்ல என்று முன்பே குறிப்பிட்டேன். தொடர்ந்து கவனமாகக் கண்காணித்தால் தான் உங்கள் விருப்பத்துக்கு ஏற்ற மாதிரி முடிவு எடுக்க முடியும். ஆனால் இந்த வழிமுறை உங்கள் மனசைத் திறக்கும். எத்தனை எத்தனை வாய்ப்புகள் உலகில் இருக்கின்ற என்ற உண்மை நிலையை உணர்த்தும்.

அடுத்த வாரம்: **படிக்கிற பழக்கம்: சுமையல்ல, சுகம்!**

உங்கள் சந்தேகங்களை, வினாக்களை kalki@careersindia.com ஈமெயிலுக்கு அனுப்புங்கள்:

படங்கள்: **யோகா**

# மங்கையர் மலர்



மஞ்சுளா ரமேஷ்,
ஆசிரியர், மங்கையர் மலர், சென்னை.

**"மங்கையர் மலர், திருமண மலர் பகுதியிலேயே விளம்பரம் செய்வதை பெண்கள் ஏன் விரும்புகிறார்கள்?"**

"ஏனென்றால் - தங்கள் மகன், மகளுக்குத் திருமணம் செய்ய விரும்பும் தாய்மார்களின் கைகளுக்கு இவ்விளம்பரம் நேரிடையாகச் செல்கிறது.

அதனால்தான் செய்யப்படும் விளம்பரங்களுக்கும் நிறைய பதில்கள் வருகின்றன.

மங்கையர் மலர் திருமண மலரில் விளம்பரம் செய்தாலே 'ராசி', திருமணம் குதிர்ந்து விடும் என்பது பல்லாண்டுகளாக நடந்து வரும் நம்பிக்கை.

ஜாதி பேதமில்லாமல் எல்லோரும் படிக்கும், பெண்களால் கடந்த 22 ஆண்டுகளாக முதன்மையாக வைக்கப்பட்டிருக்கும் பத்திரிகை. அதனால்தான் எல்லா இனத்தினரும் திருமண மலரில் விளம்பரம் செய்கிறார்கள்.

**நீங்களும் உங்கள் மகன் அல்லது மகள் திருமணத்திற்கு மங்கையர் மலர், திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்."**

**'திருமண மலர்' பகுதியில் விளம்பரம் செய்ய அணுகவும் :**
மானேஜர், திருமண மலர் பகுதி,
கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை-97 தொலைபேசி : 22345622/23/24 தொலைநகல் : 044-2234 5621
மங்கையர் மலர் இன்டர்நெட் முகவரி : www.mangayarmalarmonthly.com

KALKI DESIGN STUDIO 3/03



# ஒட்டகத்தைத்

தங்க நகைகள் சரம் சரமாகத் தொங்குகின்றன. ஓமான் மணி மாலைகளும், வெள்ளி நகைகளும் பிளாட்பாரங்களில் இறைந்து கிடக்கின்றன. செக்யூரிட்டியோ, கண்காணிப்புக் காமிராவோ, எந்தக் கெடுபிடியுமில்லை. நமாஸுக்கான நேரம் வந்ததும், "கொஞ்சம் வெயிட் பண்ணுங்க" என்று கடையை (கஸ்டமரையும் தாங்க) அப்படியே 'அம்போ' என்று விட்டுவிட்டுப் போய் விடுகிறார்கள்.

## பல்டி!

'அலை அடித்த பல்டி'யில் (ரிமோட்) மஞ்சரியின் பாத்திரம் சிந்து. அமிதாவின் பாத்திரம் வர்ஷா. வர்ஷாதான் விஜய்யைக் காதலிப்பதுபோல் நடித்து இப்பொழுது சொத்துக்காக ஆசைப் படுவது. நீங்களே பல்டி அடித்துக் குழப்பலாமா?

## வட்டமேஜை

எஸ். பார்கவி, சென்னை

பெண்கள் முகமூடி அணியாமல் பொது இடத்துக்கு வந்தால் ஆச்சு.. போச்சு.. அபராதம்தான். கண்களுக்கும் மூக்குக்கும் மட்டும் முகமூடி அணிந்த அழகிகள், குசலம் விசாரித்துக் கொள்வது எப்படித் தெரியுமா? முகமூடி மூக்கை, முகமூடி மூக்கால் இலேசாக உரசி..!

இந்த டமால் காட்சிகளெல்லாம் காணவே, 'சுல்தனேட் ஆஃப் ஓமான்' என்ற அரபு நாட்டுக்குப் போயிருந்தோம்.

★ ஊர் முழுக்க சலவைக்கல் கட்டடங்கள். அழுக்கு, தூசி, குப்பை சும்மா ஸாம்பிளுக்குக் கூடக் கிடைக்காது. வாகனப்புகை மாசு இல்லாததால் தூசு சமாசாரமே இல்லை. மூக்காலே மூணு வாசிப் பேரிடம் கார் இருக்கிறது. தலைநகரான 'மஸ்கட்'டிலேயே நூறு கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கிறார்கள். ஆட்டோ, சைக்கிள் அண்ணாத்தேகள் காணவேயில்லை. பஸ்கள் ஒன்றிரண்டு குறுக்கிடுகின்றன. பாதசாரிகள் பாடு படுசௌக்கியம். சாலையைக் கடக்க வேண்டுமென்றால், கார்கள்தாம் நின்று வழிவிடுகின்றன.

கண்ணுங்கருத்துமாக, லோஷன், ஷேஷன் போட்டு காரை துடைத்துத் துடைத்து வைக்கிறார்கள். காரணம், வாகனத்தில் துளி தூசி இருந்தாலும் ஐம்பது ரியால் அபராதம். அதாவது ஐயாயிரம் ரூபாய் போச்சு!

★ மஸ்கட் சலாலா சாலைகளைக் குனிந்து பார்த்துக் கொண்டே, தலைவாரி, மேக்கப் போட்டுக் கொள்ளலாம். கண்ணாடி போல அவ்வளவு பளபளப்பு. சுமார் ஆயிரம் கிலோ மீட்டர் நீளும் இந்த அழகிய சாலை முழுக்க பூந்தோட்டங்களும், மின் விளக்குகளுமாக பணத்தை வாரி இறைத்திருக்கிறார்கள். ஆயிரம் கிலோ மீட்டரையும் உல்லாசமாக உலா வந்து விட முடியாதபடி, சில ஸ்பீடு இன்ஸ்பெக்டர்கள் குறுக்கிடுகின்றன. மாண்புமிகு ஒட்டகங்கள்தான் அந்த எஸ்.ஜகள்! ஒட்டகங்களுக்குதான் இங்கே முன்னுரிமை. அவை, ஆடி அசைந்து சாலையைக் கடந்த பின்புதான் வண்டிகள் நகரும். அப்படிப் போகும் ஒட்டகம்,



நல்ல பிள்ளையாய்ப் போனால், அந்த நாள் இனிய நாள் என்று அர்த்தம். "இன்னாடா... காரு?" என்ற ரீதியில் இலேசாக வண்டிக் கண்ணாடியில் ஒரு தட்டு தட்டி விட்டதோ... கண்ணாடி சிலீர்! 'ஒட்டகத்தைத் திட்டிக் கோ'னு சோகமாய்ப் பாட வேண்டியதுதான்!

★ நாம எல்லாம் காற்று வாங்க பீச்சுக்குத் தானே போவோம்? இந்த நாட்டில் மஸ்கட் கந்தார் பீச் தாண்டி, கடலுக்கு உள்ளேயும் தகுந்த உபகரணங்களுடன் ஹாய்யாக போய் விட்டு வருகிறார்கள். சில வெளிநாட்டவர் களுக்கு அப்படி என்னதான் ஆர்வம் இருக்குமோ, ஆராய்ச்சி ஆராய்ச்சி என்று கடல் ஆழத்திலேயே டேரா போட்டு விடுகிறார்கள். அப்படிப் போனவர்கள் கண்டு பிடித்திருக்கும் விஷயங்கள் எல்லாமே வாயைப் பிளக்க வைக் கின்றன. வித்தியாசமான குகைகள், நூதனமான ஜீவராசிகள் என படம் போட்டுக் காண்பிக் கிறார்கள். லேட்டஸ்ட் கண்டுபிடிப்பு என்ன


# திட்டிக்கோ!



தெரியுமா? கந்தார் பீச்சில் வாழும் ஒரு வகை மீன்களுக்குக் கண்களே இல்லையாம். கும் மிருட்டில் வாழும் மீன்களுக்கு, பார்வை எதற்கு என்று இயற்கையே நினைத்து விட்டதாம். கந்தார் பீச்சில் காந்தாரி மீன்கள்?

★ ஓமான் நாட்டுக்கு வருபவர்கள் 'மிஸ்வா' கிராமங் களைப் பார்க்காமல் போனால் எதையோ மிஸ் பண்ணிவிட்டதாகப் புலம்புவது நியாயம்தான். 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' படத்தில் வரும் களிமண் வீடுகள் போன்ற குறுகலான சந்து வீடுகளைப் பார்க்க மிஸ்வா மலை மீது டூரிஸ்டுகள் கூடுகிறார்கள். பாரம்பரியம் போகாமல் பாதுகாக்கப்பட் டிருக்கும் இந்த வீடுகளின் வெளித் தோற்றம் தான் கற்காலம். உள்ளே டீவி. கம்ப்யூட்டர் என அதிநவீனம்.

- ரஜினி ராஜேஷ்




# விட்டேன் பாரு பீலா!

“ஈராக்மீது படையெடுக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை விளக்க மேன்மை தாங்கிய பிரிட்டிஷ் பிரதமர் போனி ப்ளேடர் அவர்கள் என்னை அனுப்பியிருக்கிறார்கள்”

“அது சரி? நீ யாரு தம்பி?”

“நான்... நான் வந்து பிரிட்டிஷ் தூதரகத்தின் செய்தித் தொடர்பு அதிகாரி...”

“அட... எடுப்பு! டோய் இவரு சொம்பு” மேடையில் ஏளனக் குரல்கள். அதையும் தாங்கிக் கொண்டு செய்தித் தொடர்பாளர் தொடர்கிறார்.

“எங்க பிரதமரும் ஜார்ஜ் புஷ்ஷும் நகமும், சதையும் போல.. அவர் சோடா குடிச்சா எங்க பிரதமர் ஏப்பம் விடுவார். அவர் திராட்சை சாப்பிட்டா எங்க பிரதமர் கொட்டையைத் துப்புவார்”

“அது சரி கொட்டையில்லா திராட்சைன்னா கதை எப்படி?”

- ஈராக் மீது ஆக்ரமிப்பு செய்துள்ள அமெரிக்காவின் நடத்தையைக் கண்டிக்கும் விதத்தில் நடத்தப்பட ‘புஷ் வந்தார்’ நாடகத்தின் வசனங்கள்தான் இவை. வெறும் ஊர்வலம், பொதுக் கூட்டம், பேரணி போன்றவைகளை நடத்தி கோஷம் போட்டு எதிர்ப்பு தெரிவிக்காமல் பாடல், நாடகம் மூலமாக அமெரிக்க ஆக்ரமிப்பை மக்கள் மனத்தில் பதிய வைக்க, கூத்துப்பட்டறை, சென்னை கலைக் குழு, அகில இந்திய ஜனநாயக ‘மாதர் சங்கம்’ ஆகியவை ஒருங்கிணைந்து ‘யுத்த எதிர்ப்புக் குழு’ என்ற பெயரில் கடற்கரையில் கூட்டம் ஒன்றை நடத்தின. பின்புலமாக இருந்தார் ‘ஹிந்து’ ராம்.

பள்ளிச் சிறுவர்களும், சிறுமிகளும் நெற்றியில் ‘நோ வார்’ என்று எழுதிக் கொண்டு, அமெரிக்காவைக் கண்டித்து அட்டைகள் ஏந்தியபடி கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

**நல் வரவாகுக!**

**வட்டமேஜை**
ஆர்.பிரகாஷ், பொன்மலை

‘சில்லுக் கருப்பட்டி’ - பெயரிலேயே மண்வாசம் தெரிகிறது. வாழ்த்தி வரவேற்கிறோம்!




# ஐ.நா. வாயில கோலா!

'புஷ் வந்தார்' நாடகம் கேலியும் கிண்டலுமாக இருந்தாலும், ஐ.நா. சபையின் ஒப்புதல் எதுவுமில்லாமல் நடத்தப்பட்ட படையெடுப்பை அழுத்தமாகவே கண்டித்தது. "பேரழிவு ஆயுதம்னு வுட்டேன் பாரு பீலா. ஐ.நா. வாயில கோலா" என்று 'புஷ் பாடிய போது, கூட்டம் 'ஓ' போட்டது. கூட்டத்தின் நடுவில் மெகா சைஸ் மெழுகுவர்த்தி எரிய, அனைவரும் சிறிய மெழுகுவர்த்திக்கு தீபத்தை மாற்றிக் கொண்டு 'அமைதி தீபம்' ஏந்தினார்கள். பின்னணிப் பாடகர் உன்னி கிருஷ்ணன் பாடிய 'சாந்தி நிலவ வேண்டும்' பாடல் உள்ளத்தை ஊடுருவி, ஏவுகணைகளுக்குப் பலியாகும் அப்பாவி குழந்தைகளுக்காக பிரார்த்தனை செய்யத் தூண்டியது. 'சன் தொலைக் காட்சி' வீரபாண்டியன் ஈராக்கை எச்சரிப்பது போல கவிதை படித்தார். "உலக வர்த்தக மையத்தின் மீதும், பெண்டகன் மீதும் நடந்த தாக்குதல் மறந்து "போய் விட்டதோ" என்று அவர் கவிதை படித்தபோது அதில் தெரிந்த அச்சுறுத்தல் அமைதிக்கு முரணாகத் தோன்றியது. நல்ல உணர்வுகளை அள்ளித் தெளித்தது கனிமொழியின் கவிதை. நெற்றியடிக் கவிதை தமிழன்பன் படித்தது.

சமீபத்தில் ஈராக் சென்று வந்த சி.ஐ.டி.யூ. பிரமுகர் சௌந்தரராஜன் "இந்த போரின் மூலம் ஈராக்கின் பொருளாதாரம் அடியோடு பாழாகும் என்கிறார்கள். உண்மை என்னவென்றால் அங்கு ஏற்கெனவே பொருளாதாரம் கடும் பாதிப்பில் உள்ளது. கடந்த பத்து வருடங்களாக எந்த ஒரு பொருளையும் அங்கே இறக்குமதி செய்ய ஐ.நா. சபை அனுமதிக்கவில்லை. உயிர் காக்கும் மருந்துகள், போன்ற அத்தியாவசியமான பொருட்கள் கூட அனுமதிக்கப்படவில்லை. இதன் காரணமாக, சென்ற பத்தாண்டுகளில் 17 லட்சம், குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். அடுத்த இருபது வருடங்களில் அங்கு இளைஞர்களே இருக்க மாட்டார்கள். மயக்க மருந்து இல்லாத காரணத்தால் கடும் நீரிழிவு நோயாளிகளுக்கு மயக்க மருந்து இல்லாமலேயே கால்களையும் கைகளையும் வெட்டி எடுக்கிறார்கள்" என்று சொன்னபோது, கடற்கரைக் காற்றையும் மீறிக் கொண்டு நமக்கு குப்பென்று வியர்த்துப் போனது.

**- ஸ்ரீநிவாசன்**

படங்கள் : **ராஜன்**

# காண்கிற கண்ணில்தான் அழகு!

"உனக்கும் எனக்கும் ஒரு போட்டி - நீயா? நானா? நம்மில் யார் சாமர்த்தியசாலி?" என்று இறைவனிடம் சவால் விட்டார் ஒரு பக்தர்.

கடைக்குப் போகிறோம். நூறு ரூபாய் நோட்டை நீட்டிவிட்டு, அதற்குப் பெறுமானமுள்ள பொருட்களைப் பெற்றுக் கொள்கிறோம். இதுதான் வழக்கம். இதுதான் சமன்பாடும் கூட! கொடுத்தது எவ்வளவோ கொள்வதும் அவ்வளவாகவே இருக்க வேண்டும் – அப்படியிருப்பதுவே முறை.

ஆனால் இங்கே என்ன நடந்தது தெரியுமா? கொண்டதோ குறைவு – கொடுத்ததோ நிறைய நிறைய!! முடியுமா? நடக்குமா? முடிந்து விட்டதே, நடந்து விட்டதே, என்று தீர்மானமாகச் சொல்கிறார் மாணிக்கவாசகர். "ஒன்றுக்கும் பயனில்லாத என்னைத்தான் கொண்டான்; அதற்கு பதிலாக எல்லாவற்றுள்ளும் நின்று, எல்லாவற்றையும் கடந்து, எல்லையற்று விளங்கும் முழுமையான இறைவன் தன்னையே தந்துவிட்டான். இதில் யார் புத்திசாலி? வெறுமையைக் கொடுத்துப் பெருமையைப் பெற்ற நானா? எல்லாம் தந்து ஏதும் பெறாத இறைவனா?" என்று ஒரு விரோதச் சமன்பாட்டை விளக்குகிறார்.

"தந்தது உன் தன்னை, கொண்டது என் தன்னை, சங்கரா, ஆர் கொலோ சதுரர்?" என்று அவரெழுப்பும் இந்த நூதனச் சமன்பாட்டை சற்றே சிந்திப்போம்.

உண்மையில், இறைவன் நமக்குத் தந்தது என்ன? நாம் இறைவனுக்குத் தரக் கூடியது என்ன? பிறவி, இந்தப் பிறவியின் வாழ்வு, வாழ்வின் போகம், போகத்தின் சுகம், சுகத்தின் அனுபவம், அனுபவத்தின் அறிவு, அறிவின் முதிர்ச்சி, முதிர்ச்சியின் பக்குவம் – இவை யாவுமே இறைவன் நமக்குக் கொடுப்பது. மாறாக, எல்லாம் கொண்ட இறைவனுக்கு, நாம் என்ன கொடுத்துவிட முடியும்.

அப்படியானால், உணவைப் படையலாக்கிய 'நைவேத்யம்' தொட்டு திருக்கோயிலில் ஸ்வாமிக் குத் 'திருக் கல்யாணம்' வரை, இறைவனுக்கு நாம் பலவற்றைத் தருவதாகவும் செய்வதாகவும் பல சடங்குகளைச் சொல்கிறதே இந்துமதம், அவை ஏன்? அவரவர் வீட்டு ஆராதனை தெய்வத்திற்கு நிவேதனம் என்பது முதல் புரட்டாசி மாதத்து கோவிந்த தளிகை வரை இந்த உணவு நைவேத்யம் உண்டு. காலப் போக்கில், பால், பழம், இல்லையென்றால், அடுப்படியிலேயே ஒரு அவசரக் கையாட்டல் என்று சில நவீன ரூபங்களை நைவேத்யம் எடுத்திருந்தாலும், அதன் அர்த்தம் அளப்பரி

## தராசு

ஸ்ரீ ஜெயேந்திரர் குறித்த பதிலில் உடன்பாடில்லை. சனாதன தர்மம் என்கிற ஆலமரம் மக்களின் நாகரிக மயக்கத்திலும், ஊடகங்களின் ஊடுருவலினாலும் மெல்ல வேரறுபடுவதைக் கண்டும் காணாமல் ஆசார்யரை 'ஞானவேள்வி' மட்டும் செய்யச் சொல்கிறீர்களா? 'கர்மவேள்வி'யில் ஈடுபட்டுள்ள ஆசார்யர் ஸ்ரீ ஜெயேந்திரர் எதிர்கொள்வது மகாபாரதப் போர் போன்ற போக்கிரிச் சூழல். மகா பெரியவரின் படிமத்தை மனத்தில் தாங்கிய 'கல்கி'க்கு இப்போதைய பீடத்தின் பிரச்னைகள் புரியவில்லை. அதுதான் பிரச்னை.


**வட்டமேஜை**

எஸ். அறிவுடைநம்பி,
திருச்சி-20

யது.

படையல், இறைவனுக்கு நாம் ஊட்டும் உணவல்ல; "நீ கொடுத்ததால்தான் பசியாறுகிறேன் பரமனே" என்கிற அறிவிப்பு; நமக்குக் கிடைத்த நன்னிலைக்கான நன்றியறிதல். (நைவேத்யம் என்ற சொல்லுக்கே 'அறிவிக்கிறேன்' என்றுதான் பொருளேயன்றி 'உண்பிக்கிறேன்' என்பதில்லை என்று விளக்குவார் காஞ்சி மகா ஸ்வாமிகள்).

'நன்றி நன்றி! என்று வெறுமே சொன்னால், நாளடைவில், அதுவொரு வறட்டுச் சடங்காகிவிடும். அப்படியில்லாமல் இறைவனோடு ஓர் உறவை ஏற்படுத்திக் கொண்டு உரிமையோடு உணவு படைக்கிறது இந்து மதம். நாம் சமைத்த உணவென்றால் அது வெறும் சாதம்; இறைவனுக்கு அர்ப்பணித்துப் பெற்றதென்றால், அதுவே பிரசாதமாகிவிடும். நாம் சொல்லும் நன்றியினால் (எவ்வளவுதான் சப்தம் போட்டுச் சொன்னாலும்) இறைவனுக்கு எந்தப் பயனுமில்லை. உணவைப் பிரசாதமாக்கி உண்ணும்போது, அது நமக்கு நாமே செய்து கொள்ளும் நினைவூட்டலாகும்.



இறைவன் தந்தவற்றை உணர்ந்து கொள்வது, வாழ்க்கைச் சமன்பாட்டின் ஒரு பக்கமென்றால், இறைவன் பிரித்துக் கொடுத்திருக்கும் வாய்ப்புகளைப் புரிந்து கொள்வது அதன் இன்னொரு பக்கம்.

இராமாயணத்தையே சகோதரத்துவ ஜாதகம் என்று சொல்லலாம். தன்னிடம் வந்த விபீஷணனைச் சகோதரனாக ஏற்றுக் கொள்ளும் இராமபிரான் கூறும் சொற்கள் அற்புதமானவை. "நாங்கள் நான்கு பேர்; குகனோடு ஐவரானோம்; கதிரவத் தோன்றலாம் சுக்ரீவனோடு அறுவரானோம்; இப்போது நின்னுடன் எழுவர். எங்களைத் தந்தை கானகம் அனுப்பியதால் அன்றோ எமக்கு இத்தனை சகோதரர்கள் கிடைத்தார்கள்!"_ கானகம் செல்ல நேர்ந்ததற்காகத் துன்பப்படாமல், அதனால் விளைந்ததன்றோ இப்பெரு நன்மை, என்று விகசிக்கும் விசால உள்ளத்தின் வார்த்தைகள்.

'காண்கிற கண்ணில்தான் அழகு!', 'எதையுமே ஆக்கபூர்வமாகப் பார்த்தால் ஆக்கம் பெறலாம்', என்றெல்லாம் எண்ணுவதையும் செயல்படுவதையும் 'பாஸிடிவ் திங்கிங்' என்கிறோம். எத்தகு சூழலையும் ஏற்று, அதனைச் சந்தித்து, அதனின் ஆக்கம்

டாக்டர் சுதா சேஷய்யன்



**காக்கைக்கு உணவு படைப்பதை தினசரிக் கடமையாக்கினார்களே நம் முன்னோர்கள், ஏன்?**

அஹிம்ஸைக்கு முழுமையான முக்கியத்துவம் கொடுத்தனர் நம் பெரியோர்கள். எவ்வளவுதான் கவனமாக இருந்தாலும் நடைமுறை வாழ்க்கையில் நம்மையறியாமல் சில 'ஹிம்சைகள்' நேர்ந்து விடலாம். கையை அசைக்கும் போது ஏதேனும் ஒரு நுண்கிருமி அழிந்து விடலாம்; காலை வைக்கும்போது சில ஜீவன்கள் நசித்து விடலாம்; அடுப்பு மூட்டும்போது சிறு உயிர் அக்னிக்கு இரையாகி விடலாம். உணவுக்காக எடுக்கும் தாவரங்களின் உயிருக்கு அதனால் ஹிம்சைதானே! இப்படிப் பட்ட ஹிம்சைகளைக் கணக்கில் கொண்டு அதற்கெல்லாம் பரிகாரமாகச் செய்யப்படுவது "வைஸ்வ தேவம்" வைஸ்வதேவத்தின் ஒரு பகுதியாக, உண்பதற்கு முன்னால் காக்கைக்கும், உண்டபின் (குறிப்பாக இரவு வேளைகளில்) நாய்க்கும் உணவிட வேண்டும். பரிகாரம் என்பது ஒருபக்கம். தன்னுடைய அறிவாலும் ஆற்றலாலும் இயற்கையை வசப்படுத்திக் கொண்டுவிட்ட மனிதன், தன்னைச் சுற்றியுள்ள உயிர்களுக்கு உணவிட வேண்டிய நியாயமும் அதில் அடங்கும்.

நிறைந்த பக்கத்தை உணர்ந்து உயர்வது தான் 'பாஸிடிவ் திங்கிங்'_ ஸர்வ உயிர்களிடத்தும் சகோதரத்துவம் பேணும் இராமனின் மனப்பக்குவம், இந்த ஆக்கபூர்வ அணுகு முறையின் வெளிப்பாடேயாகும்.

நிர்வாகம், மேலாண்மை, சுய முன்னேற்றம், ஆளுமை மேம்பாடு என்று பல்துறையிலும், ஆக்கபூர்வ அணுகுமுறை என்பது முக்கியத்துவம் பெறுகிறது. இன்றைய சமுதாயம், இத்தகைய ஆக்கபூர்வ எண்ணங்களின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்துள்ளது. தனக்கு ஏதோ கேடு வந்துவிட்டதாக நினைக்கும் ஒருவர், சின்னச் சின்ன விஷயங்களுக்குக் கூட பெரிய நோய்களுக்கு ஆளாகிறார். நோய்த்தாக்கம் அதிகமாக இருக்கும்போதும், ஆக்கபூர்வமாக அணுகும் ஒருவர், விரைவிலேயே குணமடைகிறார்.

ஆக்கபூர்வ அணுகுமுறையின் இன்னுமொரு எடுத்துக்காட்டை இராமாயணத்திலேயே சந்திக்கலாம். கானகம் போய்விட்ட இராமனைத் திருப்பியழைக்கப் புறப்படுகிறான் பரதன். கங்கையைக் கடக்க வேண்டி வரும்போது, குகனின் படகில் பயணப்படுகிறான். பரதனோடு சத்ருக்கனனும், தாய்மார்களான கௌசல்யை சுமித்திரை மற்றும் கைகேயி ஆகிய மூவரும்.

குகனுக்கு இராமனைத் தெரியும். இராமசீதையும், இலக்குவனும் கங்கையைக் கடந்து தெற்கு நோக்கிப் போய்விட்டார்கள். இப்போது பரத சத்ருக்கனர்களையும் அறிமுகமாகிவிட்டது. ஆனால், மூதாட்டிகள் மூவரும்...? கௌசல்யைதான் இராமனின் தாய் என்று பரதன் உரைத்ததும், வருத்தமும் வலியும் உந்த, அவள் கால்களில் விழுகிறான் படகோட்டி குகன். பரதசத்ருக்கனரின் கண்களிலும் கண்ணீர். படகுகளின் தலைவனாக மட்டுமே குகனை அறிவாள் கௌசல்யை. இப்போது பரதசத்ருக்கனர்களோடு அவனையும் தன் மைந்தனாக்கித் தேற்றுகிறாள். "இராமலக்குவர்கள் கானகம் வந்ததால் அன்றோ இப்படியொரு நண்பன் கிடைத்தான். அவர்கள் வனம் புகுந்ததுவும் நலமாய்ப் போயிற்று. நாடு திரும்பியதும், நீங்கள் ஐவருமாகச் சேர்ந்து ஒன்றாக அரசாளுங்கள்" என்று பேசுகிறாள் அப்பெருமாட்டி.

துன்பத்தைக்கூட இறைவன் கொடுக்கும் வாய்ப்பாகக் காணும் அணுகுமுறை இது.

**வா**ழ்க்கையில் வாய்ப்புகளையும் வசந்தங்களையும் வெகுவாகவே இறைவன் வகுத்துக் கொடுத்திருப்பதை உணர்ந்துகொண்ட நம் முன்னோர்கள், உணவு உண்ணும்போதுகூட அதை வெளிப்படுத்தினார்கள். உண்பதற்குமுன் உணவைச் சுற்றித் தண்ணீர் தெளிப்பது என்பது அதனைத் தூய்மைப்படுத்துவதன் அடை

# லல்லு Vs லொள்ளு!



! லல்லு பிரசாத் யாதவின் புகழைப் பரப்புவதற்காக ஜாம்ஷெட்பூரிலுள்ள ராஷ்டிரிய ஜனதாதளம் இருபது கேள்விகள் அடங்கிய கேள்வித்தாள் ஒன்றை வடிவமைத்துள்ளது. இந்தப் போட்டியில் யார் வேண்டுமானாலும் பங்கு பெறலாம். வயது ஒரு தடையல்ல. எல்லாக் கேள்விகளுக்கும் சரியாக விடையளிப்பவர்களுக்கு முதற் பரிசாக ரூ.5000/- வழங்கப்படுமாம். சாம்பிளுக்குச் சில கேள்விகள்: _ 1) எத்தனை பசுக்களை லல்லு தம் வீட்டில் வளர்க்கிறார்?

2) லல்லு நடிக்கும் படத்தின் பெயர் என்ன?

என்ன முதற் பரிசை வாங்குவதற்குத் தயாராகி விட்டீர்களா?

! லல்லு பிரசாத்தின் மகனான தேஜஸ்வி உருவாக்கியிருக்கும் கிரிக்கெட் குழுவின் பெயர் வாரா. குழுவுக்கு 'வாரா' என மேற்கிந்திய அணியின் வீரர் பெயரை வைத்தவரோ லாலுவாகிய லல்லு. பீகார் கிரிக்கெட் அசோஸியேஷனின் டோர்னமெண்டில் விளையாடுவதற்காக வந்த லாலு பிரசாத், 50 ரன்களை அடித்ததுடன் தமது மகனிடம் ''உன் கிரிக்கெட் குழுவுக்கு எதனால் 'வாரா' என்ற பெயரை வைத்தேன் தெரியுமா?'' என கேள்வி கேட்டார். அவரே பதிலும் சொன்னார். ''வாராவிலுள்ள 'வா'- லாலுவிலிருந்தும் 'ரா' - ராப்ரியில் இருந்தும் எடுத்து 'வாரா' என வைத்தேன்'' எனக் கூற, அவர் மகனுக்குப் புல்லரித்ததாம்.

- சுறுசுறுப்புத் திலகம்.

நன்றி: 'தி வீக்'

யானமாகும். உண்பதற்கு முன் ஐந்து கவளங்களும் யாருக்குத் தெரியுமா? தேவத ருணா - தெய்வீக சக்திகளுக்கு; பித்ரு ருணா- முன்னோர்களுக்கு; ரிஷி ருணா - ரிஷிகளுக்கும் தவசிலர்களுக்கும்; மனுஷ்ய ருணா - சக மனிதர்களுக்கு; பூத ருணா - நாம் வாழ பலவகையாலும் உதவும் ஜீவரா சிகளுக்கு.

மாணிக்கவாசகரின் சமன்பாட்டை மீண்டும் எண்ணிப்பார்த்தால்... ஆர் கொலோ சதுரர்? நம்மைச் சதுரர்களாக்கு வதில் ஆண்டவனுக்கே ஆசையென்றால், அதை உணர்ந்து வாழ்வதில் நமக்குத் தடையுளதோ? (தொடரும்)

# உடலில் ஓடும் காம்ப்ளான்!

கடந்த வாரம் பெங்களூரில் மழை. ஆனால் அரண்மனை மைதானத்தில் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட ஜனவெள்ளம் 'டோன்ட் கேர்' என மழையை அலட்சியப் படுத்தி ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தது. காரணம் மேடையில் உலகிலேயே பிரபலமான ராக் அன்ட் ரோல் பாண்ட் புகழ் 'ரோலிங் ஸ்டோன்ஸ்' இருந்தது தான்.

மிக் ஜாகர், கீத் ரிச்சர்ட்ஸ், சார்லி வாட்ஸ், ரோனி வுட்ஸ்... என நான்கு பேர் அடங்கிய இக்குழுவின் வயது அறுபதுக்கும் மேல். பென்சிலைப் போன்ற உடற்கட்டு, உடலில் ரத்தத்துக்குப் பதிலாக காம்ப்ளான் ஓடுகிறதா என்று சந்தேகம் எழும் அளவிற்குப் படா சுறுசுறுப்பு. நாற்பது வருடங்களுக்கும் மேலாக நட்புடன் இசைப்பயணம் நடத்திக் கொண்டிருக்கிறது இக்குழு.

ரோலிங் ஸ்டோன் குழுவுடன் மேடை வடிவமைப்புக் குழு, ஒலி, ஒளி, வீடியோ, எலக்ட்ரிகல் என பிரத்தியேக வல்லுநர்களை அழைத்து வந்திருந்ததில் எண்ணிக்கை தொண்ணூற்று ஏழைத் தாண்டி விடவே, ஸ்பெஷல் ஜம்போ ஜெட்டில் வந்திறங்கினர். 2,40,000 வாட்ஸ் சவுண்ட் சிஸ்டம், டிஜிட்டல் ப்ளாஸ்மா ஸ்கிரீன் போன்றவை இந்தியாவுக்கு வருவது இதுவே முதல் தடவை என சத்தியம் செய்தார்கள். மேடையைச் சுற்றி போடப்பட்ட கேபிள் வயர்களே சுமார் ஆயிரம் மைல்கள்.





முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரரான திலீப் தோஷிதான் இந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர். "எனக்கு முப்பது வருடங்களுக்கும் மேலாக ரோலிங் ஸ்டோனுடன் நட்பு. சுமார் நூற்று எழுபத்து நான்கு நிகழ்ச்சிகளை ரசித்திருக்கிறேன். எனக்கு ஸ்லோ பாட்டெல்லாமே பிடிக்காது" என்கிறார் இன்றைய பிஸினஸ்மேனும் அன்றைய ஸ்லோ ஸ்பின்னருமான தோஷி.

முதலில் ஹாங்காங், சீனா போன்ற இடங்களில் இன்னிசை நடத்தவிருந்த ரோலிங் ஸ்டோன்ஸ், 'சார்ஸ்' காரணமாக, கடைசி நிமிடத்தில் கான்ஸல் செய்து விட்டு ஒரு வாரம் முன்னாலேயே இந்தியா வந்து விட்டது. அதுவும் முதன் முறையாக!

**- எல்.எஸ்.**







# வட்டிப் பிரச்னையில் ரோஜா!

உப்புக்குக்கூட மேக்கப் போடாமல் எளிமையான தோற்றத்தில் நடித்து அசத்தியிருக்கிறார் ரோஜா. படத்தின் பெயரும் அதே. 'உப்பு'.

"வழக்கமான நாயகியாக நடித்து, நடித்துக் களைத்துப் போன எனக்கு இதமான ஒத்தடமாக அமைந்துவிட்டது இந்தப் பாத்திரம்'' என்கிறார் செல்வமணியுடன் அமைதியான குடும்ப வாழ்க்கையைத் தொடங்கிவிட்ட ரோஜா. 'உப்பு' படத்தை எழுதி இயக்கியிருப்பவர் ஆர். செல்வராஜ்.

"சென்னை நகரில் குப்பை கூட்டும் தொழிலாளியாக, 'பென்சிலம்மா' என்ற வேஷம் ரோஜாவுக்கு. நகரத்தைச் சுத்தம் செய்யும் துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்க்கையைச் சொல்லும் கதை'' எனும் இயக்குனர் இந்தக் கதைக்காக துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்க்கையை மூன்றாண்டுகள் ஆய்வு செய்திருக்கிறார்.

"வாழ்நாள் முழுக்க நரகத்தில் உழலும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்றால், அது இவர்கள்தான். மனிதக் கழிவுகளை அகற்ற வேண்டியிருப்பதால், இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பதுபேர் சாராயம் குடிப்பவர்களாக இருக்கிறார்கள். புகையிலையை விரும்பிப் போடுகிறார்கள். இந்த வெள்ளை உள்ளங்களுக்குப் பச்சை குத்திக் கொள்வதென்றால் கொள்ளைப் பிரியம். இவர்களின் வாழ்க்கையின் ஊடாகப் புகுந்து, இன்னும் சீரழித்துக் கொண்டிருக்கிற ஒரு தீய சக்தி, மீட்டர் வட்டிக்காரர்கள். இவர்களிடம் கடன்படாத துப்புரவுத் தொழிலாளர்களே இல்லை எனலாம். நான் திரட்டிய தகவல்களை வைத்துக் கொண்டு, டாக்குமெண்டரி உணர்வு துளியும் இல்லாத, இரத்தமும் சதையுமான சினிமா எடுக்க விரும்பினேன். அது நிறைவேறியிருக்கிறது'' என்று திருப்தியோடு சொன்னார் ஆர். செல்வராஜ்.

மீட்டர் வட்டிக் கதையில் ரோஜா மனம் லயித்து நடித்திருப்பதில் ஆச்சரியமில்லை. அனுபவ முதிர்ச்சி கை கொடுத்திருக்கிறது.

\- ஸ்ரீ

# நடக்குமென்பார்; நடக்கும்!

**மேஷம் :** இந்த வாரம் புது வீடு கட்ட, வாங்க வாய்ப்பிருக்கு. வீட்ல சுப காரிய நிகழ்ச்சிகள் கூடி வரப் போகுது. இதனால மனசுல மகிழ்ச்சி நிறையும். வேலையில உங்களுக்குச் சாதகமான திருப்பம் வரப் போகுது. மேலதிகாரிகளின் பாராட்டு, ஆதரவு கிடைக்கும். பண வசதி தாராளமா கிடைக்கும். புதிய வேலை தேடறவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு தேடி வரும். வெளிநாடு செல்ல முயற்சிப்பவங்களுக்கு இந்த வாரம் அதுக்கான வாய்ப்பு வரும். தொழில் பண்றவங்களுக்கு இதுவரை இருந்து வந்த சிக்கல்கள் மறையும்.

**ரிஷபம் :** இந்த வாரம் புதியவங்க அறிமுகம் கிடைக்கும், அவங்களால ஒரு சில நன்மைகள் உங்களைத் தேடி வரும். மனசுல தன்னம்பிக்கையும் சந்தோஷமும் நிறைந்து இருக்கும். அலுவலகத்தில் சிறு சிறு பிரச்னைகள் தலை தூக்கலாம். பொறுமை காப்பது நல்லது. கடன் தொல்லை மறையும். வராம இழுத்தடிச்சுட்டிருந்த பணம் இப்ப வந்து சேரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் தேடி வரும். குடும்பத்தில் நிலவி வந்த சண்டை, பிரச்னைகள் இப்போ விலகும்.




**மிதுனம் :** பத்தாமிடத்தை குரு பார்க்கறதும், பத்தில் உச்சம் பெற்ற சுக்ரன் சஞ்சாரங்கறதால சகல காரியங்கள்லேயும் வெற்றி உண்டு. சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். இதுவரை இருந்து வந்த எதிர்ப்புகள் மறையும். புதிய முயற்சிகள்ல இப்ப தாராளமா இறங்கலாம். கொடுக்கல் வாங்கல்ல நன்மை உண்டு. இயந்திரம், பர்னிச்சர், உலோக வகைகள், கெமிக்கல்ஸ் ஆகிய தொழில்கள்ல முன்னேற்றம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு மதிப்பு அந்தஸ்து உயரும். குடும்பத்துல கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான சந்தர்ப்பம் வரும், தயாரா இருங்க.

**கடகம் :** இதுவரை நிலவி வந்த குழப்ப நிலை மாறி வெற்றிகள் தேடி வரும். எதிர்பாராத பயணம் காத்திருக்கு. இந்தப் பயணத்தால நன்மை உண்டு. பண வசதி தாராளமா இருக்கு. அலுவலகத்தில் மதிப்பு அந்தஸ்து கூடும். புகழ், பாராட்டு கிடைக்கற மாதிரி ஏதாவது செய்வீங்க. சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் உண்டு. குடும்பத்துல மகிழ்ச்சி நிலவும். வியாபாரத்துல நல்ல அனுகூலம் உண்டு. கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கை அவசியம். கடன் தொல்லை படிப்படியா நீங்கும். எழுத்து, பத்திரிகை, கணிதம் போன்ற தொழில்கள் முன்னேற்றம் தரும்.


**சிம்மம் :** முக்கியமான பெரியவங்களோட ஆதரவு இந்த வாரம் கிடைக்கும். அதன் மூலமா நீங்க நினைச்சது நடக்கப் போகுது. அலுவலகத்துல வந்த சிறு சிறு பிரச்னைகள் சுமுகமாக முடியும். புது வேலை தேடறவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வந்து சேரும். சுய தொழில் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு. கொடுக்கல் வாங்கல் கை கொடுக்கும். மனை, நிலம், ரியல் எஸ்டேட் போன்ற துறைகளில் எதிர்பாராத லாபம் உண்டு. சினிமா, நாடகம், நாட்டியம் போன்ற கலைத் துறையினருக்கு பெயர் புகழ் கூடும்.

**கன்னி :** இந்த வாரம் மனசுல துணிச்சல் தன்னம்பிக்கை பிறக்கும். எதிர்பாராத முக்கியஸ்தர்களின் சந்திப்பு நிகழும். அவங்க மூலமா சில நன்மைகள் நடக்க வாய்ப்பிருக்கு. பண வசதி தாராளமா இருக்கும். குடும்பத்துல விருந்து உபச்சாரம் நடக்கும். நீண்ட நாளா சந்திக்காதவர்களைச் சந்திப்பீங்க. தொழில் பண்றவங்க புதிய தொழிலில் ஈடுபட வாய்ப்பிருக்கு. ஏற்றுமதி இறக்குமதி தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.

**அக்னிசர்மா பக்கம்**


**துலாம் :** நீங்க எதிர்பார்த்திட்டிருந்த நல்ல செய்தி இப்ப வந்து சேரும். அலுவலகத்தில் இது வரை தாமதமாகிவந்த பதவி உயர்வு இப்ப சிலருக்குக் கிடைக்கும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை உருவாகும். சிலருக்கு வெளிநாடு போற வாய்ப்பிருக்கு. கொடுக்கல் வாங்கல் தக்க சமயத்துல கை கொடுக்கும். பொருளாதார நிலையில முன்னேற்றம் உண்டு. குடும்பத்துல ஒற்றுமை நிலவும். செலவு கட்டுக்கடங்காது. சிலர் புதிய, மனை, வீடு வாங்க வாய்ப்பிருக்கு. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு புகழ் பாராட்டு உண்டு.




**விருச்சிகம் :** இந்த வாரம் துணிவு, தன்னம்பிக்கை, எடுத்த காரியத்தில் வெற்றி ஆகியவை கிடைக்கும். பண நடமாட்டம் தாராளமா இருக்கும். பயணங்களால் நன்மை உண்டு. வேலை இல்லாம இருக்கறவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வந்து கதவைத் தட்டும். வெளிநாட்ல இருந்து நல்ல செய்தி வந்து சேரும். சுயமா தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. தொழிலில் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும்.



**சஹானாவின் சிந்து - அனுராதா சுரேஷ் கிருஷ்ணமூர்த்திக்கு (விருச்சிகம்) பயணங்களால் நன்மை என்கிறது இந்த வார ஜோதிடப் பலன்!**

**தனுசு :** இந்த வாரம் எதிர்ப்புகள் விலகும். வேலைவாய்ப்புகள்ல அனுகூலம் உண்டு. அலுவலகத்தில் இருந்து வந்த சிறுசிறு பிரச்னைகள் விலகும். செவ்வாய் இரண்டில் உச்சம் பெற்ற குருவால் பார்க்கப்படுவதால் உத்தியோகத்தில் இடமாற்றம் ஊதிய உயர்வு உண்டு. அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலை நிலவும். இயந்திரம், உலோக வகை, கெமிக்கல்ஸ், மருத்துவம், எண்ணெய் வகைகள் ஆதாயம் கொண்டு வரும். குடும்பத்துல சொத்து சம்பந்தமா இதுவரை இருந்து வந்த பிரச்னைகள் விலகும்.







**மகரம் :** எந்தவிதமான எதிர்ப்புகள் இருந்தாலும் இந்த வாரம் எல்லாம் தூள்தான். எடுத்த காரியத்தைத் திட்டமிட்டபடி நிறைவேற்றுவீங்க. பண வசதி தாராளமா இருக்கும். அலுவலகத்தில் எல்லாவகையிலும் உற்சாகமான சூழ்நிலை நிலவும். புதிய வேலை முயற்சிகள் வெற்றி தரும். வேலை விஷயமா சிலர் வெளியூர் போக வாய்ப்பிருக்கு. குடும்பத்துல ஒற்றுமை நிலவும். சிலர் புதிய வீடு, மனை வாங்குவாங்க.



**கும்பம் :** எந்தவித சிக்கலான காரியத்தையும் திறமையா செயல்பட்டு முடிச்சிடுவீங்க. எதிர்ப்புகள் மறைந்து போகும். எதிரிகள் மறைவார்கள். குடும்பத்துல கருத்து வேறுபாடு காரணமா பிரிந்து இருந்தவங்க இப்ப ஒண்ணு சேருவாங்க. வழக்கு விவகாரங்கள்ல வெற்றி உண்டு. சினிமா, நாடகம் போன்ற கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு நன்மை உண்டு.



**மீனம் :** குரு பலம் ஸ்ட்ராங்காக இருப்பதால் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்க வாய்ப்பிருக்கு. கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு தேடி வரும். பெண்களுக்கு உற்சாக மனநிலை ஏற்படும். இதுவரை வராம இழுத்தடிச்சிட்டிருந்த பணம் இப்ப வந்து சேரும். வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்கு வெற்றி உண்டு. இதுக்காக மேலதிகாரிகள் பாராட்டு கிடைக்கும். புதிய வேலை முயற்சிகள் இப்போ கைகூடும்.





**ஏப்ரல் 16 முதல் 22 வரை**

## தொலைக்காட்சித் தொடர்

### பிரபஞ்சன்

# ஜீவநதி

காட்சி : 6

அதிகாலை / தெரு.

பாத்திரங்கள்: சிவதா , லட்சுமி அம்மாள்

அதிகாலை. பனி பொழியும் வைகறை. தலையில் மப்ளர் கட்டிக் கொண்டிருக்கும் சிவதாணு பால், பிடித்துக் கொண்டிருக்கிறார். அவரை அடுத்து லட்சுமி அம்மாள். குவளையுடன் காத்து நிற்கிறாள். அவள் பின் இன்னும் இரண்டு பேர். சிவதாணுவுக்கு, லட்சுமி சி - 2 அம்மாள். லட்சுமிக்கு சிவ தாணு, ஏ - 1 ஆள். அவர்கள் இருக்கும் குடியிருப்பு எண்களால் அறியப்படுகிறவர்கள் இவர்கள்.

லட்சுமி அம்மாள், பால் பிடித்துக் கொண்டு வரும் வரைக்கும் காத்திருக்கிறார் ஏ.1. இருவரும், குடியிருப்பு நோக்கித் திரும்புகிறார்கள்.

சி2: ஏன் சார், ஏ-1. இந்தக் கட்டேல போறவனுக்கு எப்பத்தான் நல்ல புத்தி வருமாம்...

ஏ-1: யாரைச் சொல்றீங்க?

சி2: அவன்தான் புஸ்ஸா, கிஸ்ஸா.. குழந்தைங்க மேல, பாவப்பட்ட ஜனங்கமேல எல்லாம் குண்டு போடறானே, அவன்தான்.

ஏ-1: புஷ்ஷை சொல்றேளா... புஸ்ஸு இல்லை. கிஸ்ஸுன்னா வேற அர்த்தம்.

சி2: என்ன அர்த்தம், சொல்லுங்கோ.

ஏ-1: அதை விடுங்கோ. டீ.வி. பார்க்கறச்சே பகீர்னு இருக்கு. சதாம் கொடுமைக் காரன்னா, அந்த ஊர் ஜனங்க அதைப் பார்த்துப்பா... பக்கத்து நாட்டுக்காரனுக்கு இதுல என்ன வேலை... எல்லாம் சுயநலம். அந்த ஊர் எண்ணெய்க்கிணறு இவன் தூக்கத் தைக் கெடுக்கிறது.

சி2: ஏன், இவனும் பயங்கர ஆயுதங்களை வச்சிருக்கானாமே. அதுவும் தப்புதானே? சார்... கிஸ்ஸுக்கு என்ன அர்த்தம்னு சொல்லலையே.

ஏ1: உஸ்.. அதை விடுங்கோ... சதாம்... ஆயுதம் வச்சிருக்கானோ, இல்லையோ... அதைக் கேட்கிறவனுக்கு ஒரு யோக்யதை வேணாமோ? புஷ், தன்கிட்ட இருக்கிற ஆயுதத்தை எல்லாம் அழிச்சுட்டு சொன்னாக்க, நியாயம்... ஆமா... உங்க மருமக பால் வாங்க வரமாட்டாளோ? இத்தனைக் காலமே, நீங்க வரணுமா?

சி2: சொல்லப்படாது... என் மருமவ தங்கம். நானாத்தான் வர்றேன். இத்தனைக் காலம்பற, இருட்டுல வயசுப் பொண்ணுக, வெளியில வர்ற மாதிரியா இருக்கு லோகம்? எல்லாம் கெட்டுக் குட்டிச் சுவரா யிடுத்து... உங்க பொண்ணு இன்டர்வியூவுக்குப் போனாளே... என்ன ஆச்சு?

ஏ - 1 : நாளைக்கு வரச் சொல்லி இருக்காங்களாம்...

சி2: வேலைக்கேவா?

ஏ-1: தெரியலை.

சி-2: வேலை கிடைச்சா தேவலை. கல்யாணத்தைப் பண்ணிப்பிடலாம், இல்லையா?

ஏ-1: கல்யாணத்துக்கு என்ன அவசரம்? அவ குழந்தை. 24 தானே ஆவுது.

சி-2: அந்த வயசுல நான் நாலு கொழந்தை பெத்துட்டேன்.

ஏ-1: அவசரம். அதனால என்ன சாதிச் சுட்டீங்க...

சி-2: அதுவும் சரிதான். நம்ம கையில என்ன சார் இருக்கு?

அவர்கள் பிரியும் இடத்துக்கு வந்திருந்தார்கள். இருவரும் வேறு வேறு திசையில் திரும்புகிறார்கள். சில அடிகள் சென்றபின் சி2 திரும்பிச் சொல்கிறாள்.

சி-2: நாளைக்காச்சும், அர்த்தம் சொல்லிங்களோ மாட்டீங்களோ?

திரும்பி நடக்கிறாள் ஏ1 வானத்தைப் பார்த்தபடி.

ஏ-1: அசட்டுக் கிழம்...

காட்சி:7

காலை - நன்கு விடிந்திருக்கிறது / வீடு - சமையல் அறை மற்றும் தெரு.

பாத்திரங்கள்: கீதா, இரண்டு ஆண்



## 2

**பெண் குழந்தைகள், சிவதாணு மிஸஸ், அம்சா.**

தெருவில் மணியோசை கேட்கிறது. குழந்தைகளின் ஆரவாரச் சப்தமும் கேட்கிறது. சமையல் அறையில் வேலையில் ஆழ்ந்திருக்கிறாள் கீதா. கூடத்திலிருந்து இரண்டு குழந்தைகள் – ஒன்று ஆண். ஒன்று பெண். பாட்டு கற்றுக் கொள்ளும் சப்தமும் கேட்டுக் கொண்டிருக்கிறது. சுருதிப் பெட்டியிலிருந்து எழும் சுருதியும், சுருதியை ஒட்டியும் ஒட்டாமலும் பாடல் வரிகள் கேட்கின்றன...

*ஆடும் தெய்வமே அருள்வாய் – எம்*

*அகத்தினுள் நின்று அருளைத் தருவாய் – என்கிற பல்லவி ஒலித்துக் கொண்டிருக்கிறது.*

*கீதா, ஸ்டவ்வை அணைத்து விட்டுக் கூடத்தை எட்டிப் பார்க்கிறாள். அப்பா சிவதாணு, சுருதி போடக் குழந்தைகள் பாடுவதைப் பார்க்கிறாள். மொட்டை மாடிக்குப் போகிறாள். மேலே இருந்து தெரு தெரிகிறது.தெருவில் யானை ஒன்று வந்து கொண்டிருக்கிறது. அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறாள், கீதா.*

*பின்னால் வந்து நிற்கிறார் சிவதாணு.*

**சிவதாணு:** யானை தெருவுக்கு வந்து எத்தனைக் காலமாச்சு...

*(கீதா, 'ஆம்' என்பது போல் தலை யசைக்கிறாள்)*

*மிருகம், பறவை இதுகள் எல்லாம் பார்க்க கிடைட்டறதே இல்லை...*

*யானை, தும்பிக்கையை நீட்டிப் பிச்சை எடுக்கிறது.*

**சிவதாணு:** நிறைய விஷயங்கள் காணாமே போச்சு. நீளமான கம்பத்துல, மிட்டாயைச் சுத்திட்டு வந்து, குழந்தைகளுக்கு மிட்டாய் வாட்ச்

கட்டுவானே, அவனைக் காணோம்... கலர் கலரா குச்சி ஐஸ் - காணம், கலர் கலரா சர்பத் காணம். திருவிழாக்கள் நடக்கறச்சே, இதுகள்தான் திருவிழா. நாடகம், கூத்து. பொம்மையை வச்சு நடத்தற பாவைக் கூத்து எல்லாமே காணாமே போச்சு.

**கீதா** : திருவிழாவுல, திருவிளையாடல் வீடியோவில பார்த்தேனேப்பா.

**சிவதாணு**: உன் தலைமுறைக்கு வீடியோங்கற நிழல். எங்க தலைமுறையில நிஜமாவே, மனுஷர்கள் நடிச்சுக் காட்டுவாங்க...

*தெரு, வெறுமையுற்றுக் கிடக்கிறது. இப்போது யானை இல்லை.*

*(தொடர்ந்து)*

இன்னிக்கு இன்டர்வியூன்னு சொன்னியே.

**கீதா** : புறப்படணும்பா...

**சிவதாணு**: புறப்படு... காபி மட்டும் கொடுத்துட்டுக் கிளம்பு. சாப்பாடு வேணாம். சிரமப்படாதே. நான், ஓட்டல்ல சாப்பிட்டுக்கறேன்.

**கீதா** : வேணாம்பா... ஒரு ரசம் பண்ணி, அப்பளம் பொரிக்கிறேன். என்னத்துக்கு ஓட்டல்... குழந்தைகள் இருக்காங்களா?

**சிவதாணு**: போயாச்சு.

*அவர்கள் படிவழியாகக் கீழே இறங்குகிறார்கள். அழைப்பு மணி ஒலிக்கிறது. கீதா, கண்ணாடி வழியாகப் பார்த்துவிட்டுக் கதவைத் திறக்கிறாள். வெளியே மிஸஸ் அம்சா நிற்கிறாள். கையில் 'பேட்'. விளையாட்டுக்கான பேண்ட்டும் சர்ட்டும் அணிந்துள்ளாள். தோளில் சின்ன 'டர்க்கி டவல்'. 45 - 50 வயது. காலில் ஸ்போர்ட்ஸ் ஷூக்கள்.*

**கீதா** : வாங்க மாமி. உள்ளே வாங்க.

**மிஸஸ் அம்சா**: இருக்கட்டுண்டி. டயமாச்சு. உன் இன்டர்வியு ரிசல்ட் என்னாச்சு. எங்க மேனேஜர்ட்ட பேசிட்டேன். இப்போதைக்கு டெலிபோன் ஆப்பரேட்டர் போஸ்ட் காலியா இருக்கு. இஷ்டமானா வரலாம்னு சொன்னார். என்ன சொல்றே?


**கீதா** : இன்னிக்குத் தெரிஞ்சுடும் மாமி. இல்லேன்னா, உங்க கம்பெனிக்கு வந்துடறேன்.

**மிஸஸ் அம்சா**: தட்ஸ் யுவர் சாய்ஸ். எதுல முன்னுக்கு வர்றதுக்கு அதிக சான்ஸ் இருக்கோ, அதைச் செய்.

**கீதா** : இன்னிக்கு சாயங்காலம் சொல்றேன். ரொம்ப தேங்க்ஸ், மாமி.

*பேப்பரில் ஒரு கண்ணும், பேச்சில் காதையும் வைத்திருந்த சிவதாணு.*

**சிவதாணு** : வேலைமெனக் கெட்டு,



மத்தவா சிரமத்துக்கு உழைக்கிறீங்க. ரொம்ப பெரிய மனசு உங்களுக்கு.

**மிஸஸ் அம்சா**: போறுமே. கீதா என் பிரண்ட். நண்பர்களுக்குள்ள என்னத்துக்கு நன்றி.

**கீதா** : உள்ளே வாங்கோ... ஒரு கப் காபி சாப்பிட்டுப் போகலாமே.

**மிஸஸ் அம்சா**: நோ... நோ... ஒரு நாளைக்கு ஒரு காபியும், ஒரு டீயும் தான். உடம்பை 'சிக்'குனு வைச்சுக்க வேணாமோ... கண்ட கண்ட நேரத்துல கண்டதை குடிச்சா அழகு என்னாறது?

*மிஸஸ் அம்சா குழந்தை போல குதித்துக் கொண்டு ஓடுகிறாள். இருவரும் சிரிக்கிறார்கள்.*

**சிவதாணு**: தங்கமான மனுஷி.

**கீதா** : காலனியே இந்த அம்மாளைப் பத்தி, தப்பாவே பேசுது...

**காட்சி : 8**

**பகல் / தெரு**

**பாத்திரங்கள்: கீதா, தேவயானி**

*கீதா, காலனியை விட்டு வெளியே வந்து கொண்டிருக்கிறாள். தேவயானியும் அவள் வீட்டை விட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். சிநேகிதிகள் இருவரும் ஓரிடத்தில் சந்தித்துக் கொள்கிறார்கள். நடைபாதையில் பேசிக் கொண்டே, நடக்கிறார்கள்.*

**கீதா** : ஏய், யானை பாத்தியாப்பா...

**தேவயானி** :அந்த நேரம் பார்த்து பாத்ரூமுக்கு போய்ட்டேன். பார்க்க முடியலை. கொஞ்சம் 'லேட்' பண்ணா, அண்ணா, அப்புறம் அக்கா, அப்புறம் அப்பான்னு எல்லோரும் பாத்ரூமை எடுத்துக்குவாங்க... 11 மணிக்குத்தான் ஆபீஸ் போக முடியும்.

**கீதா** : சே. பாவம்பா... யானை பிச்சை எடுக்குது.

**தேவயானி** : ஆமா... நான் கூடப் பார்த்திருக்கேன். மனுஷன், கேவலப்பட்டுப் போனா, எதையும் செய்வான் போல.

"பஞ்ச பூதங்களில் ஒண்ணு என் குடும்பத்தைப் பாடாய்ப்படுத்துது ஸ்வாமி."

"கோடையில் தண்ணீர்ப் பஞ்சங்கிறது மெட்ராஸில் எல்லாக் குடும்பங்களுக்கும் பொதுதானே? விடு அப்பனே!"

- உ. ராஜாஜி

---

பாரேன், குரங்கை வச்சி, பாம்பை வச்சி, கிளியை வச்சி மனுஷன் பிழைக்கிறான்.

**கீதா** : எப்படி இருக்கார், உங்க 'ஆள்'?

*(குரலைக் கீழாக்கிக் கொண்டு)*

**தேவயானி** : லாரன்ஸ்தானே? நல்லா இருக்கார்.

**கீதா** : வீட்டுலே சொல்லிட்டயா?

**தேவயானி** :இல்ல. பயமா இருக்கு. ரெண்டு அண்ணன்களும் முட்டாப் பசங்கப்பா.. அடி, உதைன்னு இறங்கிடுவானுங்க.

**கீதா** : காதலிக்கிறதுக்கு முன்னால இது தெரியலையாக்கும்.

**தேவயானி** :காதல் கண்ணை மறைத்தது சகியே... நான் என்ன செய்வேன் தோழி...? (அபிநயத்துடன்)

**கீதா** : பால் கசந்து, படுக்கை நொந்திருக்குமே...

**தேவயானி** : உம்... நீ வேற... படுக்கையிலே கொசுவும் மூட்டைப்பூச்சியும்தான் வருது.

ஒரு தெருவோரப் பிள்ளையார் கோயில். தேவயானி, கீதா, கும்பிட்டு, இலேசாகத் திருநீறு வைத்துக் கொள்கிறார்கள்.

**கீதா** : லாரன்ஸ் என்ன சொல்றார்?

**தேவயானி** : வீட்டுக்கு வரச் சொல்றார்... கல்யாணம் பண்ணிக்கலாம்னு சொல்றார்.

**கீதா** : என்ன பண்ணப் போற. ஓடப் போறியா?

**தேவயானி** : இல்ல. லோன் போட்டிருக்கேன். ஸ்கூட்டர் வாங்கிடுவேன். ஸ்கூட்டரிலேயே ஓடிப் போலாம்னு இருக்கேன்.

**கீதா** : எப்படியும் ஒரு ரகளை இருக்குன்னு சொல்லு....

## காட்சி - 9

**காலை 11 அல்லது 12 மணி/ தெருவிலிருந்து வீடு.**

**பாத்திரங்கள் : சுசிலா, பாகீரதி, கண்ணன்.**

*வாசல் படியில் தலைவைத்துப் படுத்திருந்து, ஏதோ ஒரு பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்த சுசிலா, உள் கதவைத் திறந்து கொண்டு வெளியே வருகிறாள். கீழே கிடந்த கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்து, வாசல் வெளிச்சத்தில் பிரித்துப் படிக்கிறாள்.*

*சுசிலாவின் அம்மா பாகீரதி, சமையல் கட்டிலிருந்து எட்டிப் பார்க்கிறாள்.*

**பாகீரதி** : யாரு?

**சுசிலா** : உன் அருமை மருமவன்.

**பாகீரதி** : என்னவாம்?

**சுசிலா** : எப்போதும் எழுதறதுதான். பச்சைக்கொடி காட்டறார்.

**பாகீரதி** : வண்டி புறப்படுமா?

*அம்மாவைப் பார்த்துச் சிரிக்கிறாள்.*

**சுசிலா** : கொடி மட்டும் போறுமா? தண்டவாளமே இல்லாமே...?

**பாகீரதி** : எதுவானாலும் பதில் எழுது.

**சுசிலா** : எனக்கு நம்பிக்கை இல்லம்மா விரிசல் விழுந்தது விழுந்ததுதான்.

**பாகீரதி** : உங்க தலைமுறையே ஏண்டி இப்படிப் போயிட்டது? வித்தியாசத்தை என்னத்துக்குப் பாராட்டறீங்க? நல்லது ஒண்ணு கூடவா அவன்ட்ட இல்லை. அதைப் பெரிசு படுத்தேன். சேர்றதுக்குத்தாண்டி அறிவு, யோசனை எல்லாம் வேணும்.

**சுசிலா** :போதும். உன் வீட்டுக்காரர் உன்னை நடத்தினது எனக்குத் தெரியும். நான், நீ இல்லை.

**பாகீரதி** : என்ன தெரியும், உனக்கு? தாம்பத்தியம்கிறது, புருஷன் பெண்ஜாதிக்கு மட்டும்தான் தெரியும். மனசுதான் தராசு.

*கண்ணன், ஒரு காலி தண்ணீர் பாட்டிலைக் கொண்டு வந்து நீட்டுகிறான். சுசிலா, அதை வாங்கி, சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரைப் பிடிக்கிறாள்.*

**கண்ணன்** : என்னக்கா, தீவிரமான டிஸ்கஷன்?

**சுசிலா** : பழைய விவகாரம்தான். அந்த ஆள் கடிதம் போட்டிருக்கார். 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கச் சொல்றாங்க அம்மா. நான் முடியாதுங்கறேன்.

**கண்ணன்** : யு ஆர் ரைட் அக்கா.

**பாகீரதி** : விளையாட்டுப் பசங்க! சொல்றதைக் கேளு. உருப்பட்டுடுவே... கண்ணா, இங்க வா...

*(பாட்டிலை வாங்கிக் கொண்டு வெளியே வந்து படியேறுகிறான். பாகீரதியின் குரல் பின்னிருந்து கேட்கிறது. கண்ணன் திரும்புகிறான்.)*

(தொடரும்)

● ஆர். நாகராஜன், சென்னை - 61.

? பொடா சட்டம் நாட்டிற்கே கேடு என்கிறாரே ம.தி.மு.க. அவைத் தலைவர் எல்.கணேசன்?

! கத்தி, காய்கறி நறுக்கவும் பயன்படும்; டாக்டர் கையில் இருந்தால் அதுவே ஆபரேஷன் செய்து குணப்படுத்தவும் பயன்படும்; கொலை புரியவும் பயன்படும். கடைசி காரணத்துக்காக கத்தியே கூடாது என்பதா!

● முகவை முத்துசாமி, தொண்டி.

? அம்மாவுக்குப் பிறகு அ.இ.அ.தி.மு.கவில் உள்ள ஃபெமிலியர் ஃபிகர் யார்...?

! ஷ்! மூச்! அதெல்லாம் அம்மா தி.மு.கவுக்கு - ஸாரி! அ.தி.மு.க.வுக்குத் தேவையில்லை!

# சரிகா மீண்டும்



• இரண்டாவது இன்னிங்கஸ்!

● ரொசாரியோ ரவிச்சந்திரன், சென்னை - 59.

? காஷ்மீரில் ஒவ்வொரு ஹிந்து குடும்பத்துக்கும் ஒரு முஸ்லிம் குடும்பம் பாதுகாப்பாக இருக்கப் போவதைக் குறித்து...?

! இலட்சிய நோக்கில் பார்த்தால் மனத்தைத் தொடும் அழகான ஏற்பாடு. ஆனால், நடைமுறையில் பார்த்தால் அபாயமானது. காவலிருக்கும் முஸ்லிம் குடும்பத்தையும் சேர்த்துக் கொன்று குவிக்க (பழிதீர்க்க) பயங்கரவாதிகள் தயங்க மாட்டார்கள். அப்போது யார், யாரை நோவது...?



• எள்ளல் - துள்ளல்!



• வி.ஐ.பி. விசாரம்!

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33.

? செல்ஃபோன் கம்பெனிகள் போடும் போட்டி குறித்து...?

! போட்டியின் விளைவாக, கிராமத்தில் வரட்டி விற்கிற வள்ளியிடம்கூட இனி செல்ஃபோன் இருந்தால் ஆச்சர்யப்பட என்ன இருக்கிறது! ஆனால், கியூபா மாதிரி முற்றிலும் இலவச தொலைபேசியெல்லாம் இங்கே வருமா? என்றால் சந்தேகம்தான்.

● கார்த்திக் அமர்த்தியா, மயிலாடுதுறை.

? விருது பெறும்போது அது மகுடம்; பெற்ற பிறகு சிலுவை என்கிறாரே வைரமுத்து...?

! விருதுக்கான தகுதியைக் கட்டிக் காத்து அதை விஞ்சவும் வேண்டும் என்பதைத்தான் கவித்துவமாகச் சொல்கிறார்.

● எம்.சிவகுருநாதன், தஞ்சை.

? இந்தியாவில், தமிழ்நாடு உட்பட பதினாறு மாநிலங்களில் உள்ள சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு, 2002 - 2003 நிதி ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்ட கரும்புக்குக் கொடுக்க வேண்டிய பண பாக்கி 868 கோடியே 56 லட்சம் ரூபாய் என்கிற செய்தி பற்றி என்ன சொல்கிறீர்கள்...?

! அந்த வயிற்றெரிச்சல் இருக்கட்டும்; இதுக்கு என்ன சொல்றீங்க...? ஆண்டுகள் பல ஆகியும், போபால் விஷவாயு கசிவால்

❑ ரூ. 100 பரிசு பெறுபவர்:

எஸ்.தியாகராஜன்,
9, ராமசாமி செட்டியார் தெரு,
ஈ.பி.ஆபீஸ் சமீபம்,
ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006

பாதிக்கப்பட்டவர்களுக்கு யூனியன் கார்பைட் வழங்கிய நஷ்ட ஈடு தொகையில் 1360 கோடி ரூபாயை உரியவர்களுக்கு இன்னும் விநியோகிக்காமல் அரசு காலம் கடத்திக் கொண்டிருக்கிறதே!

● **யு. அரசுதேன்மொழி, மடுகரை.**

***? பதினேழு ஆண்டுகளுக்குப் பிறகு சரிகா மீண்டும் நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளாரே?***

! 'சரி(க்)கா, வாங்க' என்று திரையுலகம் ஏற்கத் தயார்தான். ரசிகர்கள் ஏற்க வேண்டுமே! அதுதான் கவலை!

● **எஸ். தியாகராஜன், திருச்சி - 6.** ❐

! வீரப்பனைப் பிடிக்கறது சும்மா விளையாட்டில்லேன்னு தேவாரத்துக்கும் முதல்வருக்கும் புரிய இத்தனை நாளாகியிருக்கு!

● **ஆர். அப்துல் சலாம், திருச்சி - 21.**



• கவித்துவ கவலை!

# நடிக்கப் போகிறாரே..?



• விளையாட்டுப் பொறுப்பு!



• எதிர்ப்புக் குரல்!

***? 'குடும்ப வாரிசை அரசியலுக்குக் கொண்டு வரும் அரசியல்வாதி, நிச்சயம் பொது நலவாதியாக இருக்க முடியாது...' என்று அமைச்சர் வைத்தியலிங்கம் சட்டசபையில் பேசியுள்ளாரே..?***

! இது தவறான கருத்து. தகுதியுடைய குடும்ப நபரை அரசியலுக்கு வர அனுமதியாது தடுத்தால், அதுவும் பொதுநல விரோதம்தான். விஷயம், வாரிசா அல்லவா என்பதில் இல்லை; தகுதியானவரா இல்லையா என்பதில்தான் இருக்கிறது.

● **சு.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.**

***? ஜாதிகள் ஒழியாமல் இருப்பதற்குக் காரணம் இட ஒதுக்கீடுதானே?***

! இட ஒதுக்கீட்டை ஒழித்து விடுவதால் ஜாதியை ஒழித்துவிட முடியும் என்பது பகல் கனவு. கல்வியறிவு பெருகப் பெருக, பண்பாடு வளர வளர, மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, உயர, ஜாதி - பேத உணர்வுகள் குறைய வாய்ப்பிருக்கிறது.

● **கே. கணேசன், சென்னை – 5.**

***? தேவாரத்தை அதிரடிப்படைத் தலைவராகப் பணிக்கு அமர்த்திய ஜெ. அரசு, இப்போது அவரை விளையாட்டு ஆணையத்தின் துணைத் தலைவராக நியமித்திருக்கிறதே...?***

***? 'ரஜினிகாந்த் இனிமேல் சிகரெட் பிடிப்பது மது அருந்துவது போன்ற காட்சிகளை, தாம் நடிக்கும் படங்களில் தவிர்க்க வேண்டும். இதைப் பத்திரிகையாளர்கள்தான் அவரிடம் சொல்ல வேண்டும்' என்று லதா ரஜினிகாந்த் கூறியிருப்பது பற்றி...?***

! லதா பாடு தேவலாம். பத்திரிகையாளர் கூட்டத்தை அழைத்தாவது புலம்ப முடி

● **ரூ. 50 பரிசு பெறுபவர்:**

**சேலம் செல்வக்குமார்,
பெரிய தோட்டம், கம்பளியம்பட்டி (அ)
சங்கண்டாம்பாளையம் (வழி),
காங்கயம் வட்டம், ஈரோடு - 638 706**

கிறது. மற்ற சராசரி பெண்கள் பாடு கஷ்டம்தான்.

● சேலம் செல்வக்குமார்,
கம்பளியம்பட்டி.

**? ஆண்களுக்கு, பெண்களின் ஏமாற்றங்கள், அவர்கள் எடுக்கும் முடிவுகள் பற்றி அறிவது சிரமமாக உள்ளதே...?**

! பெண்ணின் இடத்தில் ஆண் தன்னைப் பொருத்திப் பார்த்துக் கொண்டால் சுலபமாகப் புரியும். இதைச் செய்கிற மனோநிலையும் பொறுமையும் பெரும்பாலான ஆண்களுக்கு இல்லை. இதை மிக வெற்றிகரமாகச் செய்த எழுத்தாளர்கள் கல்கி, தி. ஜானகிராமன், லா.ச.ரா.

● எம். கார்த்திகேயன், கோவை - 6.

**? சி.என்.என்., பி.பி.சி. இரண்டுமே ஈராக் யுத்தம் பற்றிச் செய்தி தருவதில் சேர்ந்திசைப்பது எதற்காக...?**

! அதொன்றும் சேர்ந்திசை இல்லை. தனித் தனி கச்சேரிதான். நடுநிலையாக இரு தரப்பினர் கருத்துக்களையும் ஒலி (ஒளி) பரப்புதல்; பல்வேறு யுத்த களங்களிலும் காமெராவை இயக்குதல், சர்வதேசத் தலைநகரங்களிலும் யுத்தம் தொடர்பான நிகழ்ச்சியைப் படம்பிடித்தல், அரசியல் ஆய்வாளர்கள், யுத்த தந்திரத்தில் தேர்ந்தவர்களின் கருத்துக்களை வழங்குதல் என்று சக்கை போடு போடுவது பி.பி.ஸிதான்.

● முத்து ஆனந்த், வேலூர் - 1.

**? பத்திரிகைகளின் பலம் - பலவீனம் எது?**

! பலம்: சர்க்குலேஷன்
பலவீனம்: அதை அடையப் பயன்படுத்தப்படும் மலினமான யுக்திகள்.

● பஞ்சவண்ணமகன், கருப்பம்புலம்.

**? தாங்கள் கைகாட்டியதால்தான் நீங்கள் இங்கே வந்து பேசுகிறீர்கள் என கம்யூனிஸ்டுகளைப் பார்த்து ரொம்பவும் இளக்காரமாக முதல்வர் சட்டசபையில் பேசியுள்ளாரே...?**

! 'இந்த செல்வம் மக்கள் கொடுத்தது. அடக்கத்தோடு இதை ஆளாவிட்டால் இரவோடிரவாகத் தொலைந்துபோகும்' என்று ராஜாஜி, திமுகவினர் முதன் முதலாக ஆட்சிக்கு வந்தபோது எச்சரித்தது ஞாபகம் வருகிறது. திருக்குறள், அதிகாரம் 13; குறள் 121 - முதல்வர் தாமே படித்துப் புரிந்து கொள்வது நல்லது. (காளிமுத்துவிடம் பாடம் கேட்க வேண்டாம்!)



# அமரர் கல்கி நினைவு இளமைச் சிறுகதைப் போட்டி - 2003

படைப்பாளிகளுக்கும்... வாசக எழுத்தாளர்களுக்கும் மாபெரும் சவாலான வாய்ப்பு!


இளைஞர்களை மையப்படுத்திய சிறுகதைகளை மட்டுமே எழுதி அனுப்புங்கள்:

| | |
|---|---|
| முதல் பரிசு | – ரூ. 10,000 |
| இரண்டாம் பரிசு | – ரூ. 7,500 |
| மூன்றாம் பரிசு | – ரூ. 5000 |

கடைசித் தேதி: ஜூன் 15

பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. **500** சன்மானம் பெறும்.
விதிமுறைகள், மற்ற விவரங்களுக்கு **13.4.2003** இதழ் கல்கியை பாருங்கள் அல்லது அடுத்த இதழுக்குக் காத்திருங்கள்.

- ஆர்



## ஸ்ரீ பெருந்தேவி தாயார் முதியோர் இல்லம்

அன்பான உபசரிப்பு, தரமான உணவு, மருத்துவ வசதியுடன் கூடிய சைவ முதியோர் இல்லத்தில் சேர வரவேற்கப்படுகிறார்கள்.

நடக்க இயலாதவர்கள், படுக்கையில் இருப்பவர்களுக்கு அட்டெண்டர் வசதி உண்டு.

பெற்றோர்கள் நினைவு நாள், குழந்தைகள் பிறந்த நாள் மற்றும் திருமண நாட்களை எங்களுடன் சேர்ந்து கொண்டாடுங்கள். விடுமுறையில் வெளியூர் செல்பவர்கள் தங்கள் வயதான பெற்றோர்களை இங்கு விட்டுச் செல்லலாம்.

**ஸ்ரீ பெருந்தேவி தாயார் முதியோர் இல்லம்**
1/36 - குப்பம் ரோடு,
(மகாலட்சுமி ஹார்டுவேர் அருகில்)
கொட்டிவாக்கம், சென்னை - 41.
☎போன்: 24511023
Website: www.perundevithayarhome.com

---

பருக பருக ஆனந்தம்
அதிக ஆனந்தம்
சுத்தமான தஞ்சாவூர்
டிகிரி காப்பிக்கு

ESTD 1947

## ஜீவா காபி

திருமணங்களுக்கும் மற்றும்
அனைத்து விசேஷங்களுக்கும்
100% பியூர் பில்டர் காபி பவுடர்

*தயாரிப்பாளர்கள்:*

## ஜீவா காபி ஒர்க்ஸ்

28, பி.வி. நாயக்கன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

இலவச டோர் டெலிவரிக்கு தொடர்பு
கொள்ளவும்:(சென்னை) : **8444725, 8442667**

டெல்லி, மும்பை, கொல்கத்தா.
E-mail:coffeeps@md3.vsnl.net.in

---

## INSTITUTE FOR PSYCHOTHERAPY & MANAGEMENT SCIENCES

*67, Hemm Villa, 2nd Flr., Jawahar Nagar,*
*Near Rly. Stn., Goregaon (W),*
*Mumbai - 400 062. ✆ 879 0890 / 891*
*Website : www.ipmsmumbai.org*

**அஞ்சல் வழி கல்வி சேர்க்கை அறிவிப்பு**

- **எம்.எஸ்.** (ஆங்கிலம் / தமிழ்)
  (உளநல சிகிச்சை & ஆற்றுப்படுத்துதல்) ... 2 வருடம்
  *M.S.(Psychotheraphy& Counselling)*
- **பி.ஜி.டி.பி.சி.** (ஆங்கிலம் / தமிழ்)
  *P.G. Diploma in Psychological Counselling* ... 1 வருடம்
- **பி.ஜி.டி.சி.சி.** (ஆங்கிலம் / தமிழ்)
  *P.G. Diploma in Career Counselling* ...1 வருடம்
- **எம்.பி.ஏ.** (ஆங்கிலம் மட்டும்)
  *M.B.A. (Master of Business Administration)* ... 2 வருடம்

**தகுதி : பட்டப்படிப்பு**

விளக்கவுரை மற்றும் விண்ணப்பப்படிவம்
ரூ. 50 நேரில் அல்லது M.O. / D.D. மூலம்
செலுத்தி பெறலாம்.

**• சிறப்பு அம்சங்கள் •**

- இந்தியாவிலேயே எம்.எஸ். அளவில் உளநல சிகிச்சை பயிற்சி அளிக்கும் மிகச்சிறந்த கல்வி நிலையம்.
- பட்ட மேற்படிப்பு பயிலுவோரும் அனுமதிக்கப் படுவர்.
- கல்விச் சான்றிதழ்களின் ஜெராக்ஸ் பிரதிகளை மாத்திரம் சேர்க்கைக்கு இணைத்தால் போது மானது.
- எமது கல்வி நிறுவனம் திறந்த நிலை பன்னாட்டு பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப் பட்டது.
- திறமை வாய்ந்த நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட பாடத் தொகுப்புகள் வழங்கப்படுகிறது.

**For Admissions Contact :**

- **MRS. UMA JAYARAMAN** 36, Ayyappan Street, Off. Patel Road, Vijaya Laxmi Puram, Ambattur, **CHENNAI - 600 053. TEL.: 044-6571479**
- **MR. M. NAGESWARAN** P.No. 28, Meenakshi Hospital Krishna Nagar, **MADURAI - 625 014. TEL.: 0452-681777 / 681920**
- **MRS. K. REVATHI,** 133, Venkataswamy Road West, R.S. Puram, **COIMBATORE - 641 002. TEL.: 0422-540754**
- **MRS. SUJATHA SUDHEENDRA** 51 B, III Floor, Amar Colony, Lajpat Nagar - IV, **NEW DELHI 24. TEL.: 011-621 5718.**
- **MR. C.V. RAVI SHANKAR** 7-1-209/4/B, II nd Floor, Near Satyam Theatre, Ameerpet, **HYDERABAD - 500 016. TEL.:040-375 1298/657 7417.**
- **Mrs. SHAKUNTALA SENGUPTA,** 23/J, Bade Raipur Road, Near Shaktigarh Play Ground, Jadavpur, **KOLKATA - 700 032. TEL.: 033-414 0781 / 414 16 89.**
- **Dr. K. G. VIJAYALEKSHMI, W.H.I. "VINAYAKAM",** T.C. 57/1347, HSRA A-16, Kulathara Junction, Kalady, Karamana - Post, **TRIVENDRUM - 695 002. TEL.: 0471-341213.**



“ரோஜாத் தொட்டி வாங்கலாமாப்பா” என்று கெஞ்சிய மகளிடம் “ஓ வாங்கலாமே'' என்று பிரியத்துடன் சொன்னான் நாதன். “இன்னும் அரை மணி நேரம்'' என்று வலிக்கும் கால்களிடம் சொல்லி வைத்தான்.

அவனும் நளினியும், செல்ல மகள் ஆஷாவுடன் பொருட்காட்சியைச் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த போது, ரோஜாச் செடி வைத்திருந்த நர்சரி கடையைப் பார்த்த ஆஷாவின் முகமெல்லாம் மலர்ச்சி. இன்ஜினியரிங் படிப்பவளுக்கு பாட்டனியிலும் ஆர்வம். தினசரி காலை, வீட்டுக்கு வரும் ரோஜாக்காரனிடம், பார்த்துப் பார்த்து வாங்கும் சிவப்பு, மஞ்சள், வெள்ளை ரோஜாக்கள் எல்லாம் அங்கே செடிகளின் மேல் பூத்து நிற்கும் அழகைப் பார்த்த ஆஷாவுக்கு ஏகக் குஷி.

அந்தக் கதர் வேட்டி சட்டை கடைக்

# நாகேந்திர பாரதி



(அறிமுக எழுத்தாளர்)



# புது மொட்டு

காரர் செடியைப் பாதுகாக்கும் முறைகளை, 'கம்மிய' குரலில் விளக்க, ஆர்வத்துடன் கேட்டாள் ஆஷா.

''பால்கனியில், தரைக்கு மேல் செங்கல் வைத்து அதன்மேல் தொட்டியை வைக்கணும். வெயில் நேராக படக் கூடாது. மண்ணை மாதம் இருமுறை கிளறி விட்டு உரம் போடணும். மாதம் ஒருமுறை மண் மாத்தியே ஆகணும். பூ வாடியதும் மொட்டு வரும். செடியைப் பூச்சி அரித்தால் மருந்து தெளிக்கணும். தினமும் இரண்டு முறை தண்ணீர் ஊற்றணும். ரொம்ப நேர யோசனைக்குப் பிறகு இளஞ்சிவப்பு நிறத்தில் பூத்துக் குலுங்கும் பன்னீர் ரோஜாச் செடியைத் தேர்ந்தெடுத்தாள்.

பூத் தொட்டியை பையோடு தூக்கி வரும் பொறுப்பு நாதனிடம் விடப்பட்டது. ''கொண்டாங்க. நான் கொஞ்ச நேரம் தூக்கிக்கிட்டு வர்றேன்'' என்ற மனைவியின் வற்புறுத்தலை முறுவலுடன் மறுத்துவிட்டு ''பூ நசுங்கிடாம'' என்றபடி அந்தப் பையையே பார்த்தபடி வரும் மகளின் ஆர்வத்தை ரசித்தான்.

வீட்டுக்கு வந்ததும் பால்கனிக்கு ஓடி செங்கல் வைத்து 'செட்டப்' செய்தபின்தான் ஆஷா நிம்மதியே அடைந்தாள்.

அந்த வாரம் முழுக்க ரோஜா புராணம்தான். தண்ணீர் ஊற்றுவது, உரம் போடுவது, கத்திரித்து விடுவது, கல்லூரிக்குச் செல்லும்போது பூக்களுக்கு 'டாட்டா' சொல்வது, சிநேகிதிகளை அழைத்து வந்து, ரோஜா வளர்ப்புப் பற்றி கதைகள் சொல்வது ஆஷாவுக்கு வேறு நினைப்பே இல்லை...

தூங்கப் போகும் முன்பு பூக்களைப் பார்த்து இரசிப்பாள். ''அப்பா, இங்கே வாங்க. இந்த மொட்டு எவ்வளவு சமத்தா இலைகளுக்கு மத்தியிலே உட்கார்ந்திருக்கு. பூத்தவுடனே மட்டும், எவ்வளவு கம்பீரமா தலையை நீட்டுது'' என்பாள்.

''பூவும் பொண்ணும் அப்படித்தாம்மா. வளர்ற வரை பெத்தவங்க நடுவிலே சமத்தா இருப்பாங்க, வளர்ந்த பின்பு...'' என்று மகளைச் சீண்டினான் நளினி.

''அவ உன் பொண்ணுதானே? ஓட்டி அடிக்காம இருப்பாளா என்ன?'' என்று நளினியை அவன் சீண்டியதும் நளினியும் ஆஷாவும் அவனைச் செல்லமாய்ப் பிறாண்டினார்கள்.

தொலைபேசி அழைப்புகள் வேறு; நண்பிகளிடம் இருந்து - 'பூ பூத்தாச்சா?' என்று விசாரிப்புகள்.

கல்லூரியில் 'யூனிட் டெஸ்ட்' வந்துவிட்டது. இரவு நீண்ட நேரம் கண் விழித்துப் படித்தாள் ஆஷா. காலையில் தாமதமாக எழுந்து, அவசரமாகக் கிளம்பும்போது, ''அம்மா ரோஜாச் செடிக்குத் தண்ணீர் ஊற்றிடேன். ப்ளீஸ். காம்பைக் 'கட்' பண்ணிட்டியா? அப்பா, மறக்காம மண் மாத்தணும்...''

சாப்பிடக்கூட நேரமில்லாமல் பறந்தாள் ஆஷா. அந்த வாரம் முழுக்க, பரீட்சை மும்முரத்தில் ரோஜாச் செடியைப் பார்க்க பால்கனிக்குப் போகவேயில்லை அவள்.

அங்கே, புதிதாகப் பூத்த ஒரு மொட்டு, ஆஷாவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. பரீட்சை முடிவதற்குள் அது வாடி விழுந்துவிடுமே! அதற்குள் அவள் வருவாளா?

●

* என் தந்தை நாச்சிமுத்துக் கவுண்டர் 1930-ல் ஒரு முக்கியமான நகரப் பிரமுகர் ஆகிவிட்டார். பொள்ளாச்சி மக்கள் அவரை நகரசபையின் சேர்மனாகத் தேர்ந்தெடுத்தார்கள். அந்த நாளில் பொள்ளாச்சியின் ஜனத்தொகை முப்பது ஆயிரம் தான். தந்தை மூன்று ஆண்டுகாலம் பொள்ளாச்சி நகர சபையின் தலைவராக இருந்தார். அவர் காலத்தில்தான் பொள்ளாச்சிக்கு மின்சாரம் வந்தது. தெருக்களில் 'பளிச்'சென்று மின் விளக்குகள் எரிந்தன. அன்றைக்கு ஊர் முழுவதும் சந்தோஷத்தில் குதித்த குதிப்பிற்கு அளவே கிடையாது.

* என் வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் லண்டன் மிஷன் பள்ளி ஒன்று இருந்தது. கிறிஸ்துவப் பாதிரிமார்கள் ஆதரவில் இருந்த பள்ளி. அந்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டேன். மூன்றாம் வகுப்பு வாசித்து வந்தேன். வீட்டுக்கு நேர் மேற்கே பெரிய கிணறு இருந்தது. எனக்குப் பயம். ஆதலால் அந்த வழியில் செல்லாமல் வேளாளர் வீதி, பிள்ளையார் கோயில் சந்து வழியாகச் சென்று வளைத்துக் கொண்டு பள்ளிக்கூடம் செல்வேன். பிள்ளையாருக்குத் தண்ணீர் விட்டு, அருகம்புல் போட்டு வணங்கி வருவதும் உண்டு. விநாயகர் துதி, முருகன் பேரில் 'ஏறுமயிலேறி விளையாடு முகம்' போன்ற பாடல்களைக் கூறிச் சாமி கும்பிடுவது என் பழக்கமாயிருந்தது.

* வழக்கமாக வியாழக்கிழமை பள்ளி விடுமுறை. சந்தை கூடும் நாளும் அதுவே. பொள்ளாச்சி சந்தை என்பது பிரபலம். சில நாட்கள் என்னோடொத்த குழந்தைத் தோழர்களுடன் அங்கு போவேன். பல நாட்களில் என் தந்தையார் நடத்தும் பஸ் போக்குவரத்து ஆபீசுக்கும் போவதுண்டு. ஆபீசுக்கு சிறிது தூரத்தில் ஒரு மாம்பழக் கடை இருந்தது. நள்ளு பாட்சா பயில்வான் மாம்பழக்கடை என்று அழைப்பார்கள்.



• குடும்பத்துடன் நா.மா. தம்பதி

பழம் சாப்பிட்டால் பயில்வான்போல் இருக்கலாம் என்பதற்கு அவர் எடுத்துக்காட்டாக இருந்தார்.

அவர் தன்னுடைய கடைக்கு என்னைக் கூட்டிக் கொண்டு போவார். ஒரு பெரிய மாம்பழமாகக் கொடுப்பார். இவ்வளவு பெரிசா என்று அப்படியும் இப்படியுமாகப் பார்த்து அதிசயப்படுவேன். சாயபு அந்த மாம்பழத் தோலைத் தொடர்ச்சியாகக் கத்தியால் சீவி, கழுத்தில், மாலைபோல் போட்டுக் கொண்டு வேடிக்கை செய்வார், பலரும் பார்த்துச் சிரிப்பார்கள். பார்க்க அழகாயிருக்கும் என்று நானும் நினைத்து அதே மாதிரி செய்யப் பழகிக் கொண்டேன்.


* நான் நாலாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது, கௌதம புத்தரின்

## கிடைக்குமா பதில்?

துணைமேயர் பதிலடி கொடுத்தார் சரி. 'தினமலர்' அவ்வப்போது மாநகராட்சி அவலங்களைப் புகைப்படம் போட்டே காண்பிக்கிறது. அவலங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் சுட்டிக்காட்டுபவர்களை மறுப்பது ஏன்?

**வட்டமேஜை**

கிருஷ்ணராஜகோபால், சென்னை - 92



# இனிதே தொடரும்...

சமீபத்தில் தமது எண்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடிய பொள்ளாச்சி நா. மகாலிங்கம் பற்றி பி.வி. கிரி எழுதிய 'மாமனிதர் மகாலிங்கம்' நூலிலிருந்து...

கதைப் பகுதியைப் படித்தேன். பிம்பிசார மன்னன் யாகத்தில் ஆட்டுக் குட்டியைப் பலியிடாமல் காப்பாற்றி, அதைத் தோளில் தூக்கி அணைத்த காட்சி என் கண்முன் நின்றது.

புத்தகத்தில் உள்ள கருணையே உருவமான கௌதம புத்தர் படத்தைப் பார்த்து, அம்மகானைப் பற்றிப் படித்து, நான் மாமிசம் உண்பதை விட்டு விட்டேன். எங்கள் சாதியில் மாமிசம் சாப்பிடுபவர்கள் அதிகம். எனவே, நான் மட்டும் எங்கள் வீதியில் மற்றவர்களுக்கு அபூர்வமாகத் தென்பட்டேன்.


• நிலப்பரப்பு சம்பந்தப்பட்ட விஷயம்தான் தேசியம் என்று எண்ணுவது தவறு. 'இந்தியன்' என்ற வார்த்தையில் இருக்கும் 'இந்து' என்ற சொல் மிக விசாலமானது; ஆழமானது. அது குறிப்பிட்ட எந்த விழிபாட்டு முறையையும் குறிப்பது அல்ல.

இந்து என்பது மிகப் பரந்த பொருளுடைய சொல். இந்த மண்ணிடம் உரிய பரம்பரையாக வந்துள்ள தேசிய வாழ்க்கை நீரோட்டத்தில் இருந்து பிரிக்க முடியாத உறுப்புகள் தாங்கள் என்று எண்ணுபவர்களும், 'இந்து' என்ற சொல்லுக்கும் 'இந்தியன்' என்ற சொல்லுக்கும் உட்பட்டவர்களாவர்.

— சுப்ர.பாலன்


ஜில்லு மல்லு
—கதிர்
ஸ்வீட் எடுத்துக்கோ
ஓ...உனக்கு பர்த்டே இல்ல? ஸாரி. மறந்தே போயிட்டேன்
நீ எல்லாம் ஒரு ஃப்ரெண்ட்!
இந்த சினிமா, அரசியல்காரங்கதான் பர்த்டே கொண்டாடறாங்கன்னா நீயுமா?
அதுக்கெல்லாம் ஒரு மனசு வேணும்டா...'
'நீ மட்டும் என்ன? வருஷா வருஷம் புளிப்பு மிட்டாய்தானே தர்றே?
நீ கஞ்ச பிசின்! எங்கே ட்ரீட் கேட்டுடு வாங்களோன்னுதானே கொண்டாட மாட்டங்கறே.
சட்டை வாங்கினா ட்ரீட்! பனியன் வாங்கினா ட்ரீட்! எதுக்கெடுத்தாலும் ட்ரீட்டா?
எட்டணா மிட்டாய் கொடுத்துட்டு ஐந்நூறு ரூபாய் கிஃப்ட் கறந்துடுவியே!
நீ... அதுவும் ஐந்நூறு ரூபாய்க்கு கிஃப்ட்! ஊருக்குள்ளே சொல்லாதே! ஏற்கெனவே வெயில் தாங்கலை!


கல்கி
20.4.2003
இதழுடன்
இலவச இணைப்பு
டைம் ஆச்சு!



“‘டைமே இல்லீங்க’ என்று சொல்லி, தோளைக் குலுக்கிக் கொள்வதுதான் லேட்டஸ்ட் ஃபேஷன். காலம் என்பது கடிகார முட்களுக்குள் அடங்கியது அல்ல; நமது மூடிய கைக்குள் சிறையிருக்கிறது. கெட்டியாகப் பிடித்துக் கொண்டால் அது நமக்கு வசமாகும். பிடியைத் தளர்த்தினால் விரலிடுக்குகள் வழியே நழுவி ஓ ஓ ஓ....டிவிடும்... அதிகம் நம்மை வருத்திக் கொள்ளாமலே, இந்த ‘விளையாட்’டில் ஜெயிக் கலாம்” என்கிறார் டாக்டர். சக்கரபாணி ஆனந்தன். சென்னை ‘விஜய் கார்மெண்ட்ஸ்’ நிறுவன தொழில்நுட்ப பொது மேலாளரான இவர், நேர நிர்வாகத் துறையில் இருபது வருட காலமாக உழைத்து வருபவர். சமூக சேவகரும் கூட!

**கா**லை ஐந்து மணிக்கு உடற்பயிற்சி, ஆறு மணிக்கு வழிபாடு, ஏழு மணிக்குப் படிப்பு... எட்டு மணிக்குச் சிற்றுண்டி... இது கிளாக் மேனேஜ்மெண்ட்! சின்னமுள் - பெரிய முள் பார்த்து அதன் கூடவே மூச்சிறைக்க ஓடுவது..

நம் பொருளாதாரத்தையும், உடல்நலத்தையும், குடும்ப மேன்மையையும் பாதிக்கும் விஷயங்களில், உடனுக்குடன் காரியங்களைச் செய்து முடிப்பது... அதையும் நன்றே, நறுக்கென்று செய்வது – இதுதான் டைம் மேனேஜ்மெண்ட்!



• சக்கரபாணி ஆனந்தன்

'காலம் பொன் போன்றது' என்பதை வகுப்பறையில் எடுத்துக்காட்டி விளக்கமும் தர நினைத்தார் பழனிச்சாமி வாத்தியார்.

சீனு, வினு என்ற இரண்டு மாணவர்களை அழைத்து, ஆளுக்கொரு துணிப் பையைக் கொடுத்தார். சமமான எடையைக் கொண்ட அந்தப் பைகளில் இருந்தவற்றை மேஜையின் மீது கொட்டச் செய்தார். சீனுவின் பையில் ஆயிரத்து நானூற்று நாற்பது சிறிய கோலிகள் இருந்தன. வினுவின் பையில் இருபத்து நான்கு பெரிய கோலிகள் இருந்தன.

ஒரே அளவுள்ள இரண்டு பீங்கான் ஜாடிகளை மேஜை மீது வைத்து, இருவரையும் கோலிகளால் ஜாடிகளை நிரப்பச் சொன்னார் வாத்தியார்.

ஆயிரத்து நானூற்று நாற்பது கோலி



களையும் ஜாடியில் மிகச் சரியாக நிரப்பி விட்டான் சீனு. மிச்சம் எதுவுமில்லை. ஆனால் வினுவால், பதினெட்டு கோலிகளை மட்டுமே சிரமப்பட்டு நிரப்ப முடிந்தது. ஆறு கோலிகள் மேஜை மீது இருந்தன.

நமக்குக் கிடைத்திருக்கும் காலமும் இது போலத்தான். பில்கேட்ஸுக்கும் ஒருநாளைக்கு 24 மணி நேரம் தான். நமக்கும் 24 மணி நேரம் தான். ஆனால் அவர் சீனு போல, ஆயிரத்து நானூற்று நாற்பது சிறு கோலிகளாக, நிமிஷக்கணக்கில் திட்டமிட்டு உழைக்கிறார்... ஆனால் நாமோ, இருபத்து நான்கு மணி நேரத்தையும், பெரிய கோலிகளாக்கி, வீணாக்கி விடுகிறோம். காலம் அற்புதமான இயந்திரம். அதைச் சரிவர இயக்கினால், காசு கொட்டும். புகழ் கிட்டும்! வானம் எட்டும்!

## நேரத்தை மிச்சப்படுத்த என்னென்ன செய்யலாம்?

- ஒரு மணி நேரம் சீக்கிரமாக எழுந்து

விடுவதுதான் பயிற்சியின் முதல் கட்டம். அதிகாலை நேரங்களில் ட்யூப் லைட் பளிச்சென்று எரியும். டீ.வி.யில் சிக்னல் மீட்டர் பிரமாதமாக இருக்கும். அது போலத்தான் நம் உடலும் மனசும்! பதற்ற மின்றி காரியங்கள் செய்ய, விடியற்காலை சீக்கிரமாக எழுந்து பழகுங்கள். வாரத்துக்கு ஏழு மணி நேரம் எக்ஸ்ட்ரா கிடைக்கும்.

- அன்றைக்குச் செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியங்களின் பட்டியலை, கொட்டை எழுத்தில், எழுதியே வைத்து விடுங்கள். நேற்றைய விஷயத்தின் மிச்சம் மீதி, ஃபாலோ அப், இருந்தால் அதுவும் இடம்பெற வேண்டும்.

- கடமைகளுக்கு, கிழமைகள் ஒரு போதும் தடையாக இருக்கக் கூடாது. அதனால் 'இன்னிக்கு சூலமாச்சே; அதுவும் கொழுத்த ராகுகாலம்' என்றெல் லாம் தள்ளிப் போட வேண்டாம். மிக முக்கியமான சுபகாரியங்களுக்கு மட்டும்



"என் மனைவி புடைவை வாங்கும் போது கூடப் போனால் நான் கடிகாரம் கட்டிக்க மாட்டேன்."

"பின்னே?"


"காலண்டர்தான் எடுத்துட்டுப் போவேன்."

---

சென்டிமென்ட்ஸ் பார்த்தால் போதும்.

- 'நேரமில்லை' என்று சொன்னால்,

## ‘மணி’ மொழி!



**அரைமணி நேரம்தானே என்று அற்பமாகக் கருதாமல் அதிலும் அற்புதமான காரியத்தைச் செய்பவனே வெற்றியாளனாகிறான் - கெதே**

---

“மனமில்லை” என்பதுதான் உண்மையான பொருள். நம்முடைய இயலாமையையும், ஆர்வக் கோளாறையும் மறைக்க நேரத்தின் மீது பழியைப் போடுவதை விட, அந்தக் காரியத்தில் உண்மையான ஈடுபாட்டை வரவழைத்துக் கொள்வதே புத்திசாலித் தனம். ஸ்டார்ட் லவ்விங் தி வர்க். அப்புறம் உற்சாகம் தானாக வரும்.

● பிரியமும், தேவையும் உள்ள எந்த வேலையையும் யாரும் தள்ளிப் போடுவதில்லை. ஒரு நல்ல சினிமா என்றால், வேலை எல்லாம் விட்டு விட்டு எப்படி உடனே குஷியாகக் கிளம்புகிறோம். அதற்கான மென்டல் ஃபோல்டு தானாகவே அமைகிறது. இந்த மனப்பக்குவம் எல்லாக் காரியத்திலும் அமைந்தால் வெற்றி நிச்சயமாகி விடும்.

● இப்போதெல்லாம் தனி மனித வெற்றி என்பது சாத்தியமில்லாத விஷயமாகி விட்டது. நம்முடன் இணைந்து வேலை செய்பவர்களும் ஒத்துழைத்தால் தான் சுலபமாக சாதிக்க முடிகிறது. எனவே, குடும்பத்தாரும் அலுவலக ஆட்களும் டைம் சென்ஸோடு நடந்து கொள்ள நீங்கள் அடிக்கடி உற்சாக ‘கீ’

கொடுத்தே ஆக வேண்டும். ஏனென்றால் டைம் ஸ்பிரிட்தான், டீம் ஸ்பிரிட் ஆகவும் அமையும்!



● 'ப்ரீ அரேன்ஜ்மென்ட் செக் லிஸ்ட்' என்பது மிக அத்தியாவசியமான ஒன்று. நம் வீட்டில் குடும்ப விழா நடக்கிறது. நிகழ்ச்சிப் பட்டியல், பொருள் பட்டியல் போட்டு ஒவ்வொன்றாக 'டிக்' செய்து முடிக்கிறோம். அது போலத்தான் எல்லா காரியமும். இரவு பத்து மணிக்கு ரயில் பிடிக்க வேண்டியவர், எட்டு மணிக்கு சாவகாசமாக பரண் ஏறி சூட்கேஸ் எடுப்பார். கைப்பிடி கழண்டிருக்கும். சாவி தொலைந்திருக்கும்! எப்பேர்ப்பட்ட டென்ஷன்? வீட்டில் கத்தி, குழந்தைகளைத் திட்டி, அக்கம் பக்கத்து வீடுகளில் ஏறி, இரவல் சூட்கேஸ் வாங்கி... ஆச்சு போச்சு என்று ரயில்வே ஸ்டேஷன் போய் நின்றால்... கடைசிப் பெட்டி 'X' குறியுடன் இருபதடி தூரத்தில் வேகமெடுத்திருக்கும்! எனவே முன் ஏற்பாடுகளுடன் திட்டமிடுதல் மிக முக்கியம்.

● திட்டமிடும் போது கொஞ்சம் புத்திசாலித்தனம் தேவை. "தி. நகரில்



"நோ, நோ. ஆபீஸ் நேரம் முடிஞ்ச பிறகும் தூங்கிட்டு, ஓவர்டைம் கேக்கறதெல்லாம் டூ மச்."

ஷாப்பிங் போயிட்டு, அப்படியே திருவான்மியூரில் மாமா வீட்டுக்குப் போயிட்டு..." என்று நேரம், தூரம் எல்லாம் யோசனை செய்யாமல் திட்டமிடக் கூடாது. ரொம்ப முக்கியமான பெரிய வேலை, அது சுலபமாக முடிந்தால் அதன் அருகேயே இருக்கக்கூடிய முக்கியமில்லாத சின்ன வேலை என்றுதான் பிளான் போட வேண்டும்.

● பெண்களுக்குச் சொல்வதென்றால், வாழைப் பூ உசிலி, கீரைக் குழம்பு, குழிப் பணியாரம் என்றெல்லாம் நச்சு நச்சான வேலைகளை ஒரே நாளில் மெனு லிஸ்டில் சேர்க்கக் கூடாது. வாழைப் பூ உசிலியா...? அப்படியானால் சிம்பிள் ரஸம் மட்டுமே! இதனால் ருசிக்கும் உத்திரவாதம், வேலையும் இழுத்துக் கொண்டே போகாது.

● வெட்டிப் பேச்சு, வீண் டெலிபோன் உரையாடல், போன்றவற்றைத் தவிர்த்தாலே போதும். நிறைய நேரம் மிச்சமாகும்.

● பல வீடுகளில், எப்போதும் எதையாவது தொலைத்துவிட்டுத் தேடிக் கொண்டேயிருப்பார்கள். இதனால் நேரம் வீணாகும். ஒவ்வொரு பொருளுக்கும் குறிப்பிட்ட ஓர் இடம், எடுத்த பொருளை


அதே இடத்தில் மீண்டும் வைத்தல், தவறாக யாராவது வைத்திருந்தாலும் மறுபடி உரிய இடத்தில் வைப்பது என்று பழக்கிக் கொள்ள வேண்டும்.

● 'நேர உணர்வு' என்பது ஒரே நாளில் வந்து விடாது. சிறு வயதிலிருந்தே இரத்தத்தில் ஊறவேண்டிய ஒழுக்கம்அது! நேரத்துக்குக் காரியங்களை முடிப்பவனின் உள்ளத்தில் சுயமதிப்பு அதிகமாக இருக்கும். அது வெற்றி இலக்கை அடைய உதவும். எனவே இரண்டு வயதுக் குழந்தையிலிருந்து காலந்தவறாமையைப் பயிற்சியாகவே கற்றுத் தர வேண்டும். அப்படித் தர வேண்டுமென்றால், நீங்களே டைம் சென்ஸோடு நடந்து காட்ட வேண்டும்.

● வாழ்க்கை என்பது வெறும் விநாடிகள் அல்ல. எல்லாமே வாய்ப்புகள்! மெழுகுவர்த்தி ஒளி வீசிக் கொண்டிருக்கும் போது, அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல், அது அணைந்து போனதும்,



## 'மணி' மொழி!



**கடிகாரத்தில் நேரத்தைப் பார்க்காமல் கடினமாக உழைத்ததால்தான் என்னால் புதிய பொருள்களைக் கண்டுபிடிக்க முடிந்தது.**

**- தாமஸ் ஆல்வா எடிசன்.**

---

புலம்புவதில் பயனில்லை.

**இவையெல்லாம் ஜஸ்ட் பாயிண்ட்ஸ்! நேரமிருப்பவர்களுக்கு என, இனி விரிவாகச் சில விளக்கங்கள்.**

**1. வரமும் அதுவே, சாபமும் அதுவே**

ஒரு குளத்தில் மீன்கள் இருந்தன. அவற்றில் பெரும்பாலானவை குளம் முழுவதுமே நீந்தி விளையாடி உல்லாசமாக இருந்தன. ஆனால் நான்கு மீன்கள் மட்டும் எப்போதும் குளத்தின் படித் துறைப் பக்கமாகவே இருக்கும். காரணம் அங்கு வரும் மக்கள் தங்கள் கால்ளைக் கழுவும்போது வெளிப்படும் அழுக்கே அந்த மீன்களுக்கு உணவானது. சிலர் பொரியை வாங்கி குளத்தில் வீசுவதையும் பழக்கமாகக் கொண்டிருந்ததால், 'படித் துறைப் பக்கமாகவே இருந்தால்தான் வசதி' என்றிருந்தன. ஒரு மூத்த மீன் அவற்றை எச்சரித்தது. "அவ்வப்போது நம் குளத்தின் மீது விழும் நிழலைப் பார்த்தால் இந்தப் பகுதியில் ஏதோ கொக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. எனவே நடுக்குளத்துக்கு வந்து விடுங்கள்" என்றது. நான்கு மீன்களும்

அதை அலட்சியம் செய்தன. மூத்த மீனுக்குத் தங்கள் மேல் பொறாமை என்றும், அதனால்தான் இப்படிக் கூறுகிறது என்றும் நம்பின. ஆனால் அந்தப் பகுதிக்குப் புதிதாக வந்து சேர்ந்திருந்த கொக்கு ஒன்று, கரைப் பக்கமாக ஒற்றைக் காலில் நின்றபடி கரையோரமாகவே நீந்திக் கொண்டிருந்த அந்த நான்கு மீன்களையும் அனாயாசமாகப் பிடித்து உண்டது.



நம் வாழ்விலும் படித்துறைகள் உண்டு. அதாவது பலவிதங்களில் சௌகரியமாகவே இருந்தாலும் சில சமயம் நம் வாழ்க்கையையே அது தொலைத்து விடவும் செய்யலாம். 'அது' என்றால்? தொலைபேசிதான்!

அவர் ஓர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர். அவரது பெரும்பாலான உறவினர்களும், நண்பர்களும் அவரை எங்காவது சந்தித்தால் ''என்னப்பா சிவராமா, உன்னைப் பார்த்தே நாளாச்சே'' என்பார்கள்.

என்றாலும் அவர்களின் வாக்கியத்தில் பெரிய குறை இருக்காது. காரணம் இது தான். நேரில் சென்று பார்ப்பதில்லை என்றாலும் தொலைபேசியின் மூலம் அவர்களுடன் ஒவ்வொரு வாரமும் ஒருமுறை



"அன்பு உடன்பிறப்புகளே, நான் சற்று அதிகமாகப் பேசியிருக்கலாம். அதற்காக உங்கள் கடிகாரம் ஓடுகிறதா என்று அடிக்கடி காதில் வைத்துப் பார்ப்பது நாகரீகமில்லை."

பேசுவதைப் பழக்கமாக்கிக் கொண்டிருந்தார் அவர்.

"நீங்க வீட்டுக்கே வரலியே! அடுத்த சன்டே தவறாம வந்துடணும்.... எல்லாரையும் அழைச்சுக்கிட்டுத்தான்" என்பது போன்ற வாக்கியங்களை சிவராமன் ஒருபோதும் பயன்படுத்துவதில்லை.

"உறவுகளும் நட்புகளும் வளர்க்கப்பட வேண்டியவைதான். ஆனால் அவர்களை அடிக்கடி நேரில் சந்திக்க வேண்டும் என்பதோ நீண்ட நேரம் பேச வேண்டும் என்பதோ தேவையில்லை. நேர விரயம்" என்பார் சிவராமன்.


அதே சமயம் வேறு சில விதிகளையும் நடைமுறைப்படுத்திக் கொண்டார். மிகக் குறைவான நேரம்தான் தொலைபேசியில் பேசுவது என்பது அவற்றில் முக்கியமான ஒன்று.

நேரடியாகச் சென்று சந்தித்தால் ஆகும் அதிக நேரத்தை, தொலைபேசி சந்திப்புகளின் மூலம் பெரிதும் குறைக்கலாம் என்பதால், நேரத்தைச் சேமிப்பதில் தொலைபேசி என்பது ஒரு பெரும் வரமா

கவே திகழ்கிறது.

ஆனால் வேறு சில கோணங்களில், அந்த வரமே சாபமாக மாறலாம். "எங்க, ஒரு காரியத்தை ஒழுங்காச் செய்ய விட்டாத்தானே? மாறி மாறி டெலிபோன் அடிச்சுக்கிட்டிருக்கு. பதில் சொல்லத்தான் நேரம் சரியா யிருக்கு" என்று அலுத்துக் கொள்வது இந்த வகையினர்தான்.

"ஒரு முக்கியமான மீட்டிங்ல(!) இருக்கேன். அப்புறமா நானே ஃபோன் பண்றேனே" என்பது போல் பதிலளிக்கலாமே. இந்த விதத்தில் செல்போன்கள் பெரிதும் உதவுகின்றன. யார் நம்மைத் தொலைபேசியில் அணுகி யுள்ளார்கள் என்பது நன்கு தெரிவ தால், அதை ஏற்றுப் பேசுவதும்; சத்தம் போடாமல் தொடர்பைத் துண்டித்து விடுவதும் நம் கையில்தான் இருக்கிறது.



## 2. எதை முதலில் செய்ய? எதை அடுத்துச் செய்ய?

ஒரு அழகான ஜாடி, குருவி ஒன்றின் கண்ணில் தென்பட்டது. "ஐ, இதற்குள்ளே எனக்குப் பிடித்த பொருள்களையெல்லாம் வைத்துக் கொள்ளப் போகிறேன்" என்றது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த குரங்கு ஒன்று வேகமாக வந்தது. சிறு சிறு கற்களை



அதற்குள் போட்டது. கற்களால் அந்த ஜாடி நிரம்பி விட்டது என்று தெரிந்தவுடன் ஜாடியை இலேசாகக் குலுக்கியது. இப்போது மேலும் சிறிது கற்களைப் போட்டது.

"ஜாடி நிறைந்து விட்டது. இனிமேல் உன்னால் எதையும் இதற்குள் போட முடியாது" என்றது ஆணவத்துடன்.

"யார் சொன்னது? இதில் மணலைப் போடலாமே" என்றது குருவி. உடனே குரங்கு அந்த ஜாடிக்குள் மணலைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டது. இப்போது ஜாடி கற்களாலும் மணலாலும் நிரம்பி விட்டது.

குரங்கு "இப்ப என்ன சொல்றே?" என்று கேட்டது. குருவி புன்னகையுடன் "தண்ணீரை இப்போதும் அந்த ஜாடிக்குள் ஊற்ற முடியுமே" என்றது.

குரங்கு வேகவேகமாக அதற்குள் தண்ணீரை விட்டது. தண்ணீரும் ஜாடியின் விளிம்பு வரை வந்து விட்டது. "இனிமேலாவது இதில் எதையும் போட முடியாது. போட்டால் உள்ளே இருக்கும் பொருள் வெளியே வரவேண்டியதுதான்" என்று படபடத்தது குரங்கு. உடனே குருவி புன்னகையுடன் அதற்குள் கொஞ்சம் சர்க்கரையையும் உப்பையும் போட்டது. தண்ணீர் ஒன்றும் வழிந்து விடவில்லை!

இந்தக் கதையைத்தான் நாம் நேரத்தை நிர்வகிக்கும் போது மனத்தில் அழுத்தமாகக் கொள்ள வேண்டும்.

நேரத்தைத் திட்டமிட்டுச் செலவழிக்கப் போவதாக சப்தம் போட்ட ஒரு நண்பர்

இப்படியொரு நிகழ்ச்சி நிரலைத் திட்டமிட்டார்.

காலை 8 மணி - பல் துலக்குதல்
8.10 - காபி குடித்தல்
8.20 - நாளிதழை வாசித்தல்
8.40 - குளியல்
8.50 - காலை உணவு
9.15 - ஈ-மெயிலில் தனக்கு வந்த கடிதங்களைப் பார்வையிடல்
9.40 - ஈ-மெயிலில் தனக்கு வந்த கடிதங்களுக்குப் பதில் போடுதல்.

இப்படித் தாம் திட்டமிட்டதை அப்படியே சிறிதும் பிசகாது நடத்திக் காண்பித்து விட்டு "டைம் மேனேஜ்மெண்ட் என் கைவசப்பட்டுடுச்சு" என்று சந்தோஷப்பட்டார்.


இது அல்ல நேரத்தைச் சரியான முறையில் நிர்வகிப்பது என்பது. எந்தத் திட்டமும் போடாமலேயே கூட மேற்கூறிய வழக்கமான வேலைகளை அவர்



"அந்த செல்போன்காரங்க ஒரு பெரிய சலுகை தர்றாங்களாம். ஒரு நாளிலே 24 மணி நேரத்துக்கும் அதிகமாகப் பேசினா கட்டணம் கிடையாதாம்."

செய்திருப்பார். இந்தத் திட்டத்தால் ஒருவேளை அரை மணி நேரம் நாளிதழை மேய்வதற்குப் பதிலாக, அதை இருபது

'மணி' மொழி!



**வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்கள் எதையும் செய்வதில்லை. சாதாரணச் செயல்களையே சற்று வித்தியாசமாகச் செய்கிறார்கள். அவ்வளவுதான்.**

**- ஷிவ் கெரா**

---

நிமிடங்களாகக் குறைத்திருக்கலாம். இப்படி சின்னச் சின்ன மாற்றங்கள் வேண்டுமானால் இருக்கலாம்.

ஆனால் நேரத்தைத் திட்டமிடும் போது அது நம் லட்சியத்துக்கு உதவுவதாக இருக்க வேண்டுமே தவிர உப்புச்சப்பில்லாத விஷயங்களைப் பட்டியலிடுவதற்காக இருக்கக்கூடாது.

ஓர் ஆங்கில நூலில் நான் படித்த அற்புதமான விஷயத்தை இங்கே பகிர்ந்து கொள்கிறேன். நாம் செய்ய வேண்டிய மற்றும் செய்யும் காரியங்களை நான்காகப் பிரிக்கலாம்.

1. முக்கியமானவை - அவசரமானவையும் கூட


2. முக்கியமானவை - ஆனால் அவசரமானவை அல்ல.

3. முக்கியமில்லாதவை - ஆனால் அவசரமாகச் செய்ய வேண்டியவை

4. முக்கியமில்லாதவை - அவசரமில்லாதவை.

இவற்றில் முதல் வகைக் காரியங்களை எப்படியும் செய்து விடுவோம். நான்காவது

வகைக் காரியங்களைத் தவிர்க்கப் பார்க்க வேண்டும். ஆனால், நாம் மிக மிக முக்கியமான கவனம் செலுத்த வேண்டியது இரண்டாவது வகைக் காரியங்களில்தான். 'இன்றே செய்ய வேண்டியதில்லை. சில நாட்கள் பொறுத்தும் செய்யலாம். ஆனால் கட்டாயம் அதைச் செய்தே ஆக வேண்டும்' என்பது போன்ற காரியங்களை உடனடியாகச் செய்யுங்கள். இப்படிச் செய்தால் முதல் வகைக் காரியங்கள் என்பது மிகவும் குறைந்து போய் இல்லாமலே போய்விடும்.



அதாவது மின் கட்டணம் செலுத்த இன்று கடைசி நாளென்றால் அது முதல் வகைக் காரியம். ஆனால் அதை நாம் சில நாட்களுக்கு முன்பே கட்டியிருந்தால் அது இரண்டாவது வகைக் காரியம். இன்று நமக்குப் பல்வேறு வேலைகள் இருந்தால், மின் கட்டணமும் கட்டியாக வேண்டும் என்ற நிலை டென்ஷனை உண்டாக்கும். எனவே, 'செய்தே தீர வேண்டிய ஆனால் அவசரம் என்றில்லாத' காரியங்களைச் செய்து முடித்து விட்டாலே வாழ்க்கையில் பல துன்பங்கள் குறையும். நேரம் நம் வசப்படும்.

எப்போதுமே கஷ்டமான (அல்லது நமக்கு எரிச்சலைத் தரக்கூடிய) ஆனால் அவசியமான காரியங்களை முதலில் செய்து முடித்து விடுங்கள். பிறகு ஓரளவு எளிதான காரியங்கள். கடைசியில் மிகச் சாதாரண செயல்கள். ஒரு விடுமுறை நாளைத் திட்டமிடும்போது கூட இதைப் பின்பற்றுங்கள். இதை விட்டுவிட்டு பிடிக்காத காரியத்தைக்



கடைசியாக வைத்துக் கொண்டால், அது வரை மனத்தின் மூலையில் ஒரு பாரம் இருந்து கொண்டே இருக்கும் என்பதோடு ஏதாவது அவசர நிலை ஏற்பட்டால் அதைச் செய்ய முடியாமலேயே போக லாம்.

நினைவிருக்கிறது இல்லையா? முதலில் கற்கள் (மிகக் கடினமான காரியங்கள்). பிறகுதான் மணலும் தண்ணீரும் சர்க் கரையும்.

### 3. இடவலமாகத் தலையாட்டுங்கள்

முயலுக்கும் ஆமைக்குமிடையே பந்த யம். யார் முதலில் இலக்கைத் தொடப் போகிறார்கள்? பந்தயம் தொடங்கியது. பாதி தூரம் வந்தபோது முயலுக்குக் கண்ணைச் சுற்றியது. அதற்கு முன் நாள் அதற்கு உறக்கமில்லை. எனவே கொஞ்ச நேரம் தூங்கலாம். எப்படியும் ஆமை மெதுவாகத்தாவே வரும். தூங்கி எழுந்த பிறகு ஓடினால் கூட நமக்குத்தான் வெற்றி என்று நினைத்தது. ஆனால் அடுத்த நொடியே அந்த எண்ணத்தைத் தள்ளிப் போட்டது. 'இன்னும் இரண்டு நிமிடங்கள் ஓடினால் இலக்கு வந்துவிடும். அப்புறம் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தூங்கலாமே' என்று எண்ணிச் செயல் பட்டது. வென்றது.

இதில் தனக்கு முதலில் தோன்றிய

அசட்டுத்தனமான எண்ணத்தை உதறித் தள்ளியதால்தான் - மறுதலித்ததால்தான் - முயலுக்கு வெற்றி கிடைத்தது. நமக்கும் மறுக்கத் தெரிய வேண்டும்.

என்னுடைய ஒரு நண்பர், மிகவும் நல்லவர். யார் எந்த உதவியைக் கேட்டாலும் மறுக்கத் தெரியாதவர்.

"உன்கிட்டே இந்தக் கேஸட் இருக்கா?" என்று யாராவது கேட்டால், நாம் என்ன சொல்வோம்? இருந்தால் ஆமாம் என்போம். இல்லையென்றால் இல்லையென்போம். கேட்பவர் தொந்தரவான நபர் என்றால் இருந்தால் கூட இல்லை என்போம். ஆனால் மேற்படி நண்பர் தன்னிடம் அந்தக கேஸட் இல்லையென்றால் கூட, "என்கிட்டே இல்லை. ஆனா எப்படியும் அதை நான் உங்களுக்கு வாங்கித் தரேன்" என்பார். பிறகு தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் அது இருக்கிறதா என்று கேட்டுப் பார்ப்பார்.



"ஏதோ வித்தியாசமான கடிகாரம் வாங்கித் தர்றதா நீ சொன்னது கடைசியில இதைத்தானா?"

---

வாங்கிக் கொடுப்பார் அல்லது சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு, "சாரி கிடைக்கலே" என்பார். (சில சமயம் அந்த நபர் அவருக்குப் பின்னால், "அன்னிக்கே



இல்லைன்னு சொல்லித் தொலைச்சிருக்கலாம். ஆசை காட்டி கழுத்தறுத்துட்டான்" என்றும் கூறியதுண்டு).

நேரத்தை மிச்சம் பிடித்து, அதைச் சரியான வழியில் பயன்படுத்தி நீங்கள் முன்னேற வேண்டுமானால், "இல்லை" என்று கூறப் பழகுங்கள்.

பிறருக்கு உதவும் மனப்பான்மை கூடாதா என்று படபடக்கிறீர்களா? உதவுங்கள். சக்திக்கு மீறிய உறுதிமொழிகள் வேண்டாம்.

உதவிகளுக்கு மட்டுமல்ல, வேறு விஷயங்களுக்கும் மறுப்பைத் தெரிவிப்பது நல்லது.

தினமும் யாராவது நண்பருடன் வெட்டிப் பேச்சு பேசியபடி அரைமணி நேரத்தைக் கழிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறீர்களா? இந்தப் பழக்கத்தை முதலில் மாற்றுங்கள்.


சினிமாவுக்குக் கூப்பிடுகிறார் நண்பர். போகப் பிடிக்கவில்லையென்றாலும் நண்பர் மனம் புண்படும் என்பதற்காகப் புறப்படுகிறீர்களா? வேண்டாம். மறுத்து விடுங்கள்.

பிடித்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பது வேறு. திட்டிக் கொண்டே சில நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பார்ப்பது தவறு. குறைந்தது இரண்டாவது வகை நிகழ்ச்சிகளைப் பார்ப்பதை உடனடியாக நிறுத்துங்கள்.

இதனாலெல்லாம் எவ்வளவு நேரத்தை மிச்சம் பிடிக்கலாம் என்பதை யோசித்துப் பார்த்தாலே உங்களுக்கு உண்மை நிலவரம் புரியும்.

**4. பட்டியல் போடுங்கள், சேர்த்துச் செய்யுங்கள்**

தெனாலிராமன் வகித்து வந்த மந்திரிப் பதவியை தன் தம்பிக்குக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினாளாம் பட்டத்து ராணி. கிருஷ்ணதேவராயர் சற்றே யோசித்தார். அப்போது அரண்மனை வாயிலை ஒரு கூட்டம் தாண்டிச் சென்று கொண்டிருந்தது. தனது மைத்துனனை அழைத்த கிருஷ்ணதேவராயர் "அவர்கள் யார் என்று பார்த்து வா" என்றார். வெளியே சென்று வந்த அந்த மைத்துனன், "கேட்டுப் பார்த்தேன். அவர்கள் வியாபாரிகளாம்" என்றான். உடனே அரசர், "என்ன வியாபாரம் செய்கிறார்கள்?" என்று கேட்டதும்



**நாளை நாளை என்று நாட்களைக் கடத்தாதீர்கள்.**
**இன்றைய நாளின் அருமையைத் தெரிந்தவர்கள் இதோ உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் - வெய்ஸி**

மைத்துனன் ஒரு கணம் திருதிருவென விழித்தான். பிறகு மீண்டும் வாசலுக்கு ஓடினான். சற்று நேரம் பொறுத்து மூச்சு



வாங்கத் திரும்பி வந்தவன், "எண்ணெய் வியாபாரமாம்" என்றான். "அப்படியா, எந்த ஊரிலிருந்து இங்கே வியாபாரம் செய்ய வந்திருக்கிறார்கள்?" என்று கிருஷ்ணதேவராயர் கேட்க, மீண்டும் விழித்து விட்டு ஓடினான் மைத்துனன். இப்படித் தொடர்ந்து அரசர் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் மைத்துனன் ஓடிச் சென்று, (ஒவ்வொரு முறையும் அதிக தூரம் ஓட வேண்டியிருந்தது - ஏனென்றால் அவர்கள் மேலும் அதிகத் தொலைவு சென்றிருப்பார்களே) அந்த விவரத்தை அறிந்து வந்தான். அரசிக்கு ஒரே மகிழ்ச்சி. 'நீங்கள் கேட்ட ஒவ்வொரு விவரத்தையும் என் தம்பி அறிந்து கொண்டு வந்து சரியாகச் சொல்லி விட்டான். எப்போது அவனுக்கு மந்திரிப் பதவியைத் தரப் போகிறீர்கள்?

கிருஷ்ணதேவராயர் புன்னகைத்தார். அப்போதுதான் தெனாலிராமன் அரசவைக்குள் நுழைந்து கொண்டிருந்தான். இப்போதும் வாசற்புறமாக குதிரைகளில் சிலர் சென்று கொண்டிருந்தனர். மன்னன் தெனாலிராமனைப் பார்த்து, "அவர்கள் யார் என்று பார்த்து வா" என்றார். தெனாலிராமன் வாசலுக்கு விரைந்தான். சில நிமிடங்களுக்குப் பிறகு திரும்பி வந்தான். "மன்னா, அவர்கள் கடம்ப

நாட்டு வியாபாரிகள். நம் ஊரில் அழகான தங்க நகைகளை விற்கலாம் என்று வந்திருக்கிறார்கள். தெற்கு வீதியில் உள்ள சத்திரத்தில் தங்கப் போகிறார்கள். மொத்தம் பதின்மூன்று பேர் வந்திருக்கிறார்கள். நாளைக்கு அரண்மனைக்கு வந்து உங்களிடம் நகைகளைக் காட்டி விற்கப் போகிறார்களாம். மீதமுள்ள நகைகளை அதற்கு அடுத்த நாள் பொது மக்களுக்கு விற்பதாகத் திட்டம்" என்றான். ராணி அசந்து போனாள். ராஜா அர்த்தத்துடன் சிரித்தார்.

தெனாலிராமனின் புத்திசாலித்தனம் நமக்கும் தேவை. உடல் உழைப்பு மட்டுமல்ல, மிகுந்த நேரத்தையும் அவன் மிச்சப்படுத்தியிருக்கிறான் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.


"அடடா, கடைத்தெரு வரைக்கும் போனேன். இதை வாங்க மறந்துட்டேனே!" என்று சுயபச்சாதாபப்படும்



நபர்கள் பலரை நாம் சந்தித்திருப்போம். ஏன், நாமே அப்படி உச்சுக்கொட்டியிருப்போம்.

கடைத்தெருவில் ஒரு பொருளை வாங்க வேண்டும் என்றால் உடனடியாகப் போக வேண்டாம். ஆனால் வாங்க வேண்டிய பொருளை ஒரு சிறு நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இப்படியே அவ்வப்போது தோன்றும்

## 'மணி' மொழி!



**விடிந்த பின்னும் தூங்கியவன், வெற்றி பெற்றதாகச் சரித்திரம் இல்லை. - ஸ்விஃப்ட்**

---

வாங்க வேண்டிய பொருள்களை அதில் குறித்துக் கொள்ளுங்கள். திடீரென்று ஒருநாள் உடனடியாகத் தேவைப்படும். இப்போது கடைத் தெருவுக்குச் சென்று அந்தப் பொருளையும், ஏற்கெனவே நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்திருந்த பொருள்களையும் வாங்கி வாருங்கள்.

கடைத் தெருவுக்கு அருகே நாம் செய்ய வேண்டிய வேறு காரியங்களும் இருக்கலாம். அவற்றையும் குறித்து வைத்துக் கொண்டால், ஒரே நடையில் அத்தனை காரியங்களையும் முடித்துக் கொள்ளலாம்.

ஆக திட்டமிடல் என்பது நேரம் தவறாமைக்கு மிக மிக முக்கியமான அடிப்படை அம்சமாகும்.

பல வீடுகளிலும் நடப்பதுதான் இது. குடும்பத் தலைவி காய்கறிகளை நறுக்கிக் கொண்டே தொலைக்காட்சி நிகழ்ச்சியை ரசித்துக் கொண்டிருப்பார். சாப்பிட்டுக் கொண்டே புத்தகம் படிப்பவர்கள் உண்டு.

சென்னையிலிருந்து டெல்லிக்கு ஒரு முறை பயணம் செய்தபோது எதிரில் இருந்தவர் செய்த காரியங்களைக் கண்டு பிரமித்துப் போனேன்.

ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு அடுத்து வரும் நாட்களில் என்னென்ன செய்ய வேண்டும் என்பதற்கான திட்டம் தீட்டினார். ஒரு சிறிய இலக்கிய நூலை முழுவதுமாகப் படித்து முடித்தார். ஆசிரியராக இருந்திருக்க வேண்டும். கையோடு கொண்டு வந்திருந்த மாணவர்களின் தேர்வுத் தாள்களைத் திருத்தினார்.

நடுநடுவே சக பயணிகளிடம் அவர்கள் போகும் இடம் குறித்து விசாரித்து அந்த இடங்களைப் பற்றித் தெரிந்து கொண்டார். இதுதான் நேரத்தை புத்திசாலித்தனமாக செலவு செய்வது என்பது.


வாழ்க்கையில் பல இடங்களில் நாம் காத்திருக்க நேருகிறது. அது பஸ் நிறுத்தமாக இருக்கலாம், டாக்டரின் க்ளினிக்காக இருக்கலாம், ரயில்வே டிக்கெட்டை புக் செய்யும் அலுவலகமாக இருக்கலாம். எனவே எப்போதும் கையோடு படிக்க



வேண்டிய ஒரு புத்தகத்தையோ, திட்டமிடுவதற்கு ஒரு நோட்டுப் புத்தகத்தையோ கட்டாயம் வைத்திருங்கள். காத்திருக்கும் நேரத்தை வீணடிக்காமல் அற்புதமாகச் செலவழிக்கலாம்.

## 5. பிறரை நம்புங்கள்

கிளி ஒன்று சக பறவைகளுக்கு விருந்து வைத்தது. "தெருமுனையில் செத்த எலி



ஒன்றைப் பார்த்தேன். அதைப் போய் எடுத்து வருகிறேன்'' என்றது காக்கை. "மூச். நீ என் விருந்தினன். நான்தான் எடுத்து வருவேன்'' என்றபடி கிளி பறந்தது. தனக்குப் பிடிக்கவில்லையென்றாலும் காக்கைக்காக அந்த எலியைக் கொத்திக் கொண்டு வந்தது. இப்படியே ஒவ்வொரு பறவையின் விருப்பத்திற்கேற்ப பலமுறைகள் நீண்ட தூரம் பறந்து சென்று, அவற்றிற்கு விருப்பமான ஐட்டங்களைக் கொண்டு வந்தது. சக கிளிகள் தாங்கள் சென்று இவற்றைக் கொண்டு வருவதாகக் கூறியும் அந்தக் கிளி அனுமதி தரவில்லை. இப்படி அதிகப் படியாக உழைத்த அந்தக் கிளி, விருந்து தொடங்கும் நேரத்தில் மயக்கம் போட்டு விழுந்தது.


"உலகிலேயே என் ஒருவனால்தான் எல்லா வேலைகளையும் சிறப்பாகச் செய்ய முடியும்'' என்று நீங்கள் நினைத்தால், உங்களை நினைத்துப் பரிதாபம்தான் பட முடியும். இப்படிப்பட்டவர்கள் எல்லா வேலைகளையும் தாங்களே இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வார்கள். இதனால் ஏற்படும் நன்மைகளை விட தீமைகளே அதிகம்.

உங்கள் பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டது. சத்திரம் பார்க்க வேண்டும். உடனே வரிந்து கட்டிக் கொண்டு நீங்களே எல்லா கல்யாண சத்திரத்துக்கும் விசிட் செய்ய வேண்டும் என்பது அவசியமில்லை. யாரையாவது இதற்கு

அனுப்பலாம். அவற்றில் எங்கெங்கே குறிப்பிட்ட தேதிகளில் காலியாக இருக்கிறது என்பதை அறிந்து கொண்டு, அவற்றுக்கு மட்டும் நீங்கள் சென்று பார்த்து விஷயத்தை முடித்துக் கொள்ளலாமே.

ஒரு நூலின் ஒரு அத்தியாயத்தை பத்து நண்பர்கள் ஜெராக்ஸ் எடுத்துக் கொள்ளத் தீர்மானித்தார்கள். நகல் எடுப்பவரிடமே, "இந்தப் பத்தையும் தனித்தனி செட்டா ஸ்டேப்பிள் பண்ணிக் கொடுத்துடுங்க" என்று கூறி விட்டால் கணிசமான நேரத்தை மிச்சம் பிடிக்க முடியுமே.

எனவே பிறரால் செய்யக்கூடிய காரியங்களை அவர்களைச் செய்ய விடுங்கள். அப்போதுதான் நீங்கள் மட்டுமே சிறப்பாகச் செய்யக்கூடிய, உங்கள் லட்சியத்துக்கு உதவக்கூடிய செயல்களில் ஈடுபட உங்களுக்குப் போதிய அவகாசம் இருக்கும்.



### 6. ஷைலக்காக இருக்காதீர்கள்

புதிதாகத் திருமணமாகிப் புக்ககத்திற்கு வந்த பெண் ஒருத்தி, தானே அன்று சமைப்பதாகக் கூறினாள். சமைக்க வேண்டிய ஐட்டங்களின் பட்டியலை மாமியார் கூறியதும் அவளுக்கு மயக்கமே வந்து விட்டது. மனம் வெறுத்துப் போய் வேண்டாவெறுப்பாகச் சமைக்கத் தொடங்கினாள். அப்போது அங்கு வந்த

அவளது மாமியார், 'மருமகளே, கொஞ்சம் அதிகப்படியாகவே சமைத்து வை. உன் அப்பா அம்மாவும் இங்கே சாப்பிட வராங்க' என்றாள். உடனே மருமகள், 'இன்னும் ஏதாவது ஐட்டம் பண்ணட்டுமா?' என்றாளாம்.

இந்த மருமகள்தான் மனித மனம்.

ஷேக்ஸ்பியர் எழுதிய வெனிஸ் நகர வியாபாரி நாடகத்தைப் படித்திருப்பீர்கள். அதில் மிகவும் கொடுங்கோலனாக வருவான் ஷைலக் என்பவன். கொடுத்த கடனை குறித்த தேதிக்குள் கொடுக்கவில்லையென்றால், அவர்கள் உடலிலிருந்து தசையை வெட்டி எடுத்துக் கொள்வதாகப் பத்திரத்திலேயே எழுதி வாங்கிக் கொள்வானாம்.

அது போல மிகவும் கண்டிப்போடு திட்ட மிடாதீர்கள். அதாவது சிலர் ''10.00 மணியிலிருந்து 10.06 வரை இந்தக் காரியம். 10.06 லிருந்து 10.21 வரை இந்தக் காரியம்'' என்பது போல் திட்டமிடுவார்கள். இவ்வளவு கறாராக இருக்க வேண்டாம். சொல்லப் போனால் ஒரு செயலுக்கும் அடுத்ததற்கும் இடையே இரண்டிலிருந்து ஐந்து நிமிடங்கள் வரையாவது இடைவெளி கொடுங்கள். அப்போதுதான் அது இயல்பான, நடைமுறையில் பின்பற்றக் கூடிய நிகழ்ச்சி நிரலாக இருக்கும்.

ஏதாவது தொலைபேசி அழைப்பு வந்து நீங்கள் பேச வேண்டியிருக்கலாம். திட்டமிட்ட செயலை முடிக்க இரு நிமிடங்கள் அதிகமாகலாம். ஏன் இயற்கையின் அழைப்பு கூட வரலாம். ஆக இவற்றிற்கெல்லாம் திட்டத்தில் சிறிது நேரத்தை மொத்தமாக ஒதுக்கி விடுவது தான் நல்லது.


அது மட்டுமல்ல, உங்களுக்குப் பிடிக்காது, ஆனால் செய்தே தீர வேண்டிய ஒரு காரிய மென்றால், அதைச் செய்து முடித்ததும் உங்களுக்கு நீங்களே ஒரு வெகுமதி

கொடுத்துக் கொள்ளுங்கள். அந்த வெகுமதி என்பது ஒரு சாக்லெட்டாக இருக்கலாம். உங்களுக்குப் பிடித்த டீ.வி. நிகழ்ச்சியாக இருக்கலாம். அல்லது காற்றாட எதுவும் செய்யாமல் மொட்டை மாடியில் நின்று கொண்டிருப்பதாக இருக்கலாம். இந்த வெகுமதியின் காரணமாகவே செய்ய வேண்டிய காரியங்களை விரும்பிச் செய்வீர்கள் - சமையலில் ஈடுபட்ட மருமகளைப் போல.

### 7. நேரத்துக்குச் செல்ல...


யானை ஒன்று கம்பீரமாக நடந்து ஒட்டகம் இருக்குமிடத்துக்கு வந்து சேர்ந்தது. "இப்போது மணி ஐந்து. வாக்களித்தபடி நான் சரியான நேரத்துக்கு விருந்துக்கு வந்து சேர்ந்து விட்டேன்'' என்றது. ஒட்டகம் சிரித்தது. 'நேரம் சரிதான். ஆனால் நான் குறிப்பிட்டது நேற்று மாலை ஐந்து மணிக்கு. இவ்வளவு தாமதமாக வந்ததினால் இன்று உனக்கு விருந்து கிடையாது'' என்றது. யானைக்கு ஏமாற்றம்.

"சரியான நேரத்துக்குப் போகணும்னுதான் நினைக்கிறேன். ஆனால் ஒவ்வொரு முறையும் பத்து நிமிடமாவது லேட்டாகத்தான் போகும்படி ஆகிறது''. இப்படி ஓர் ஆதங்கம் உங்களிடம் இருக்



**'மணி' மொழி!**

**சோம்பல் என்பது இளைப்பாறுதல் அல்ல. அது வேலையை விட அதிகக் களைப்பு தரும்.**
**- தாமஸ் புல்லர்**



கிறதா? நீங்கள் உடனடியாகப் பின்பற்ற வேண்டிய சில விஷயங்கள் உண்டு.

ஓரிடத்திற்குப் பதினோரு மணிக்குச் செல்ல வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். உங்கள் மனத்தில் "பதினோரு மணிக்கு அங்கு இருக்க வேண்டும்" என்பதைப் பதியவைத்துக் கொள்ளக் கூடாது. அப்படிப் பதியவைத்துக் கொண்டால் சில நடைமுறைச் சிக்கல்கள் எழுக் கூடும்.

எனவே என்ன செய்வது? இதோ ஒரு எளிய வழி. "பத்தரை மணிக்குக் கிளம்ப வேண்டும்" என்பதை மட்டும் மனத்தில் பதியவைத்துக் கொள்ளுங்கள். அப்போது ஐந்து நிமிடம் தாமதமானாலும் உங்கள் நடவடிக்கைகளில் ஒரு வேகம் இருக்குமே தவிர, "எப்படியும் சரிகட்டிக் கொள்ள லாம்" என்று சமாதானம் செய்து கொள்ள மாட்டீர்கள்.

ஆக உங்கள் கவனம் கிளம்பும் நேரத்திலேயே இருக்க வேண்டும்.


பல வீடுகளில் கடிகாரத்தை ஐந்தி லிருந்து பத்து நிமிடங்கள் ஃபாஸ்டாக வைத்திருப்பார்கள். இதில் தவறில்லை. என்னதான் மனம் அதிலிருந்து ஐந்து - பத்து நிமிடங்களைக் கழித்துக் கொண்டு சரியான நேரத்தை நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் என்றாலும், கடிகாரத் தைப் பார்த்தவுடனேயே ஓர் உலுக்கல்

ஏற்பட்டு கொஞ்சம் விரைவாக நம் காரியங்களைச் செய்து முடிக்க முயற்சிப் போம்.

ஸ்கூட்டரிலோ காரிலோ ஓரிடத்துக்குச் செல்கிறீர்கள் என்றால், சற்று அதிக தூரமாக இருந்தாலும் போக்குவரத்து மற்றும் சிக்னல்கள் குறைந்த, நல்ல சாலையைத் தேர்ந்தெடுப்பது நல்லது. கூட்டிக் கழித்து பார்க்கும் போது உங்களுக்கு இதில் ஓரளவாவது நேரத்தைச் சேமிக்க முடியும் என்பது தெரியவரும்.

### 8. ஆழம் இருக்கட்டும்

"என்னங்க, இன்னைக்கு நான் கரண்ட் பில் கட்டிட்டு வந்தேன். எங்கம்மா வீட்டுக்கு வந்திருந்தாங்க. நம்ம பையன் கணக்கிலே நூத்துக்கு நூறு. ஆனா இங்கிலீஷ் தேர்விலே கோட்டை விட்டுட்டான்''– மனைவி இப்படி அடுக்கிக் கொண்டே போக, அப்போதுதான் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்த கணவனுக்கு ஆச்சர்யம். நான் வந்ததைக் கூட கவனிக்காமல் யாரிடம் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறாய்?'' என்றான். "இந்தச் சுவரிடம்தான். உங்களிடம் பேசுவதும்



## 'மணி' மொழி!

**காலம் தவறாமல் காரியம் செய்வது, செல்வத்தைச் செல்ல விடாமல் கட்டிப் போடும் கயிறு!**
**- திருக்குறள்**

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki issue Dated 20.4.2003



இதனிடம் பேசுவதும் ஒன்று தானே" என்றாள் அந்த மனைவி விரக்தியுடன்.

உங்கள் குடும்பத்தினரோடும் நேரத்தைச் செலவழிக்க வேண்டியிருக்கும். இல்லாவிட்டால் அம்மா வருத்தப்படுவாள். மனைவி கோபிக்கலாம். குழந்தை டூ விடலாம்.

இந்தச் சிக்கலை எப்படிச் சமாளிப்பது? உங்கள் இலட்சியத்துக்குத் தேவையான செயல்களில் ஈடுபடுவதற்குத்தான் நீங்கள் அதிக நேரத்தைச் செலவழிக்க வேண்டும்.

ஆனால் அதே சமயம் குடும்பத்தினரை அலட்சியப்படுத்தக் கூடாது. இந்தச் சமயத்தில் ஒரு மனோதத்துவத்தை அறிந்து கொள்வது நல்லது. உங்கள் குடும்பத்தினரோடு எவ்வளவு நேரம் செலவழிக்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. அப்படி இருக்கும் நேரத்தை எப்படி செலவழிக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். 'குவாலிடி டைம்' என்று சொல்வது இதைத்தான்!

தொகுப்பு : ஜி.எஸ்.எஸ், அனுராதா சேகர்

ஜோக்ஸ் : குல்லூ

'மணி' மொழி : ஆர். லலிதா

வீட்டின் அழகு கதவில் தெரியும் !

Now Flat Buyers insist on

# MAYURAM
## TIMBER DOORS



because

**DOOR**
is not a
product of
mere Carpentry.
Kiln Seasoning
and
Pressure
Treatment
of Timber
is a
pre-requisite

Contact:

**MAYURAM TIMBER & GENERAL TRADING CORPN.**

H.O.: 83, G.S.T.Road, Chennai - 45. ☎:236 8297/238 1281.

Showroom: 13, Rameswaram Road, T.Nagar, Chennai - 600 017. ☎:2434 5207

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka

# ADYAR NATURE CURE CENTER

## SPECIALISED NATUROPATHY TREATMENT FOR ARTHIRITIS, ASTHMA, AND OBESITY



*In the words of a satisfied customer - Sidharth Iyer from Australia - "I was drawn to the Adyar Nature Cure Center more out of curiosity than seeking remedy for any ailment. However I was soon a converted admirer of 'nature cure'! I was cured of my lingering pain in my left foot by the expert medical team. My special thanks to the team of highly dedicated and motivated doctors and staff who did a commendable job. Any institute should be proud to have such a wonderful team who work with a smile even under great stress."*

Mr. Sidharth Iyer, No. 70, Grey Spence Ave, West Pennet Hills, N.S.W. Sydney - 2146, Australia. E-mail:iyersid@hotmail.com

### ARTHIRITIS

● Effective naturopathy treatment for shoulder joint ● Cervical spondilitis/spondylosis ● Lumbago ● Pain in pelvic bone- femural head region ● Calcaneal spur ● Treatment is external and given under the guidance of qualified doctors with the assurance that there will be no side effects whatsoever

### ASTHMA

● Patients with dyspnea, wheezing, chest tightness and all respiratory difficulties with cough and rhinitis are treated

### OBESITY

● Weight reduction without any crash diet programme or internal medicine is made possible with a steady weight loss of 5-6 kgs per month

### FACILITIES

● A/C and non A/C rooms ● Rooms with colour TV and phone ● Only vegetarian food is served ● Advance reservation is necessary.

For other Diseases also you can consult us.

அடையார் நேச்சர் கியூர் சென்டர்

**ADYAR NATURE CURE CENTER**(TM) Regd. Hospital

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 600 020. INDIA.
Phone: 91-44 - 2441 3399, 91-44 - 2440 2470. Tele Fax: 91-44 - 2491 6650
www.adyarnaturecure.com E-mail: adyarnaturecure@yahoo.com.